
# திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"




திருச்செந்தூர் முருகப்பெருமான்

9 - JAN 1965
MADRAS

மாலை 7] குரோதி மார்கழி—ஜனவரி 1965 [மணி 4

சென்னை அரசாங்க அறநிலையப்



திருச்செந்தூர்ச் சுப்பிரமணிய சுவாமி கோயிலைச் சேர்ந்த பசுமடம் ஒன்றுக்கு நமது அறநிலையப் ஆணையர் திரு. M. S. சாரங்கபாணி முதலியார், B.A., B.L., அவர்கள், கால்கோள் விழா நிகழ்த்துதல் (26-11-'64).

## பொருள் அடக்கம்


1. சிவஞான சித்தியார்.
2. சத்தியத்திற்கு உயிர்கொடுத்த சான்றோர்.
3. தொண்டின் நெறி சிறக்க.
4. மானம்.
5. வைஷ்ணவ குருபரம்பரை.
6. கோயில்.
7. நீறணி அம்பலவன்.
8. திருஞானசம்பந்தர் பிள்ளைத் தமிழ்.
9. சங்காபிஷேகம்.
10. இல்லறம் நல்லறம் ஆகும் வழி.
11. தமிழர் கண்ட அறுமுகன்.
12. இருள் நீங்கி நின்றேன்.
13. பரமாசார்யாளும் பாவைப்பாடல்களும்.
14. உயிர்ப்படக்கம்.
15. மூன்று சிவத்தளிகள்
16. தஞ்சாக்கூர்.



ஆண்டுச் சந்தா ரூ. 10/-    தனி இதழ் விலை ரூ. ஒன்று


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் "திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

ஓர் ஆண்டின் நடுவில் எந்தமாதத்திற் சேர்ந்தாலும், அடுத்த ஆண்டில் அந்த மாதம் வரையில், 12 இதழ்கள் அனுப்பப்பெறும்.

ஓர் ஆண்டிற்குக் குறைந்த சந்தாத் தொகை ஏற்கப் பெறுவதில்லை.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவறுமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.

திருக்கோயில்
திங்கள் வெளியீடு

மாலை 7] குரோதி மார்கழி-ஜனவரி 1965 [மணி 4

# சிவஞான சித்தியார்

(பிரமாண இயல்)

**முன்னுரை :**

தமிழ் மொழியின்கண் எத்தனையோ வகையான பற்பல நூல்கள் இருப்பினும், அவைகள் பலவற்றுள்ளும் மிகவும் சிறப்பும் முதன்மையும் வாய்ந்தனவாகத் தேர்ந்தெடுத்து, "தண்டமிழின் மேலாந் தரம்" எனச் சிறப்பாகக் குறிப்பிட்டுப் போற்றத் தகுந்த நூல்களுள் **சிவஞான சித்தியார்** என்பது ஒன்று. தமிழகத்துச் சைவ நன் மக்களின் சமய தத்துவக் கொள்கைகளை விளக்கும் தலைசிறந்த நூலாகத் திகழ்வது சிவஞான சித்தியார் எனலாம்.

சிவஞான சித்தியார் இலக்கண இலக்கிய நலங்களும், தருக்க நெறி முறைகளும், தத்துவக் கொள்கைகளின் திட்ப நுட்பங்களும் செறிந்தொளிர்ந்து, கவிதையினிமை மிக்குச் சுவை துளும்பித் திகழ்வதாகும். தமிழ்மொழிப் புலமைத் துறையில் "**நூலாருள் நூல்வல்லார்**" எனச் சிறந்து பிறங்க விரும்பும் எவரும், இந்நூலினை இன்றியமையாது கற்றுணரற்பாலர் ஆவர்.

**சித்தியார் சுபக்கம் :**

இத்தகைய அரும்பெருஞ் சிறப்பிற்றாகிய சிவஞான சித்தியார் 'பரபக்கம்' 'சுபக்கம்' என்னும் இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. அவற்றுட் **சுபக்கம்** என்னும் பகுதியில் **பிரமாண இயல்** (Epistemology) என்னும் ஒரு பிரிவு அமைந்துள்ளது. பிரமாணம், அளவை, அறிகருவி என்பன ஒரு பொருட் சொற்கள் (Synonyms) ஆகும்.

**அளவையின் முதன்மை :**

உலகத்துப் பருப்பொருள்களை யெல்லாம் வரையறை செய்து உணர்தற்கு எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் அளவைகள் அமைந்துள்ளன. அதுபோலவே, உலகத்தில் நாம் நம் அறிவினாற் சிந்தித்து ஆராய்ந்தறியும் பொருள்களை வரையறை செய்து உணர்வதற்கு ஒரு சில அளவைகள் (பிரமாணங்கள்) தேவைப்படுகின்றன.

உலகத்துப் பொருள்களை அளந்து அறிவதற்கு முன்னர், அவற்றை அளப்ப

தற்குப் பயன்படும் அளவைக் கருவிகள் (Measuring instruments) குற்றமற்றன வாக இருக்கின்றனவா என்று, நாம் முதற்கண் உறுதி செய்து கொள்ளுகின் றோம். அதனைப் போன்றே, சிந்தித்து உணரத்தக்க தத்துவப் பொருள்களை ஆராய்வதற்கு முன்னரும், அவற்றை ஆராய்ந்து அளந்து உணர்ந்து கொள்ளு தற்குப் பயன்படும் அறிகருவிகள் (பிர மாணங்கள்) பற்றி உறுதி செய்து கொள்ளுவது, இன்றியமையாததாக இருக்கின்றது.

### அளவையின் சிறப்பு :

கண் இல்லாத குருடன் இயற்கையழ குக் காட்சிகளைக் கண்டு இன்புற முடி யாதவாறு போலவும், கேட்கும் திறன் இல்லாத செவிடன் இனிய இசை நலங்க ளைக் கேட்டுணர்ந்து மகிழ இயலாதவாறு போலவும், பிரமாண இயல் நூல் (Epistemology) பற்றிய அறிவு ஒரு சிறிதாயி னும் எய்தப் பெறாத ஒருவன் உயரிய நுண் பொருள்கள் குறித்து, நன்கினிது சிந்தனை செய்யவும், காரண காரிய முறைகளைத் திறம்பட ஆராய்ந்து தெளிந்துணரவும், போதிய ஆற்றலும் வாய்ப்பும் பெறாதவன் ஆகின்றான். இதனையே,

> "பண்ணினார்க்கு இல்லாத பாட்டின் பயன் போன்றும்
> கண்ணினார்க்கு இல்லாக் கவின்போன்றும்— எண்ணிலா
> அஞ்சொல் அளவை அறியா தவர்க்கில்லை
> செஞ்சொல் உணர்வின் சிறப்பு"

என வழங்கும் பழம் பாடல் இனிது உணர்த்துகின்றது. இதுபற்றியே பதி பசு பாசம் (இறை-உயிர்-தளை) என்னும் முப்பொருள்கள் பற்றி ஆராய்ந்து காட்டி அறிவுறுத்துதற்கு முன்னர், அதற்குப் பயன்படும் அறிகருவிகள் (பிர மாணங்கள்) பற்றிய ஆராய்ச்சியைச் **சிவஞான சித்தியார்,** சுபக்கத்தின் தொடக்கத்திலேயே அடிப்படையாக எடுத்துக் கொள்ளுகின்றது.

### மாக்சு முல்லர் :

இங்ஙனம் தத்துவ ஆராய்ச்சியில் தலைப்படுதற்கு முன்னரே, பிரமாணங் கள் பற்றியும் வரையறை செய்து, நல்ல அடிப்படையினை அமைத்துக் கொள்ளு தலின் சிறப்பினை, மேலை நாட்டறிஞர்கள் வியந்து போற்றியுள்ளனர். பேரறிஞர் **மாக்சு முல்லர்** என்பவர், "இந்தியத் தத் துவ நூல்களின் இச் சிறப்பியல்பினை உணர்ந்து கடைப் பிடித்திருந்தால், **யூத-இசுலாமிய-கிறித்தவ** சமய தத்துவ நூல் களில், வேண்டாத விவாதங்கள் எவ்வ ளவோ பல குறைந்து, நலம் பயந்திருக் கும்" **(1)** எனக் குறிப்பிடுகின்றார்.

### நுண்மாண் நுழைபுலம் :

எனவே, சைவ சித்தாந்த நூல்களில் மிக்க சிறப்பும் விரிவும் உடைய சிவ ஞான சித்தியார் நூலின், தத்துவப் பொருள் ஆராய்ச்சியில் தலைப்படுதற்கு முன்னரே, அதற்கேற்ற நல்ல அடிப் படையைத் திறம்பட அமைத்துக் கொள்ளும் வகையில், '**பிரமாண இயல்**' என்னும் இப்பகுதியை மிக்க விரிவும் இல்லாமல், மிக்க சுருக்கமும் இல்லாமல்

---

**(1)** "Such an examination of the authorities of human knowledge (Pramanas) ought, of course, to form the introduction of every system of philosophy, and to have clearly seen this is, as it seems to me, **a very high distinction of Indian philosophy.**

How much useless controversy would have been avoided, particularly among **Jewish, Mohammedan,** and **Christian philosophers,** if a proper place had been assigned in limine to the question of what constitutes our legitimate or our only possible channels of knowledge, whether perception, inference, revelation, or anything else !

In thus giving the **Noetics** the first place, the thinkers of the East seem to me again **superior to most of the philosophers of the West.**"

—**Prof. F. W. Max Muller.**

தக்கவாறு, வேண்டிய அளவிற்குக் குறையாமலும், அதனினும் மிகக் கூடி விடாமலும், அழகுற வகுத்தருளிச் செய்திருக்கும் ஆசிரியர் அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள் அவர்களின் நுண்மாண் நுழைபுலமாண்பு, பெரிதும் வியந்து போற்றுதற்கு உரியதொன்றாகும்.

ஆதலின், சிவஞான சித்தியார் 'பிரமாண இயல்' விளக்கும் ஒருசில கருத்துக்களை மட்டும், ஈண்டு இயன்ற அளவில் ஆராய்ந்தறிய முயலுவோம்:

**பத்துவகை அளவைகள்:**

'அளவை (பிரமாணம்) எனப்படுவது **காண்டல் கருதல் உரை இன்மை பொருட்பேறு ஒப்புமை** என ஆறுவகைப் படும் என்பர். ஒருசிலர் இவற்றிற்கு வேறாக, **ஒழிபு உண்மை உலகுரை இயல்பு** என மேலும் நான்கு அளவைகளைக் கொள்வர். மற்றும் சிலர் இப் பத்துக்கு மேலும் அளவைகள் உண்டு எனக் கூறுவர். ஆயினும் அவைகள் யாவும் காண்டல் கருதல் உரை என்னும் இம் மூன்றின்கண்ணேயே அடங்கும்.'

அளவை, காண்டல் கருதல் உரை
அபாவம் பொருள் ஒப்பு ஆறுஎன்பர்;
அளவை மேலும் ஒழிபு உண்மை
ஐதி கத்தோ டியல்பு என நான்கு
அளவை காண்பர்; அவையிற்றின்
மேலும் அறைவர்; அவையெல்லாம்
அளவை காண்டல் கருதல் உரை
என்றிம் மூன்றின் அடங்கிடுமே.

இதன்கண் சுட்டப் பெற்ற பத்து வகை அளவைகளையும், முறையே **பிரத்தியட்சம் அனுமானம் ஆகமம் அபாவம் அருத்தாபத்தி உபமானம் பாரிசேடம் சம்பவம் ஐதிகம் சுபாவம்** என்னும் பெயர்களால் வடமொழியாளர் வழங்குவர்.

இப் பத்துவகை அளவைகளுள், அபாவம் **பிரத்தியட்சத்திலும்**, அருத்தாபத்தி உபமானம் பாரிசேடம் சம்பவம் சுபாவம் என்னும் ஐந்தும் **அனுமானத்திலும்,** ஐதிகம் **ஆகமத்திலும்** அடங்குமாதலின், பிரத்தியட்சம் அனுமானம் ஆகமம் என்னும் மூன்று அளவைகள் மட்டுமே, இவைகளுள் முதன்மையான அளவைகளாக ஈண்டுக் கொள்ளப் பெற்றன.

மாசறு காட்சி, ஐயம்
திரிவின்றி விகற்பம் மூன்றாய்
ஆசற அறிவ தாகும்;
அனுமானம் அவினா பாவம்
பேசுறும் ஏதுக் கொண்டு,
மறைபொருள் பெறுவ தாகும்;
காசறும் உரை, இம் மானத்து
அடங்கிடாப் பொருளைக் காட்டும்.

**காட்சி யளவை (1)**

பொருள்களின் இயல்பை ஐயமும் திரிபும் இன்றி உள்ளபடி நேரே கண்டு அறிவது, காட்சி யளவை எனப்படும். அஃதாவது கண்ணால் வண்ணமும், செவியால் ஓசையும், மூக்கால் மணமும், நாவாற் சுவையும், மெய்யால் ஊறும் உள்ளவாறு அறிதல். 'இஃதொரு பொருள் தோன்று நிற்கின்றது' என்று மட்டும் பொதுவாக அறிவது **'நிர்விகற்பக் காட்சி'**. இதனை 'எழுவாய்க்காட்சி' 'பொதுமைக் காட்சி' எனவும் கூறுவர்.

ஒரு பொருளை நோக்கி, 'இதோ தோன்றுவது குற்றியோ மகனோ? இப்பியோ வெள்ளியோ? பழுதையோ பாம்போ? என ஒன்றின்கண் துணிவு பிறவாது தயங்கி நிற்றல் **ஐயம்.** குற்றியை மகன் என்றும், இப்பியை வெள்ளியென்றும், பழுதையைப் பாம்பென்றும் திரித்துணர்ந்து ஆராயாது துணிந்து விடுதல் **திரிபு.** தோன்றுவ தொன்றனை ஊன்றி நோக்கி ஆராய்ந்து, பெயர் - சாதி - குணம் - கன்மம் - பொருள் என்னும் ஐந்தினையும் தெளிவுற அறிந்து கொள்வது **'சவிகற்பக் காட்சி'** எனப்படும். இதனைப் 'பகுத்துணர்வுக் காட்சி' என

வும் வழங்குவர். யாண்டும் நிர்விகற்பக் காட்சி முன்னர் நிகழ, அதன் பின்னரே சவிகற்பக் காட்சி நிகழப்பெறும்.

கண்ட பொருளை இரட்டுறவே
கருதல் ஐயம், திரியவே
கொண்டல் திரிவு ஆம் ; பெயர் சாதி
குணமே கன்மம் பொருள்என ஐந்து
உண்டு, அவ் விகற்ப உணர்வினுக்கு ;
பொருளின் உண்மை மாத்திரத்தான்
விண்டல் இல்லா அறிவாகும்,
விகற்பம் இல்லாக் காட்சியே

இக்காட்சி அளவையானது வாயிற் காட்சி, மானதக் காட்சி, தன்வேதனைக் காட்சி, யோகக் காட்சி என நான்கு வகைப்படும். **வாயிற் காட்சி**யாவது மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்பொறிகளை வாயிலாகக் கொண்டு பொருள்களைப் பொதுவாக அறிவது. இதனை 'இந்திரியக் காட்சி' எனவும் கூறுவர். பொறிகளால் அறிந்த பொருள்களை மனத்தின்கண் எண்ணி மாசறத் தெரிந்து கொள்ளுவதே **மானதக்காட்சி,** மானதக் காட்சிக்கே சவிகற்ப வுணர்வு நிகழும். மானதக் காட்சியாற் பகுத்து விளங்க அறிந்துகொண்ட பொருள்களினால், இன்பம் துன்பம் விருப்பு வெறுப்பு உவகை கவலை முதலிய உணர்ச்சித் திறங்களை முக்குண வயத்தால் முறை முறையே எய்தி யறிந்துணர்வது **தன்வேதனைக் காட்சி**. அநுபூதி, தன்வேதனைக் காட்சி என்பன ஒரு பொருட் கிளவி. இங்ஙனம் உலகியலில் நிகழும் இன்பம் துன்பம் முதலிய உணர்ச்சித் திறங்களின் வயப்பட்டு வருந்தாமையின் பொருட்டு, இயமம் நியமம் முதலிய யோக சாதனங்களால் ஒருகாலத்து ஓரிடத்தில் இருந்து கொண்டே, எக்காலத்து எவ்விடத்து நிகழ்ச்சிகளையும் ஒருங்கே யுணரப் பெறுவது **யோகக் காட்சி.**

உயிரினோ டுணர்வு, வாயில்
ஒளியுரு ஆதி பற்றிச்
செயிரொடு விகற்பம் இன்றித்
தெரிவதுஇந் திரியக் காட்சி ;
அயர்வில் இந் திரிய ஞானம்
ஐம்புலன் சார்ந்து, உயிர்க்கண்
மயர்வற வந்த ஞானம்
மானதக் காண்டல் ஆமே. (1)

அருந்து இன்ப துன்பம் உள்ளத்து
அறிவினுக்கு அராகம் ஆதி
தரும், தன்வே தனையாம் காட்சி ;
சமாதியால் மலங்கள் வாட்டிப்
பொருந்திய தேச கால
இயல்பு அகல் பொருள்கள் எல்லாம்
இருந்துணர் கின்ற ஞானம்
யோகநற் காண்டல் ஆமே. (2)

## கருதல் அளவை (2)

பொறிகளைக் கொண்டு நேரே அறியப் படுவதின்றி, மறைந்து நிற்கும் பொருளை, அதனை விட்டு நீங்காது யாண்டும் உடனாய் நிற்கும் ஏதுவைக் கொண்டு கருதி யுணர்தல். இதனையே "காண்டற் பொருளாற் கண்டிலது உணர்தல்" எனச் **சீத்தலைச் சாத்தனார்** இனிதுற விளக்குவர். அஃதாவது, கண்ட புகை யுண்மையைக் கொண்டு, புகையானது நெருப்பினைப் பிரிவின்றி அதனோடு உடனாய் நிகழும் தன்மை (அவினாபாவம்) உடையதாதலின், யாண்டுப் புகை யுண்டோ ஆண்டு நெருப்பும் உண்டு எனத் தெளிதல். இனிக் குடத்தையும், அதனை வனையும் குயவனையும் ஓரிடத்து ஒருங்கு கண்டவன், அல்லுழிக் குடத்தைக் கண்டு, இதுவும் வனைதற்கு ஒரு குயவனையுடையதெனக் கருதி யுணர்வதும், அதுபோல்வன பிறவும் அநுமானம் எனினுமாம்.

இனி, இவ் அனுமானம் மூன்று வகைப் படும். மணம் மிக்க மலர் ஒன்றனை முன்னரே ஓரிடத்திற் கண்டறிந்துள்ள ஒருவன், பிறிதோர் இடத்தே மணம் வீசுதல் ஆகிய ஏதுவைக்கொண்டு அங்கும் அம் மலர் உண்டு என, அதனை நேரிற் காணாவிடத்தும் அதனுண்மையை உய்த்துணர்ந்து கொள்ளுதல் போல்வன, **பூர்வக் காட்சி அனுமானம்.** ஒருவன்

கூறும் சொற்களைக்கொண்டு அவனது அறிவின் திறன் பண்பு முதலிய கருத்துப் புலனாதற்குரிய பொருளைக் கருதி யுணர்தல் போல்வன **கருதல் அனுமானம்.** இப் பிறவியில் நாம் எய்தும் இன்ப துன்பங்கள், முற்பிறவியில் நாம் செய்த நல்வினை தீவினைகளின் விளைவேயாகும் என்றால், இனிவரும் பிறவியில் நாம் எய்த இருக்கும் இன்ப துன்பங்களும், இப் பிறவியில் நாம் செய்து போதரும் நல்வினை தீவினை களால் விளையும் என, நூல்களிற் கூறப் பட்டது கொண்டு கூறப்படாத பொருளையும் ஒப்புமை பற்றிக் கருதி யுணர்ந்து கொள்ளுதல் **உரையனுமானம்.**

போதுநாற் றத்தால் அறிதல்
  **பூர்வக் காட்சி அனுமானம் ;**
ஓதும் முறையால் அறிவின் அளவு
  **உணர்தல் கருதல் அனுமானம் ;**
நீதி யால்முற் கன்மபலம்
  நிகழ்வது, இப்போது இச்செய்தி
ஆதி யாக வரும் பயன் என்று
  அறிதல் **உரையால் அனுமானம்.**

**உரையளவை (3) :**

இஃது ஆகமப் பிரமாணம் எனவும், சப்தப் பிரமாணம் எனவும் வழங்கும். ஆகமமாவது ஆப்த வாக்கியம். ஆப்தனுவான் நம்மனோர் நலங்கருதி உண்மைப் பொருளைக் கூறும் உயர்ந்தோன். இவ்வாகம (உரை) அளவையானது 'தந்திரம்' 'மந்திரம்' 'உபதேசம்' என மூன்றுவகைப்படும்.

இறைவன் அருளிச் செய்த நூல்களை முன்னொடுபின் முரண்படுதல் இன்றிக் கடைப் பிடித்து அறிவது **தந்திரவுரை ;** மனம் முதலிய கருவிகளை அடக்கி வழிபடும் திறனை அறிவது **மந்திரவுரை ;** இறைவனின் அருளியல்புகளைத் தான் உணருமாறும், பிறர்க்கு உணர்த்துமாறும் அறிவது **உபதேசவுரை.**

இவ்வாறன்றிப் பதி பசு பாசங்கள் ஆகிய முப்பொருள்களுக்குப் பிரமாணமும் இலக்கணமும் முன்னொடு பின் மாறுகோள் இன்றிப் பாதுகாத்துக் கூறும் ஆகம வாக்கியங்களைத் தெரிவது **தந்திர வுரை** எனவும் ; மனம் முதலிய கருவி கரணங்களை அடக்கித் தெய்வ வழிபாடு புரிதல் ஆகிய சாதனங்களைக் கூறும் ஆகம வாக்கியங்களைத் தெரிவது **மந்திர வுரை** எனவும் ; தனக்கு முதலும் முடிவும் இல்லாத இறைவனின் தன்மைகளை யுணர்த்தி, நிட்டையின் இயல்பு கூறும் ஆகம வாக்கியங்களைத் தெரிவது **உபதேச வுரை** எனவும் சிலர் கூறுவர். **சரியை கிரியை** இரண்டும் தந்திரவுரையிலும், **யோகம்** மந்திரவுரையிலும், **ஞானம்** உபதேசவுரையிலும் அடங்கும் என்பதும் ஈண்டு அறிதற்குரியது.

அனாதியே அமலன் ஆய
  அறிவன் **நூல், ஆகமம்தான் ;**
பின் ஆதிமாறு இன்றிப் பேணல்
  **தந்திரம் ; மந்தி ரங்கள்,**
மனாதிகள் அடக்கித் தெய்வம்
  வழிபடும் வாய்மை ஆகும் ;
தன் ஆதி ஈறு இலாதான் தன்மை
  **உணர்த்துதல் உபதே சம்தான்.**

**இன்மையளவை (4) :**

இஃது அபாவப் பிரமாணம் எனவும் வழங்கும். அபாவமாவது பாவம் போல அபாவப் பொருளின் தன்மையே யன்றி வேறன்று எனவும், பாவப் பொருளின் புலனாகாமையே அபாவம் என்னும் சொற்குப் பொருள் என்பது சித்தாந்தம் எனவும், சிவஞான சுவாமிகள் விளக்குவர். பாவம்-உள்ளது. அபாவம்-இல்லது. சீத்தலைச் சாத்தனர் "அபாவம் என்பது இன்மை ; ஓர் பொருளைத் தவாது அவ் விடத்துத் தான் இலை என்றல்" என இவ்வளவையினை விளக்கியுள்ளார்.

அபாவப் பிரமாணம் நான்கு வகைப் படும் எனவும், ஐந்து வகைப்படும் எனவும் கூறுவர். (1) 'யாண்டும் மொழி திறம்பார் சான்றோர்' என்பது **என்றும்**

**இன்மை** (அத்யந்த அபாவம்). (2) 'வாராமையில்லை வயவேந்தர்' என்பது **இன்மையதின்மை** (அபாவ அபாவம்). (3) 'பொய்ம்மையுடன் புணரார் மேலானர், பொய்ம்மையும் மெய்ம்மைசூழ் மேலோரை மேவாவாம்' என்பது **ஒன்றினொன்றின்மை** (இதரேதர அபாவம்). (4) 'இன்று இரவொடு சிறப்பித்த செம்மை, இறைவனை முன் வணங்க மாட்டாமை பூண்ட மனம்' என்பது **உள்ளதன் இன்மை** (பிராக பாவம்). (5) கழிந்தது இளமை. களி மயக்கம் தீர்ந்தது. ஒழிந்தது காதல் மேல் ஊக்கம்' என்பது **அழிவுபாட்டின்மை** (பிரத்துவம்சாபாவம்).

### பொருட்பேறு அளவை (5):

இதனை 'அருத்தாபத்தி' எனவும் வழங்குவர். அருத்தம்-பொருள், ஆபத்தி-பெறுதல், பேறு. 'பகலுண்ணான் சாத்தன் பருத்திருப்பான்' எனில், அவன் இரவிலுண்பான் எனக் கொள்ளுவது அருத்தாபத்தி எனவும்; 'இவ்வூரிற் கற்றவன் இவன்' எனில், கல்லாதவரும் பலர் அங்கு உளர் என உணர்வது அருத்தாபத்தி எனவும்;

> 'ஆய்க்குடி கங்கை இருக்கும் என்றுற்
> கரையில் என்றெண்ணல் அருத்தா பத்தி'

எனவும் பிறவாறும் கூறுவர்.

'அறஞ்செய்தான் துறக்கம் புகுவான்' எனின், மறம் செய்தான் துறக்கம் புகான் (நரகம் புகுவான்) எனவும்; 'இழிவறிந்து உண்பான்கண் இன்பம் எய்தும்' எனின், கழிபேரிரையான் இன்பம் எய்தான் எனவும்; இனஞ் செப்புவனவற்றையும் அருத்தாபத்தி என்பர். இனப்பொருள் ஒன்றேயாகிய வழி இனஞ் செப்புதலும், 'ஆவாழ்க அந்தணர் வாழ்க' என்றுற் போல இனப்பொருள்கள் பலவாகிய வழி இனஞ்செப்பாமையும் நிகழும் என்பர் ஆசிரியர் **நச்சினார்க்கினியர்.**

### உவமையளவை (6):

இஃது உபமானப் பிரமாணம் என வழங்கப் படும். 'ஆமா' (Bosgaveus) என்னும் சொற்குப் பொருளுணராதவன் 'ஆவினை ஒக்கும் ஆமா' என மற்றொருவன் கூறக் கேட்டுக் காட்டகம் புக்கானாக, அவன் கூறிய தொடர் மொழிப் பொருளைக் கருதி, ஆவொப்புமை யடுத்த பிண்டத்தைக் கண்ட பின்னர் 'இஃது ஆமா' (காட்டுப் பசு) என உணர்தற்குக் காரணமாவது இவ்வளவை,

> "உவமம் ஆவது ஒப்புமை யளவை;
> கவயமா ஆப் போலும்எனக் கருதுதல்"

என்பது **மணிமேகலை.**

அணியிலக் கணத்துள் வரும் உவமையணி 'மதிபோலும் முகம்' என்றுற் போல, அறிந்த பொருள்கள் இரண்டனுள் ஒன்றை ஒன்றோடு ஒப்பிட்டுச் சிறப்பித்து உணர்த்தும். தருக்க நூற்கண் வரும் உவமையளவை 'கவயமா ஆப் போலும்' என்றுற் போல, அறிந்த பொருளால் அறியாப் பொருளை அதனோடு ஒப்பிட்டு அறிவுறுத்தும். இஃதே இரண்டிற்கும் இடையேயுள்ள வேற்றுமை என்பது கடைப்பிடிக்க.

### ஒழிபு அளவை (7):

இது பாரிசேடப் பிரமாணம் எனவும் வழங்கப்படும். இதனை 'மீட்சி' எனவும், 'மீட்சியறிவு' எனவும் கூட வழங்குவது உண்டு. 'பாரிசேடமாவது: பாரித்துச் சேடித்தல், கூட்டிக் கழித்தல்' என்பர், சிவஞான போதத்தின் பழைய உரைகாரர் ஆகிய **பாண்டிப் பெருமாள்.**

> "மீட்சி என்பது இராமன்வென் றுன் என
> மாட்சியில் இராவணன் தோற்றமை
> மதித்தல்."

என ஆசிரியர் **சீத்தலைச்சாத்தனார்** இதனை விளக்கியுள்ளனர். 'இம் மூவரில் இருவர் கள்வர் அல்லர்' எனில் ஏனை

எஞ்சி நின்ற ஒருவன் கள்வன் எனக் கொள்வது பாரிசேடம்.

"சல்லியன், சராசந்தன், கீசகன், பீமசேனன் என்னும் நால்வரும் யானையின் ஆற்றல் உடையவர்கள். ஆதலால் இவர்களுட் கீசகனைக் கொன்றவர்' யாவராக இருத்தல் கூடும் என்று ஐயம் நிகழ்ந்த வழி, ஆங்கே சராசந்தனும் சல்லியனும் இல்லாமையால், எஞ்சி நின்ற பீமசேனனே கீசகனைக் கொன்றனனாதல் வேண்டும் எனக் கொள்வது பாரிசேடம்' எனச் சிவாக்கிரயோகிகள் இதனைச் சுவைபட விளக்குவர்.

"யாவையும் சூனியம் சத்தெதிர், ஆகலின் சத்தே அறியாது; அசத்து இலது, அறியாது; (எனவே) இருதிறனும் அறிவுளது இரண்டலா **ஆன்மா**" என்னும் சிவஞான போத நூற்பாவும், "சத்து அசத்தைச் சாராது; அசத்து அறியாது; (ஆதலின்) அங்கண் இவை உய்த்தல் சதசத்தாம் **உயிர்**" என்னும் திருவருட்பயன் செய்யுளும், பாரிசேட அளவைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள் ஆகும்.

பல பொருள்களுள் ஒன்றைத் தனியே பிரித்துச் சுட்டிக் காட்டுவது **பாரிசேடம்**; இரு பொருள்களுள் ஒன்றைமட்டும் சுட்டி, ஏனையதனைக் குறிப்பாற் பெறப்பட வைப்பது **அருத்தாபத்தி**.

**உண்மையளவை (8):**

இதற்குச் சம்பவப் பிரமாணம் என்றும் பெயர். 'நூற்றில் ஐம்பது உண்டு' என்றல் சம்பவம். சம்பவம் என்பதனை 'உள்ள நெறி' எனவும் வழங்குவர். இதனை,

> " உள்ளநெறி என்பது நாராசத்து இரிவில்
> கொள்ளத் தகுவது காந்தம்எனக் கூறல் "

என மணிமேகலை விளக்குகின்றது. "இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்" எனத் தொல்காப்பியனார் விதித்தபடி, நிலம்வலிது - நீர்தண்ணிது - தீவெய்து எனக் கூறுதல் போல்வனவும், சம்பவப் பிரமாணம் எனப் பெறுதல் உண்டு.

**உலகுரை யளவை (9)**

இதனை 'ஐதிகப் பிரமாணம்' என வழங்குவர். ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார் "ஐதிகம் என்பது உலகுரை; இம் மரத்து எய்தியதொரு பேய் உண்டு எனத் தெளிதல்" என்று இதனைவிளக்கியருளினார். இதனைக் 'கன்ன பரம்பரை' அல்லது '**செவி வழிச் செய்தி**' எனவும் சிலர் கூறுவது உண்டு.

> 'கண்டது மன்னும் ஒருநாள்; அலர்மன்னும்
> திங்களைப் பாம்புகொண் டற்று'

என்னும் திருக்குறளில், 'திங்களைப் பாம்பு கொள்ளல்' (சந்திரனை இராகு கேதுக்கள் ஆகிய பாம்புகள் சென்று கிரகண காலத்திற் பற்றுகின்றன) என்பது உலகுரை யளவையேயாகும்.

**இயல்பு அளவை (10)**

இது 'சகசப் பிரமாணம்' அல்லது 'சுபாவலிங்கப் பிரமாணம்' என வழங்கப்படும். மா என்பது ஒரு சார் விலங்கிற்கும், மரத்திற்கும், வண்டிற்கும் பிறபொருள்களுக்கும் பொது. ஆயினும் மாப்பூத்தது, மாவும் மருதும் ஓங்கின என்புழி, வேறுபடு வினையானும் இனத்தானும் மரம் என்பது விளங்கிற்று. கவசம் தரித்து நின்று 'மாக் கொணர்க' என்றவழிக் குதிரை என்பது சார்பினால் விளங்கிற்று. இங்ஙனம் ஒரு சொல் குறிக்கும் பொருளின் இயல்பினை, ஏற்ற பெற்றி அறிந்து கொள்ளத் தக்க கருவியாக அமைவதே இயல்பு அளவை எனப்படும்.

> ' இயல்பு, யானைமேல் இருந்தோன்
> தோட்டிக்கு
> அயலொன்று ஈயாது அதுவே
> கொடுத்தல் "

என மணிமேகலையில், இதனைச் சீத்தலைச் சாத்தனார் விளக்கி யிருக்கின்றனர்.

**வேதாந்த சூடாமணி**

இவ்வளவைகள் பத்தினுள் **உலகாயதர்** (சார்வாகர்), பிரத்தியட்சம் ஒன்றை

மட்டுமே கொள்வர். **சைனர் பௌத்தர் வைசேடிகர்** என்போர், பிரத்தியட்சம் அனுமானம் என்னும் இரண்டைக் கொள்வர். **சாங்கியர்** பிரத்தியட்சம் அனுமானம் ஆகமம் என மூன்றைக் கொள்வர். **நையாயிகர்** அவற்றோடு உவமையையும் சேர்த்து நான்கைக் கொள்வர். **பிரபாகரர்** அவற்றுடன் அருத்தாபத்தியையும் சேர்த்து ஐந்து கொள்வர். **பாட்ட வேதாந்திகள்** அவற்றுடன் அபாவம் சேர்த்து ஆறு பிரமாணங்களை ஏற்பர். **பௌராணிகர்கள்** இவற்றுடன் சம்பவம் ஐதிகம் என்னும் இரண்டையும் சேர்த்து எட்டு அளவைகளை உடன்படுவர். **வேதவியாசர்** மேற்கூறிய பத்துவகை அளவைகளையுமே இசைந்து தழுவிக் கொண்டுள்ளனர் என்று, துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றி யருளிய **வேதாந்த சூடாமணி** என்னும் நூல் கூறுகின்றது.

### அளவைக் குற்றங்கள்:

மேற்கூறப்பெற்ற பத்து அளவைகளிலும் எட்டுவகைக் குற்றங்கள் நிகழ்தல் உண்டு. அவற்றைப் **'பிரமாண ஆபாசங்கள்'** எனக் குறிப்பிட்டுப் பின்வருமாறு மணிமேகலை நூல் விளக்குகின்றது. ஒரு பொருளின் இயல்பினைப் பகுத்தறிய மாட்டாமல் அஃதொரு பொருள் உண்டு என மட்டும் உணர்தல் **சுட்டுணர்வு (1).** இப்பியை வெள்ளியென்றும், கயிற்றை அரவென்றும், ஒன்றை மற்றொன்றாகப் பிறழ உணர்தல் **திரியக்கோடல் (2).** அதோ தோன்றும் உருவம் தூணோ மனிதனோ என ஒன்றில் துணிவு பிறவாது தடுமாறி நிற்றல் **ஐயம் (3).** தூணை மனிதன் எனவே ஆராயாது துணிந்து விடுதல் **தேராது தெளிதல் (4).** புலி பாம்பு முதலியன தம்மை நெருங்கி வருதலைக் கண்டும், ஊன்றி நோக்கி யுணர்ந்து கொள்ளாதிருத்தல் **கண்டுணராமை (5).** முயற்கோடு யாமைமயிர்க் கம்பலம் வானத்தாமரை என்பன போன்று சொல்லால் மட்டும் கருத்தில் தோன்றுவன **இல் வழக்கு (6).** மிகுந்த குளிருக்கு மருந்து நெருப்பிற்காய்தல் என எளிதின் அறியற்பாலதனை, மிக முயன்று ஆராய்ந்து அதன் பின்னர்த் தெளிதல் **உணர்ந்ததை யுணர்தல் (7).** காரணம் கருதாது பிறர் சொல்வனவற்றை அங்ஙனமே ஏற்றுக் கொள்ளுதல் **நினைப்பு (8).**

### முடிவுரை:

இவ்வெட்டு வகைக் குற்றங்களும் நிகழாத பத்துவகை அளவைகளும், பொருள்களின் இயல்பினை அறிய நமக்குத் துணைபுரியும் கருவிகள் ஆகும்.

—ஆசிரியர்

---

## ஒலியும் - எதிரொலியும்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே

— திருநாவுக்கரசு சுவாமிகள்

வெய்ய நீற் றறையதுதான் வீங்கிளவே னிற்பருவம்
தைவரு தண் தென்றல் அணை தண்கழுநீர்த் தடம்போன்று
மெய்யொளி வெண் நிலவலர்ந்து மூரன்றயாழ் ஒலியினதாய்
ஐயர் திரு வடிநீழல் அருளாகிக் குளிர்ந்ததே

— சேக்கிழார் சுவாமிகள்

# சத்தியத்திற்கு உயிர் கொடுத்த சான்றோர்

**முன்னுரை :**

உலகில் வாழும் மக்கள் பலதிறத்தினர், பல குணத்தினர். உலகியலிற் பெரும்பாலான மக்களின் வாழ்க்கை தாயுமானவர் பாடுவது போல, "யோசிக்கும் வேளையில் உண்பதும் உறங்குவது மாகவே முடியும்". பொன்னும் பொருளும் போகமும் புகழும் குறித்து அலைந்து உழல்வது தான், மக்கள் எல்லோருக்குமே பொதுவான இயல்பாகக் காணப்படுகின்றது. கோடிக் கணக்கான மக்களுள்ளே, எங்கோ விரல்விட்டு எண்ணக் கூடிய ஒருசிலர்தாம், குறிக்கோள் உடையவர்களாக விளங்குகின்றார்கள்; உயர்ந்த குறிக்கோள்களுக்காக உயிர் வாழ்கின்றார்கள்.

வாழ்க்கையிற் கொள்கையும் குறிக்கோளும் மிகமிக இன்றியமையாதன. அஃது இல்லாத வாழ்க்கை, விலங்கு வாழ்க்கையே யாகும் என்பதில் தடையில்லை. "குறிக்கோள் இலாது கெட்டேன்" எனக் கழிவிரக்கம் கொண்டு, நைந்துருகுகின்றார் நாவுக்கரசர்! குறிக்கோளாளர்களின் வாழ்க்கை, எளிதில் இயல்வதொன்றன்று. பெரும்பாலும் அது கரடு முரடான கொடிய கல்லதர் அத்தமாகவே இருக்கும்.

## குறிக்கோள் வாழ்க்கை

மனிதர்களை இழி மனிதன் (Low man) என்றும், உயர் மனிதன் (High man) என்றும், இராபர்ட் பிரௌனிங் என்னும் ஆங்கிலக் கவிஞர், இரு வகையாகப் பிரிக்கின்றார். குறிக்கோள் உடையவன் - குறிக்கோளுக்காக வாழ்பவன் - குறிக்கோளைக் காப்பதற்காக உயிர் விடுபவன் எவனோ, அவனே 'உயர் மனிதன்' என்று அறிவுறுத்துகின்றார் அக்கவிஞர்.

குறிக்கோளுடையவன் உலகியல் நிலைகளில் எத்துணைதான் தாழ்ந்து காணப்படினும், அவனே மிக உயர்ந்தவன்! குறிக்கோளில்லாதவன் உலகியல் வளங்களிலும் வாழ்விலும், எவ்வளவுதான் மிகுந்திருப்பினும், அவன் மிகமிக இழிந்தவனே யாவான். உயர்ந்த குறிக்கோளை யுடையவன், அதனை யடைதற்குத் தான் செய்யும் முயற்சிகளில் தோல்வியுறினும், அஃது ஒருவகையில் வெற்றியேயாகும். "கான முயல் எய்த அம்பினில், யானை பிழைத்த வேல் ஏந்தல் இனிது." (1)

---

(1) "That **low man** seeks a little thing to do,
Sees it and does it:

This **high man**, with a great thing to pursue,
Dies ere he knows it.

That **low man** goes on adding one to one,
His hundred's soon hit:

This **high man**, aiming at a million,
Misses an unit."

— **Robert Browning**
A Grammarian's Funeral.

கொள்கையும் குறிக்கோளும் உடையவர்கள் வெற்றி தோல்விகளைப் பற்றிக் கருதுவதில்லை. இன்ப துன்பங்களையும், இகழ்ச்சி புகழ்ச்சிகளையும் பொருட் படுத்துவதில்லை. ஏனையரெல்லாம் தன்னலம் ஒன்றே கொண்டு உழல, இவர்களோ தங்கள் நலனை இழந்து துறந்தும், பிறர் நலமே பேணி அதற்கென்றே வாழ்கின்றனர். இத்தகைய சிறந்த மக்கள்தாம் 'சான்ருண்மைக்கு ஆழி' எனப்படுவோர்; தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் எனப் புகழ்ந்து போற்றப்படுவர்.

## தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்

பண்டைத் தமிழ் இலக்கியங்கள் பலவற்றுள்ளும் சிறந்த புறநானூறு என்னும் புகழ்மிக்க இலக்கியம், தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்களின் இயல்பினைப் பின்வருமாறு பெரிதும் சிறப்பித்துப் பாராட்டிப் பாடுகின்றது.

"இந்திரர்க்கு உரிய அமிழ்தம் கிடைப்பதாக இருந்தாலும், அதனைத் தாம் மட்டும் தனித்து உண்ணமாட்டார்கள்; எவரிடத்தும் அவர்களுக்கு வெறுப்பில்லை. பிறர் அஞ்சுதற்குத் தக்க துன்பத்திற்குத் தாமும் அஞ்சியிருந்து விடாமல், அதனைத் தீர்த்தற் பொருட்டு இடைவிடாது ஓய்வின்றி உழைப்பர். புகழ் விளைவிக்கும் நற்செயல்களைச் செய்தலில், தம்முடைய உயிரையும் ஒரு பொருட்டாக எண்ணுமற் கொடுக்க முன்வருவர். பழிவிளைக்கும் செயல்களாயின், அவற்ருல் உலகம் முழுவதும் பெறக்கூடுமெனினும், வெறுத்து ஒதுக்கி விடுவார்கள். கடமைகளை நிறைவேற்றுதலில் ஒரு சிறிதும் சோர்வு கொள்ளமாட்டார்கள். தமக்கென முயலாமல், பிறர்நலம் குறித்தே மிகவும் முயன்று பாடுபடும் இயல்பினராகிய இத்தகைய சிறந்த பெருமக்கள், ஒருசிலரேனும் இருந்து வருவதனுல்தான், இவ்வுலகமானது அழிந்துவிடாமல் நிலைபெற்று இருந்து வருகின்றது."



திருவாலங்காடு ஸ்ரீ பத்ரகாளிதேவி

உண்டால் அம்ம, இவ் வுலகம்! இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும்,
இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்;
துஞ்சலும் இலர், பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழெனின் உயிரும் கொடுக்குவர்;
பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்;
அயர்விலர்;
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுநர், உண்மை யானே.

—புறநானூறு, 182

இக்கருத்தினையே ஆசிரியர் திருவள்ளுவர் தாமும், தம்முடைய திருக்குறளில் "பண்புடை யார்ப்பட்டுண் டுலகம். அது இன்றேல், மண் புக்கு மாய்வது மன்" என அருளிச் செய்திருத் தல் காணலாம்.

## பழையனூர் நீலி கதை:


இங்ஙனம் "தமக்கென வாழாப் பிறர்க்குரி யாளர்கள்" ஆகிய சான்றோர்கள் பற்பலர், மிக் கிருந்து வாழ்ந்து வந்த மாட்சிமை யுடையது நம் தமிழ்நாடு! அவர்களுள் சத்தியமே பேசி, சத்தியமே கடைப்பிடித்து ஒழுகிய சான்றோர்கள், நம் தமிழகத்தில் தொன்றுதொட்டே மிகுதியாக வாழ்ந்து வந்துள்ளனர். இறைவன் சத்திய சொருபன், சத்தியத்தில் இருந்து வெளிப்படுகின் றான், சத்தியத்திலேயே நிலைபெற்று விளங்குகின் றான். இதனையே நம் மணிவாசகப் பெருந்தகையார் "மெய்ப் பொருட்கண் தோற்றமாய் மெய்யே நிலைபேறாய்... அப்பொருளாம் நம்சிவன்" என அருளிச் செய்கின்றார். இத்தகைய சத்தியத் தினின்று தவறாமல், அதனைக் காக்கும் பொருட் டுத் தம்முடைய உயிரையும் கொடுத்துத் தியாகம் புரிந்தருளினர் சான்றோர்கள் எழுபதின்மர். அவர் களின் வரலாறு, மிகவும் புனிதமானதாக நம்மாற் புகழ்ந்து போற்றத் தகுவது. அவ்வினிய புனித வரலாறு, இற்றைக்கு ஏறத்தாழ 1500 ஆண்டு கட்கு முன்னர் நம் தமிழகத்தில் உள்ளபடியே நிகழ்ந்த உண்மை வரலாறு ஆகும்.

முன் ஒரு காலத்தில், ஒரு வணிகன் ஒழுக்கங் கெட்டு, பரத்தையின் வலைப்பட்டான். அவன் மனைவி அவனைப் பலவகைகளில் திருத்த முயன் றாள். அது பொறாத அவன், தன் மனைவியை வேற் றூர்க்கு அழைத்துச் செல்பவன் போலச் சென்று, வழியில் ஒரு காட்டில் அவளைக் கொன்றுவிட்டான். அக் கொலைப் பழியும் பாவமும் நீலி என்னும் பேயாகி, அவனைத் தொடர்ந்து அலைத்து வந்தது. அப் பேயின் தொல்லையினின்று மீளும் பொருட்டு, அவன் தற் காப்புக்காக ஒரு மந்திரவாளினை வைத்துக் கொண்டு திரிந்து வந்தான். நீலி என்னும் பேயும் அவனை விடாமல், கொல்வதற்குச் சமயம் பார்த் துக்கொண்டு தொடர்ந்து வந்தது. அவன் ஒரு நாள் ஒரு கிராமத்திற்குச் சென்றான். நீலியும் ஒரு பெண்வடிவம் பூண்டு, கள்ளிக் கொம்பு ஒன்றை முரித்து, அதனைக் குழந்தை வடிவமாக்கி இடுப்பில் வைத்துக் கொண்டு, வணிகனைப் பின் தொடர்ந்து வந்தது. வணிகன் அவ்வூரில் வேளாளர் பெரு மக்கள் எழுபதின்மர் இருந்த சபையின் முன் சென்று, 'என்னை நீலி என்னும் ஒரு பேய் கொல்ல வருகின்றது. என்னைக் காப்பாற்றி யருளுங்கள்' என்று அடைக்கலம் புகுந்தான். நீலியும் அச் சபையினர் முன்போய், "இவர் என் கணவர். இது எங்கள் குழந்தை. இவர் ஒரு பரத்தையின் மாய வலையில் விழுந்து மோகமுற்றுக் கிடக்கின் றார். அதனால் என்னை வெறுத்துப் பேய் என்று பழித்து ஒதுக்குகின்றார். இக் குழந்தையையும் என்னையும் துணையின்றிக் கைவிட்டு ஓடி வந்து விட்டார். எங்களை எப்படியேனும் ஒன்று படுத்தி நீங்கள்தான் வாழவைக்க வேண்டும்" என்று கூறிக் கண்ணீர்விட்டு அழுது புலம்பி நின்றது. வணிகன் அதனை மறுத்து "இது பெண் அன்று. நீலி என்னும் பேய்" என்று கூறினான். நீலி தன் மடியில் இருந்த மாயக் குழந்தையைக் கீழே விட் டாள். அது 'அப்பா' என்று அழைத்துக் கொண்டு சென்று, வணிகனிடம் அணைந்தது. சபையினருக்கு உண்மை புலப்படவில்லை. நீலி சொல்வதுதான் ஒருகால் உண்மையாக இருக்குமோ? என்று அவர்கள் ஐயமுற்றனர். அங்ஙனம் அவர்கள் நம்பும் வகையில், நீலி கண் ணீர் வடித்துப் புலம்பி நடித்து நின்றாள். எனி னும் சபையினர் உடனே எதுவும் முடிவு கூற

முற்பட்டிலர். "உங்கள் குறையை நாளைக்குத் தீர்ப்போம். இன்று இரவு நீங்கள் ஒன்றுகூடி இங்கே இருங்கள்" எனப் பணித்தனர். அது போது, நீலி "ஐயன்மீர்! என் கணவர் தம் மடியில் ஒரு வாளை மறைத்து வைத்துக் கொண்டிருக்கின்றார். அதனால் அவர் என்னைக் குத்திக் கொன்று விடுவார். எனக்கு அச்சமாக இருக்கின்றது. அதனை நீங்கள் வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். அப்போதுதான் நான் அவரிடம் அச்சமின்றிச் செல்ல முடியும்" எனப் பல கூறி முறையிட்டாள். அவள் கூறியபடியே வணிகனிடம் வாள் இருந்ததும், அதனை அவன் மடியில் மறைத்து வைத்திருந்ததும், நீலியின் கூற்றை அவர்கள் மேலும் நம்பச் செய்தன. வணிகன் "இந்த வாள் இல்லையேல் என்னை அவள் கொன்று விடுவாள்" என்று எவ்வளவோ கூறி மன்றாடினான். "ஒரு பெண் ஓர் ஆடவனை அவ்வளவு எளிதாகக் கொன்று விட முடியுமா? நீ ஆடவனையிற்றே! உன்னைத் தற்காத்துக் கொள்ள முடியாதா? உன் உயிருக்கு ஒன்றும் ஊறு நேராது. கட்டிய மனைவியை வெறுத்துக் கைவிடாதே. அவளிடம் அன்பாக இரு. நீங்கள் இருவரும் அன்பினால் ஒன்றுபட்டு வாழவேண்டும் என்று விரும்பும் நாங்கள், நீ நினைப்பதுபோல அவள் உன்னைக் கொல்ல விட்டுவிடுவோமா? உன்உயிருக்கு ஊறு நேர்ந்தால், நாங்கள் எழுபதின்மரும் எங்கள் உயிரைக் கொடுக்கின்றோம். இது சத்தியம். நீ அஞ்ச வேண்டா" எனப் பல ஆறுதல் உரைகள் கூறி, அவனிடம் இருந்த மந்திர வாளைச் சபையினர் வாங்கிக் கொண்டனர்.

இருவரையும் ஓர் இல்லத்தில் ஒன்றாகத் தங்கியிருக்குமாறு செய்தனர். ஆனால் அன்று இரவு, நீலிப்பேய் அவ் வணிகனைக் கிழித்துக் கொன்று, பழிதீர்த்துக் கொண்டு மறைந்து போய்விட்டது. வணிகன் பேயினால் வஞ்சித்துக் கொல்லப் பட்டதனை, மறுநாள் சபையினர் அறிந்தனர். மிகவும் வருந்தினர்.

வணிகனது குற்றநற்றங்களைப் பற்றி அவர்கள் கருத முற்பட்டிலர். அவனுக்கு நேர்ந்த முடிவு



ஸ்ரீ சாட்சி பூதேசுவரர் ஆலயம் (முன் புறத்தோற்றம்)
பழையனூர், திருவாலங்காடு.

வினைப்பயன் என்றும், விதியின் விளைவு என்றும் சமாதானம் செய்துகொண்டு அமைதியுற நினைந்திலர். 'ஏதோ பேச்சுப் போக்கில், உலக வழக்கை ஒட்டிப் பொதுவாகக் கூறிய ஆறுதலுரை தானே ; அவன் இறந்துபோக நேரிட்டு விட்டால், அதற்காக நாம் என் செய்யலாம்?' என்றும், தம்மைத் தப்புவித்துக் கொள்ளும் முறையில் அவர்கள் யாதொன்றும் எண்ணுகிலர். "உன் உயிருக்கு ஊறு நேர்ந்தால், எங்கள் எழுபதின்மர் உயிரையும் கொடுக்கின்றேம்" என்று உறுதி கூறினேமே, அதன்படி நம் உயிரைத் துறப்பதே இனி நம்முடைய கடமை" என்று எழுபதின்மரும் ஒருமனமாக முடிவுக்கு வந்தனர். அவர்களுள் ஒருவராவது தம் உயிரைக் கொடுப்பதில் சிறிதும் தயக்கம் காட்டவில்லை. "எவன் எக்கேடு கேட்டால் என்ன? நாம் நம் உயிரைத் துறப்பதா?" என்று ஒருவரேனும் முணுமுணுக்கவில்லை.

நம்மிடம் அடைக்கலமாக வந்து புகுந்து, சரணுகதி யடைந்த ஒருவனின் உயிரை நாம் காக்க முடியாமல் ஏமாறித் தவறிப் போயினேம். இது நமக்கு நீங்காத பெரிய பாவமே ஆகும்! இப் பெரும் பழிக்கு ஆளாகிய நாம், இனி உயிர் வாழ்தல் முறையன்று. அடைக்கலம் புக்காரைக் காத்தல் மேலாய பேரறம்; அது செய்யாது தவறுதல் கொடிய பெரும்பாவம்; அப் பெரும் பாவத்திற்குக் கழுவாய் எதுவுமே இல்லை! ஆதலின் நாம் கூறிய சொல் தவருமல், நாம் நம்முடைய உயிரைத் துறந்து விடுவதுதான் முறைமையும் அறமும் ஆகும் என்று, அறங் கூறவையினர் எழுபதின்மருள் ஒவ்வொருவரும், தம் உயிர் துறக்க முனைந்து முன்நின்றனர்.

அவ்வெழுபதின்மரின் உற்ருர் உறவினரும்கூட, அவர்கள் மீது தமக்கு அளவு கடந்துள்ள அன்பும் ஆர்வமும் பந்தமும் பாசமும் பற்றியேனும், அவர்களின் மறைவால் தமக்கு நேரக் கூடிய துன்பமும் துயரமும் பற்றியேனும், அவர்கள் உயிர்துறத்தலைத் தடைசெய்ய முற்படவில்லை. 'அவர்கள் செய்வது நியாயந் தான், வேறு வழி ஒன்றுமில்லை' என்று தெளிந்து, அவர்களின் நீதிநெறி திறம்பா நேர்மைக்கும், சிறந்த இணையற்ற பெருந் தியாகத்திற்கும் ஒருவகையில் மகிழ்ந்து தலைவணங்கிப் பணிந்து நின்றனர்.

இங்ஙனம் "தாம் கூறிய சொற் பெரிதா? தம்முடைய உயிர் பெரிதா? இரண்டில் எது பெரிது? சொல்லைத் துறந்து உயிரைக் காத்துக் கொள்ளுவதா? அன்றி உயிரைத் துறந்து, சொல்லைக் காத்து நிலை நிறுத்துவதா? என்று நன்கினிது சிந்தித்துச் சீர்தூக்கி ஆராய்ந்து பார்த்து; உயிரை விடுத்தேனும் கூறிய சொல்லைக் காத்து நிலை பெறுத்துவதே, நம்முடைய தலையாய தவிர்க்கலாகாப் பெருங் கடமை" என்று துணிந்த எழுபதின்மரும் தீ வளர்த்து, அதன்கண் மகிழ்வுடன் மூழ்கி உயிர் துறந்து, இறைவன் திருவடியிற் கலந்து நின்றனர்.

**உண்மை வரலாறு.**

இது வெறுங் கட்டுக் கதையன்று. உண்மையாகவே நிகழ்ந்த ஓர் உயரிய வரலாறு. இற்றைக்கு ஏறத்தாழ 1500 ஆண்டுகளுக்கு முன்னர், நம் தமிழ் நாட்டில் வியக்கத்தக்க இவ் வரலாறு மெய்யாகவே நடைபெற்றது.

> "யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை, எனைத்தொன்றும்
> வாய்மையின் நல்ல பிற"

> "பொய்யாமை பொய்யாமை ஆற்றின், அறம்பிற
> செய்யாமை செய்யாமை நன்று"

என்று உலகுக்கு அறிவுறுத்திய திருவள்ளுவப் பெருந்தகையும், அவர் அருளிச் செய்த திருக்குறள் நூலும் தோன்றிய நாடன்றே, நம் தமிழ் நாடு! இத்தகைய சிறந்த புனித வரலாறு நம் அருமைத் தமிழ் நாட்டில் அன்றி வேறு எங்கே நிகழ்ந்திருத்தல் இயலும்?

**திருவாலங்காடு :**

பழைமையும் பெருமையும் புனிதமும் மிக்க நம் தமிழ்நாட்டில், திருவாலங்காடு என்று ஒரு சிவதலம் உள்ளது. தொண்டை நாட்டில் தேவாரப் பாடல் பெற்றுச் சிறந்து விளங்கும் சிவதலங்களுள், இது 16ஆம் தலம் ஆகும். ஒரு காலத்தில் ஆலமரக்காடாக இருந்து, அதில்

இறைவன் வெளிப்பட்டுத் திருநடனஞ் செய் தருளினமையால், இஃது இப்பெயர் பெற்றது. கூத்தப்பெருமான் திருநடனம் செய்தருளும் ஐம் பெரு மன்றங்களுள், இஃது இரத்தினசபை எனப்படும். (தில்லை கனகசபை, மதுரை இரசத சபை, திருக்குற்றாலம் சித்திரசபை, திருநெல் வேலி தாமிர சபை). காளியின் பொருட்டு இறைவன் ஊர்த்துவ தாண்டவம் செய்தருளிய தலம் இது. கார்க்கோடகன் முஞ்சி கேசர் என்ற பெயருடன், பதஞ்சலி வியாக்கிரபாத முனிவர்கள் இறைவனின் திருநடனம் கண்டு வணங்கப் பெற்ற புண்ணிய க்ஷேத்திரம். காரைக்காலம்மையார் "அறவா! நீ ஆடும்போது உன் அடியின்கீழ் நான் மகிழ்ந்துபாடி இருக்கவேண்டும்" என விரும்பித் தாம் கேட்டுக்கொண்டபடி, இறை வனின் திருவடிக்கீழ் ஆடியும் பாடியும் ஆனந்தம் கொண்டு எப்போதும் எழுந்தருளியிருக்கும் சிறப் புடையது இந்தத்தலம். அப்பர் சம்பந்தர் சுந்தரர் ஆகிய மூவரும் பாடிய பெருமை யுடையது. "அண்டமுற நிமிர்ந்து ஆடும் எங்கள் அப்பன் இடம் திருவாலங்காடு" எனக் காரைக்காலம் மையார் தமது 'மூத்த திருப்பதிகம்' என்னும் பாடலில், இதனைப் புகழ்ந்து போற்றியுள்ளனர்.


**பழையனூர் :**

இத்தகைய திருவாலங்காடு என்னும் தலத்தினை அடுத்து, மிக அணித்தாகப் பழையனூர் என்ற ஓர் ஊர் உள்ளது. பழையனூரும் ஆலங்காடும் ஒன்றனை யொன்று அடுத்து மிகவும் அணித்தாக இருத்தலினால், பழையனூர் ஆலங்காடு என்றும் வழங்கி வந்தது.

இப் பழையனூர் என்னும் பழம்பெரும் பதி யில் தான், நாம் மேலே கண்ட வரலாறு நடை பெற்றது. இறைவன் எழுந்தருளியிருக்கும் ஆலங்காட்டிலும், சத்தியத்திற்கு உயிர் கொடுத்த சான்றோர்கள் ஆகிய எழுபதின்மர் வாழ்ந்திருந்த சிறப்புடைமைபற்றியே "ஆலங்காட்டுப் பழைய னூர்" என்னுமல் "பழையனூர் ஆலங்காடு' எனப் பழையனூர்க்கு முதன்மை தந்து, நம் சமய ஆசிரியர்கள் மூவருமே பாடியருளினர் போலும்!

**சம்பந்தர் :**

சத்தியத்திற்கு உயிர்கொடுத்த இச் சான்றோர் களின் புனித வரலாற்றை, இற்றைக்குச் சற்றே றத் தாழ 1400 ஆண்டுகட்கு முன்பிருந்த திருஞான சம்பந்தப் பெருமான்,



எழுபதின்மர் வேளாளர் தீப்பாய்ந்து உயிர் நீத்த மண்டபம்
பழையனூர், திருவாலங்காடு.

துஞ்ச வருவாரும் தொழுவிப்
பாரும், வழுவிப்போய்

நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப்
பாரும், முனைநட்புாய்

வஞ்சப் படுத்தொருத்தி வாழ்நாள்
கொள்ளும் வகை கேட்டு

அஞ்சும் பழையனூர் ஆலங்
காட்டெம் அடிகளே

என்று தம் தேவாரப் பாடலிற் குறிப்பிடுகின்றார். அதனால் இஃது அவர்தம் காலத்திற்கும் நெடு நாட்கு முன்னரே நிகழ்ந்த உண்மை வரலாறுதல் தெளியப்படும்.

**சேக்கிழார் :**

திருஞானசம்பந்தர் குறிப்பிட்டருளிய இவ் வரலாற்றினையே "பழையனூரார் இயம்பும் மொழி காத்த காதை" (2098) எனக் குறிப்பிடுவதுடன்,

நற்றி றம்புரி பழையனூர்ச்
சிறுத்தொண்டர் நவைவந்து

உற்ற போதுதம் உயிரையும்,
வணிகனுக்கு ஒரு காற்

சொற்ற மெய்ம்மையும் தூக்கி,
அச் சொல்லையே காக்கப்

பெற்ற மேன்மையின் நிகழ்ந்தது
பெருந்தொண்டை நாடு

—பெரியபுராணம், 1080.

**உமாபதி சிவம் :**

சேக்கிழார் சுவாமிகள் விளக்கிக்கூறிய வரலாற்றையே, அவருக்குப் பின்னே போந்த உமாபதி சிவாசாரிய சுவாமிகள், பின் வருமாறு அதனை மேலும் விரித்துரைத்துப் பாடியருள்கின்றார்.

மாறுகொடு பழையனூர் நீலி செய்த

வஞ்சனையால் வணிகன் உயிர்
இறப்பத் தாங்கள்

கூறியசொற் பிழையாது துணிந்து,
செந்தீக்

குழியில்எழு பதுபேரும் முழுகிக்,
கங்கை

ஆறணிசெஞ் சடைத்திருவா லங்காட்
டப்பர்

அண்டமுற நிமிர்ந்தாடும் அடியின்
கீழ்மெய்ப்

பேறுபெறும் வேளாளர் பெருமை,எம்மாற்

பிரித்தளவிட் டிவ்வளவு எனப்பேசல்
ஆமோ ?

— திருத்தொண்டர் புராண வரலாறு, 15.

**கூழாண்டார் :**

இங்ஙனம் சத்தியத்திற்காக உயிர் கொடுத்த சான்றோர்களின் சந்ததியினர், இன்றும் பழையனூரில் இருந்து வருகின்றனர். இவர்களையே 'கூழாண்டார் கோத்திரத்தினர்' என்பர். பழையனூரில் வாழ்ந்து வந்த இப் பெருமக்கள், இறைவனுக்குரிய நன்செய் நிலங்களைப் பயிரிட்டு, பக்திமை காரணமாக நெல்லைத் திருவாலங்காட்டு நடராஜப் பெருமானுக்குக் கொடுத்து விட்டு, அவற்றின் புற்பயிரை மட்டும் தாம் எடுத்துக் கொண்டு வாழ்ந்து வந்ததனால் 'கூழாண்டார்' எனப் பெயர் பெற்றனர். பழையனூர் வேளாண் பெருமக்களின் அறங்கூறவையம் (நீதி விசாரணைச் சபை), இப்போதுள்ள 'கன்னி குட்டை' என்னும் பகுதியில் இருந்தது. இங்கு ஒரு கோயில் இருந்த அடையாளம் இன்றும் உள்ளது. இக் கோயிலையே 'சாட்சி பூத ஈசுவரர் ஆலயம்' என்றும், 'சாட்சி நாத ஈசுவரர் கோயில்' என்றும் வழங்குகின்றனர். இஃது அண்மைக் காலம் வரையிற் சிதைந்த நிலையில் இருந்து வந்து, இப்போது திருப் பணிகள் செய்யப் பெற்று வருகின்றது. இக் கோயிற் சிவலிங்கத்தின் முன்னிலையிலேயே 'பழையனூர்க் கூழாண்டார் மரபினர்' வணிகனுக்குச் சத்தியம் செய்து கொடுத்தனர் என்றும், இந்தக் கோயிலின் முன்னிலையிலேயே தீக்குழி வளர்த்து உயிர் துறந்தனர் என்றும் தெரிகின்றது. தீக்குளித்த குழி இப்போது நீலி குளம் என்னும் ஒரு குளமாக இருக்கின்றது. குளக்கரை மீது சாட்சி பூத ஈசுவரர் கோயிலின் எதிரில், கற்பாறை யொன்றில் 70 வேளாளர்களுடைய உ

வங்களும் செதுக்கப் பெற்றுக் காணப்படுகின்றன. திருவாலங்காட்டுச் சுடு காட்டில் 20 அடி அகலமும், 10 அடி உயரமும் கொண்ட பாறை ஒன்று ஒரு முனையில் அந்தரமாக நிற்கின்றது. அதனை நீலிக்கல் என இன்றும் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

பழையனூர்ப் பெருமக்கள் சத்தியத்தைக் காப்பதன் பொருட்டுப் பாய்ந்து, உயிர் துறந்த தீக் குழி அவியாது பல நாட்கள் தொடர்ந்து எரிந்தது. அதனைக் கேள்வியுற்ற தமிழ் நாட்டு மூவேந்தரும் வந்து கண்டு வியந்து விம்மிதமுற்றுநின்றனர். அவ்வியப்பின் மேலீட்டாற் சேரன், சோழன், பாண்டியன் ஆகிய மூவரும் முறையே பின்வரும் பாடல்களைப் பாடினர் என்று பெருந்தொகை என்னும் நூல், குறிப்பிடுகின்றது.

யாவரே காராளர்! யாவர் இணையாவார்!
நாவலோ நாவலோ நாவலோ! —கோவைப்
பொருப்பால் அளித்தார்க்குப் போதுமே உண்மை
நெருப்பால் அளித்தார்க்கு நேர். (1)


எல்லை பலகடந்திட்டு, எங்கும் புகழ் பூத்துத்
தொல்லை மனுக்காக்கத் தோன்றிற்றே! — கொல்லை
வழியில்ஒரு பேய்நின்று வஞ்சனையாற் செய்த
குழியில்எழு செந்தீக் கொழுந்து. (2)

பிழைத்தாரோ காராளர்? பேய்மகள் சொற்கேட்டுப்
பிழைத்தார்கள் அல்லர்; பிழைதீர்ந்தார்; — பிழைத்தார்கள்
எல்லேர்ரும் கான எரியகத்தே மூழ்கினர்
எல்லோரும் இன்றும் உளர்! (3)

## முடிவுரை:

இன்றைய உலக நாடுகளிற் பல, 1500 ஆண்டுகட்கு முன்னர் மிகவும் எளிய நிலையில், போதிய நாகரிகமும் பண்பாடும் அடையாமற் கிடந்தன. அந் நிலையில் மிகப் பழங்காலத்திலேயே, நம்முடைய நாடு எத்தகைய விழுமிய நிலையிற் சிறந்து விளங்கியது என்று அறிவதற்கு, இவ்வரிய இனிய வரலாறு ஒன்றே அமையும். இத்தகைய வரலாற்று நிகழ்ச்சி ஒன்றனை, உலகிற் பிறநாடுகளிற் கற்பனையாகக் கூட மக்கள் எண்ணிப் பார்த்திருத்தல் இயலாது. இத்தகைய சிறந்த பழம் பெரும் பண்பாட்டினராகத் திகழ்ந்த நம் முன்னோர்களின் வழி வந்த நாமும், சத்திய நெறியைக் கடைப் பிடித்து, உயர்ந்த சமயவுணர்வு மிக்கவர்களாக விளங்கி, வையத்து வாழ்வாங்கு வாழ முயலுவோமாக!

—ஆசிரியர்.



எழுபதின்மர் வேளாளர்களின் நினைவு உருவச்சிலை
பழையனூர், திருவாலங்காடு.

# தொண்டின் நெறி சிறக்க

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

மனித உலகத்தை அன்பு வழியில் நடத்தி வாழ்வாங்கு வாழச் செய்வது கடவுளின் நெறி. சமயம் வாழ்க்கையின் தத்துவம். தமிழர்களைப் பொறுத்த வரையில் சமய வாழ்வு கற்பனையன்று, பொய்யுமன்று, புனைந்துரையுமன்று. தமிழினத்தின் சமயக் கொள்கைகள் உயர்ந்த அனுபவ ரீதியான வாழ்க்கையிலிருந்து தோன்றியவை; வாழ்க்கையோடு கலந்தவை. உலகில் பல்வேறு இனங்களில் சமுதாய மறுமலர்ச்சிச் சிந்தனைகள் அரசியல் அரங்கங்களிலும், புரட்சிக் களங்களிலும், தோன்றியுள்ளன. தமிழகத்திலோ, சமுதாய மறுமலர்ச்சித் திட்டங்களை, காலத்திற்குத் தேவையான முன்னேற்றக் கொள்கைகளை, சமய நெறிக் காவலர்களாகத் திகழ்ந்த **அடியார்கள்** தமது செவ்விய வாழ்க்கையாலும், சிந்தனையாலும், உருவாக்கினார்கள்.

உலகின் பல்வேறு நாடுகளில் தோன்றிய சமுதாய முற்போக்குச் சிந்தனையாளர்களின் வரிசையில் வைத்தெண்ணப்பட வேண்டியவர் **அப்பரடிகள்**. மனித இனத்தின் ஈடேற்றத்திற்காக நடைபெற்ற பிரெஞ்சுப் புரட்சி, ரஷ்யப் புரட்சி, ஆகியனவெல்லாம் தோன்றுதற்குப் பல நூற்றுக் கணக்கான ஆண்டுகட்கு முன்பே, சான்றோர் தோன்றும் நிலமெனப் பாராட்டப்பெறும் திருமுனைப்பாடி நாட்டில் அப்பரடிகள் தோன்றித் தமிழகத்தில் புரட்சி நடத்தினர். அவருடைய புரட்சி அருள் வழிப் புரட்சி; அன்புவெள்ளம் பாய்ந்தோடிய பக்திநெறிப் புரட்சி. அந்தப் பக்தி வெள்ளத்தால் அடித்து ஒதுக்கப் பெற்ற குப்பைகள் ஏராளம், ஏராளம். ஆளும் இனம், ஆளப்படும் இனம் என்ற வேறுபாட்டை அருளியல் தலைவர் அப்பரடிகள் எதிர்க்கிறார். அவரே மக்கள் இனத்தின் விடுதலைக்கு முதன் முழக்கம் செய்தவர். **"நாம் யார்க்கும் குடியல்லோம்"** என்பது அவருடைய விடுதலை முழக்கம். இறைவனே உலகின் தலைவன், அவன் ஒருவனுக்கே நாங்கள் குடிமக்கள் என்பது அவர் கொள்கை.

சைவக் கொள்கையின்படி ஆன்மாவிற்கு வயதில்லை. உடலுக்குத்தான் வயது. இந்த உடலைப் பல்லாண்டுகள் கருவியாகக் கொண்டும் உயிர் உய்தி பெறலாம். உடலுக்கு ஏற்படுகின்ற மரணம் அறியாமையால் வருவது, நோயால் வருவது, அல்லது கூற்றுவனின் சேட்டையால் வருவது. மரணத்தை வெல்லுதல் மனிதனின் கடமை என்பதை **மார்க்கண்டேயன்** வரலாறு உணர்த்துகிறது. இன்று உலகம் முழுவதும் மரணத்தை வெல்லும் முயற்சி நடைபெறுகிறது. நம்முடைய சுதந்திர பாரத நாட்டில் நல்லாட்சியின் காரணமாக, நமன் தமர் புறமுதுகிட்டு ஓடிக்கொண்டு இருக்கிறார்கள். வாழ்நாள் வளர்ந்து கொண்டிருக்கிறது. இன்று நடைபெறும் இந்தப் புரட்சியை ஏழாம் நூற்றாண்டிலே எடுத்துக் காட்டினார் அப்பரடிகள். **"நமனையஞ்சோம்"** என்பது அவர் தம் வாக்கு.

மேலும் அப்பரடிகள் சாதி, குலம், சமய வேறுபாடு இவற்றைக் கடந்து மனித குல ஒருமைப் பாட்டை வற்புறுத்துகிறார். வற்புறுத்துவதோடு மட்டுமின்றி இவ் வேறுபாடுகளைத் தோற்றுவித்துக் கொண்டு, அவற்றிற்காக வழக்காடுகின்றவர்களைக் கடுமையாகச் சாடவும் செய்கிறார். **"சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்! கோத்திரமும் குலமும் கொண்டென் செய்வீர்!"** அடுத்து "அறு வகைச் சமயத் தவரவரைத் தேற்றும் தகையன, தேறிய தொண்டரைச் செந்நெறிக் கேற்றும் தகையன" என்றும், "ஆறொன்றிய சமயங்களின் அவ்வவர்க் கப்பொருள்கள்

வேறொன்றிலாதன" என்றும் வருவனவற்றால் அப்பரடிகளுக்குச் சமய ஒருமைப் பாட்டில் இருந்த பெருவிருப்பை நாம் புரிந்து கொள்ளலாம்.

அப்பரடிகள் அகம் நிறைந்த அன்பு கலந்த வழிபாட்டையே வற்புறுத்துகிறார். இறைவனின் திருவருளைப் பெறுவதற்கு வாயில் ஆன்மாக்களின் அன்பு. ஆன்மாக்கள், அன்பினைப் பெறுதற்குரிய வாயில் பூசனை என்பது மாதவச் சிவஞான முனிவரின் வாக்கு. "மறைமிழற்றெம் பிரான் மைந்த கேள், இறைமை நம் அருளினால் எய்தற் பாலதாம், அறைதரும் அருளும் மெய் அன்பின் ஆவது, அப் பொறை செய்பத்தியும் பூசைப் பேறரோ" என்பது காஞ்சிப் புராணப் பாடல். திருவருளைப் பெறுதற்குப் பூசனை ஒரு வாயில்; பூசையே நேரிடையாகத் துணை செய்யாது.

பூசையால் மனத்துள் கனிவும், கசிவும் தோன்றி, அன்பு வெள்ளம் பெருக்கெடுக்க வேண்டும். அந்த அன்பே தூய திருவருளைத் தரும், திருவருளைப் பெறுதற்குரிய வாயில் அன்பு. அந்த அன்பைப் பெறுதற்குரிய வாயில் பூசை; அதாவது அன்பினைத் தூண்டி வளர்க்கும் சாதனமே பூசை, இது அப்பரடிகள் நின்ற நெறி. நமக்கு அவர் நாம் வாழக் காட்டிய நெறி. ஏன்? சைவத் திருமுறைகள் அனைத்தும் அன்பு வழிபாட்டையே வற்புறுத்துகின்றன.

இறைவன் உவப்பது நாம் அன்பு மிகுதியால் இடக்கூடிய பூவினாலும், நீரினாலுமே யன்றி, வெறும் நாவிற்குச் சுவைதரும் பொருள்களைப் படைப்பதனாலன்று இன்றோ நம்முடைய திருக்கோயில்களில் பூவும், நீரும், கொடுத்து மக்கள் வழிபடும் காட்சி பெருகிக் காணவில்லை. "அன்பே சிவம்" என்பது சிவ நெறியின் முடிவு. திருமந்திரம் அருளிச் செய்த திருமூலரும் **"அன்பும் சிவமும் இரண்டென்பர், அறிவிலார்"** என்று குறிப்பிடுகிறார். சேக்கிழார் அடிகள், **"அன்பினால் இன்பம் ஆர்வார்"** என்றும் **"இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்"** என்றும் அருளிச் செய்துள்ளமை நினைந்தின்புறத்தக்கது. இறவாத இன்ப அன்பு, திருவடி இன்பத்திற்குச் சாரமாகிய அன்பு. திருவள்ளுவர் திருவடிப் பேற்றைச் **"சிறப்பு"** என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார் திருக்குறள் "பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்ப தறிவு" என்று பேசுகின்றது. அன்பு, ஆன்மா அல்லது ஆவி. சிவம் ஆண்டான். அன்பு செய்த ஆவிக்குத் தன் திருவடி இன்பினைச் சிவம் அருளும், ஆதலின் அன்பே இன்பம், "இன்பமே என்னுடைய அன்பே" என்பார் மாணிக்க வாசகர்.

இத்தகு அன்பு வழிபாட்டின் சின்னமே **கண்ணப்பர்**. அதனாலன்றோ திருவருள் இடைபத்தில் ஆள்பெறாக்கை புரை புரை அழுந்திய மாணிக்கவாசகரும் **"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பு"** என்று குறிப்பிடுகின்றார். கண்ணப்பர் வரலாற்றில் வரும் **சிவகோசரியார்** அறிவின் சின்னம், சடங்கின் சின்னம். இறைவன் மகிழ்ந்தது கண்ணப்பரின் பூசையிலேயேயாம். கண்ணப்பர் தமது திருவாயில் தண்ணீர் கொணர்ந்து உமிழ்ந்து திருமஞ்சனம் ஆட்டியதைச் சேக்கிழார் **"அன்பு உமிழ்வார்"** என்று குறிப்பிடுகின்றார், இத்தகு அன்பு வழிபாடு நாட்டிலே பெருக வேண்டும். அப்பரடிகள் குறிப்பிடுவது போலப் போதொடு நீர் சுமந்து பலர் திருக்கோயிலுக்கு வர வேண்டும். இத்தகு அன்பு வழிபாட்டு முறை வளர்வதால் மக்களுக்குள் **ஒருமைப்பாடு** பெருகும். திருத்தொண்டின் நெறி வளரும்.

இந்த அன்பை வளர்த்துக் கொள்ளும் பண்ணைகளுள் ஒன்று **சிவ பூசை.** பிறிதொன்று மக்களுக்குச் செய்யும் **தொண்டு** நம்முடைய சமய நெறி தொண்டினாலேயே வளர்ந்த ஒன்று, அப்பரடிகள் எங்கும் ஈசன் இருக்கின்றான் என்று கருதித் தொண்டு செய்யாமல், அன்பு இன்றிச் சடங்குக்காக மட்டும் கங்கையிலும், காவிரியிலும் சென்று நீராடுவதைக் கடிந்து பேசுகிறார். "கங்கையாடி

லென், காவிரியாடிலென், கொங்கு தண்கு மரித்துறை ஆடிலென், ஓங்கு பாகடல் ஓத நீர் ஆடிலென், **எங்கும் ஈசன் எனுதவர்க் கில்லையே** '' என்று குறிப்பிடுகிறார். இதைவிட முற்போக்கான குரல் வேறந்த நாட்டிலே பிறந்தது? வேறு எம்மொழியிலே பிறந்தது?

இவ்வளவுதானு? இதைவிடக் கடுமையான தாக்குதலும் உண்டு. படித்துப் பாருங்கள். ''இரப்பவர்க் கீயவைத்தார், ஈபவர்க் கருளும் வைத்தார், **கரப்பவர் தங்கட்கெல்லாம், கடுநர கங்கள் வைத்தார்**'' எனறும் பாடுகிறார். மக்கட்குத் தொண்டு செய்வது இறைவன் உவக்கும் செயல் என்பது நம் ஆன்றோர் கொள்கை. பிற்காலத்தில் புண்ணியத்தை இருவகையாகப் பிரித்தார்கள். **பசு புண்ணியம்** உயிர்களுக்குத் தொண்டு செய்வதின் மூலம் பெறக் கூடியது. **பதி புண்ணியம்** இறைவனுக்குத் தொண்டு செய்வதின் மூலம் பெறக் கூடியது. இதில் பசு புண்ணியத்திலும், பதி புண்ணியம் சிறந்தது. இக்கொள்கை தத்துவ ரீதியில் மிகவும் சிறந்தது. ஆனுல் திரிபுவாதமும் மயங்கிய பொருளும் கற்பிக்கப் பெற்றது. அதன் காரணமாக சைவ உலகத்திலிருந்து சங்க காலத்தில், சோழர் காலத்தில், நாயன்மார் காலத்தில், இருந்த தொண்டின் முறை விலகிச் சென்று விட்டது. ஆனல் சமய ஆசிரியர்களோ, சந்தான ஆசிரியர்களோ அவர்கள் அருளிய நூல்களோ திரிபுவாதக் கொள்கைக்கு ஆதாரமாக இல்லை. **சிவ ஞான போதம்** பதி புண்ணியம், பசு புண்ணியம் என்ற பாகுபாட்டைக் காட்டுகிறது. வேறு பாட்டை ஒத்துக் கொள்கிறது. ஆனுல் இந்த வேறுபாடும் சிந்தனையின் சிறப்பைப் பொறுத்த தேயன்றிச் செயலைப் பொறுத்ததன்று எனத் தெளிவிக்கின்றது.

தற்போதத் தோடு - தன்னுணர்வோடு செய்யாமல் சிவச் சிந்தனையோடு செய்ய வேண்டும். **ஆண்டவன் நினைவோடு ஆருயிர் அனைத்தையும் ஓம்புதல் வேண்டும்.** இங்ஙனம் செய்யப்பெறும் பசு புண்ணியமும், பதி புண்ணியமேயாம். இதனைச் சேக்கிழார் ''பெருமையால் தம்மை ஒப்பார் **பேணலால்** எம்மைப் பெற்றார்'' என்று கூறி விளக்குகின்றார். இக் கருத்தினையே **திரு மூலரும்** ''படமாடக் கோயிற் பகவற்கொன் றீயில் நடமாடக் கோயில் நம்பர்க் கங் காகா; நடமாடக் கோயில் நம்பர்க் கொன் றீயில் படமாடக் கோயில் பகவற்க தாமே'' என்று பாடுகிறார்.

இப்பாடலின் கருத்தை இன்றைய அஞ்சல் முறை நமக்கு உணர்த்தும். நாம் விரும்பிய ஒருவருக்குச் சேர வேண்டும் என்று விரும்பி முகவரியை எழுதி, உலகில் எங்கோ ஒரு மூலையில் இருக்கிற அஞ்சற் பெட்டியில் இட்டாலும், அது உரியவரையே சென்று சேரும். அது போலவே சிவபெருமானை நினைந்து, அவனுல் அங்கீகரிக்கப் பெற்ற எந்த ஓர் உயிர்வர்க்கத்திடமாயினும் நாம் ஒன்றைத் தருவோமானுல், அது அவனையே சென்று சேரும். இத்தகைய மிகச் சிறந்த தொண்டின் நெறியை ஏழாம் நூற்றுண்டிலேயே மிக மிகத் தெளிவாக விளக்கியவர் அப்பரடிகள்.

அப்பரடிகள் தொடங்கி வைத்த தொண்டின் நெறியை மீண்டும் தொடங்கித் தொடர்ந்து செய்யச் சைவத் திருமடங்களின் தலைவர்கள் முன்வர வேண்டும். திருக் கோயில் வரலாற்றில் ஒரு புதிய தலை முறை, புதிய வரலாறு தொடங்கும் பருவம் இது. **இறை நலம் மிக்க முதல் அமைச்சர்,** ஆட்சியில் உள்ளார். ஆணை நடத்தும் **சான்ருேர் சாரங்க பாணி முதலியார்** இறை நலம் காக்கும் பொறுப்பில் இருக்கிருர். இது நல்ல தருணம்! சைவப் பேருலகம் மலர்வதாக!

## செய்திச் சுருக்கங்கள்

**நூல் வெளியீட்டு விழா :**

திருப்போரூர் ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தான வாயிலாகச் செந்தமிழ்ச் செல்வர்-சைவசமய சிரோமணி - வித்துவான் திரு. பாலூர் கண்ணப்ப முதலியார், M.A.,B.O.L., அவர்கள் எழுதிய சேக்கிழார் பிள்ளைத் தமிழ் விளக்க விரிவுரை நூல், 22 –12 –64 அன்று மாலை சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டுவிழா மன்றத்தில், துணைவேந்தர் திரு. டாக்டர். ஆ. இலட்சுமணசாமி முதலியார் அவர்கள் தலைமையில் சிறப்புற நிகழ்ந்தது. அறநிலைய ஆணையர் திரு. M. S. சாரங்கபாணி முதலியார், B.A.B.L., அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர்கள். தமிழக முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம், B.A. B.L., அவர்கள், உரையாசிரியருக்கு ரூபா மூவாயிரத்திற்குக் காசோலை (Cheque) வழங்கியருளினர்கள். திரு. டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார், M.L.C., திரு. டாக்டர் மு. வரதராசனர், திரு. டாக்டர் மா. இராசமாணிக்கனர், திரு. கே. பாலசுப்பிரமணிய ஐயர், M.L.C., மகாவித்துவான் திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை ஆகிய பெருமக்கள் பாராட்டுரை கூறினர்கள். மயிலம் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் அவர்கள் ஆசியுரை அருளினர்கள். நமது அறநிலையத் துணையாணையர் திரு. D. இராமலிங்க ரெட்டியார், M.A.B.L., அவர்கள் அனைவருக்கும் நன்றியுரை நவின்றார்கள்.

**பாராட்டு விழா :**


காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் 'சித்தாந்த சிகாமணி' திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A.,L.T., அவர்கள், அண்மையில் நமது குடியரசுத் தலைவரால் 'நல்லாசிரியர்' எனத் தேர்ந்தெடுக்கப் பெற்றுப் பரிசும் சிறப்பும் (National award) பெற்றதனை முன்னிட்டுக் காஞ்சிமா நகரப் பொதுமக்கள் சார்பில், நமது அறநிலைய ஆணையர் உயர்திரு. M. S. சாரங்கபாணி முதலியார், B.A. B.L., அவர்கள் தலைமையில், 18 –12—64 அன்று சிறப்புற நிகழ்ந்தது. மாநிலக் கல்வித்துறை இயக்குநர் உயர்திரு. பத்மஸ்ரீ N. D. சுந்தரவடிவேலு, M.A.L.T. அவர்கள் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்கள். திரு. ந. ரா. முருகவேள், M.A., M.O.L., திரு. கவிரத்ன புலவர் காஞ்சி அமிழ்தன், திரு. ச. சிவகுமரன், M.A. ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்கள். காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள், காஞ்சித் தொண்டைமண்டல ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் ஆகிய சான்றோர் இருவரும் முறையே உருத்திராக்கத் தங்கச் சங்கிலியும், பொன்னாடையும் அனுப்பிவைத்து ஆசிபுரிந்தருளிய செய்தி, சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது.

---

## நடைபெற்ற நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| **திருவிரிஞ்சிபுரம் :** | கார்த்திகைக் கடை ஞாயிறு விழா. |
| **திருப்பெருந்துறை :** | ஆருத்ரா தரிசன மகோற்சவம். |
| **திருமயிலை :** | கபாலீச்சரம் ஏகதின லட்சார்ச்சனை விழா (26-12-64). |
| **திருவாஞ்சியம் :** | கார்த்திகை ஞாயிற்றுப் பெரு விழா. |
| **நாச்சியார் கோவில் :** | முக்கோடி உற்சவம். |
| **தென்காசி :** | பொருந்திநின்ற பெருமாள் கோயில் திருவாய்மொழித் திருநாள் |
| **பழனி :** | அருணகிரிநாதர் அருள் நெறித் துவக்க விழா. (11-12-64) |
| **லால்குடி :** | சப்தரிஷி சுவாமி கோயில் திருவாதிரை விழா. |
| **குன்றக்குடி :** | சண்முகநாதப் பெருமானுக்குச் சங்காபிஷேகம் (14-12-64) |
| **பாம்பணி :** | நாகநாத சுவாமி கோயில் சதகலச அபிஷேகம். |
| **கீழ்க் காட்டூர் :** | வச்சிர தம்பேசுவரர் கோயில் திருவாதிரை விழா. |
| **சோளிங்கபுரம் :** | திருமலைத் திருப்படி விழா. (1-1-65) |
| **தஞ்சாவூர் :** | ஸ்ரீ கோபீச்வரர் ஆராதனை விழா. (19-12-64) |

10 JAN 1966



திருச்செந்தூர் முருகன்

# 'மானம்'

அருண்மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் அவர்கள்,
ஆசிரியர்—' திருப்புகழமிர்தம்'.

மானம் என்ற ஒரு சிறந்த பண்பு தமிழகத்திலே தலைசிறந்து விளங்குவது.

மானம் என்ற ஒரு அதிகாரமே வகுத்துள்ளார் திருவள்ளுவர்.

கைபோய் வாழலாம்; கால் போய் வாழலாம்; காதுபோய் வாழலாம்; கண் போய் வாழலாம்; பல்போய் வாழலாம்; செல்வம் போய் வாழலாம்; மனைவிபோய் வாழலாம்; மக்கள் போய் வாழலாம், ஆனால் உயிர் போய் வாழ முடியுமா? முடியாது. எனவே - மனைவி, மக்கள், வீடு நிலம், புலம், கண், காது, கை, கால் இன்னோரன்ன பிற எல்லாவற்றிலும் உயர்ந்தது, சிறந்தது உயிர்.

உயர்ந்த பொருளை உள்ளே மறைமுகமாக வைப்பார்கள். நமது வீடுகளில் மேஜை நாற்காலி ஆகியவைகள் வெளியே யுள்ளன. மேஜைமீது மை புட்டி, பேனா, ரூல்கழி இவைகள் எல்லாம் வெளியே இருக்கும். விலையுயர்ந்த முத்து, ரத்னம், தங்கம், நோட்டு இவைகள் உள்ளே இருக்கும். மேஜைமீது நோட்டுகளை வைத்தால் வருகின்றவரும் போகின்றவரும் எடுத்துக்கொண்டு கம்பி நீட்டி விடுவார்கள். ஆதலால் உயர்ந்த பொருளை உள்ளே வைக்கின்றோம்.

**உயிரை உள்ளே வைத்தார்:**

அதுபோல், கை, கால், மூக்கு, காது இவைகளை வெளியே வைத்த கடவுள் எல்லாவற்றிலும் சிறந்த உயிரை உள்ளே வைத்தார். காது, மூக்கு மாதிரி உயிரை வெளியே வைத்திருந்தால் தேர்தலில் ஒருவன் நிற்க முடியுமா? இவருக்குப் போட்டியாக நின்றவன் பின்புறமாக வந்து முந்திரிக் கொட்டையைத் திருகுகின்ற மாதிரி உயிரைத் திருகி எடுத்துக்கொண்டு போய் விடுவான்.

இறைவனுக்கு உயிரின் அருமை தெரியும். அரிய உயிரை உள்ளே வைத்தார். அவருடைய கருணை, நாம் உயிருடன் வாழவேண்டுமென்பது.

இத்தகைய பெருமையும் அருமையும் படைத்த உயிரினும் மானம் பெரிது என்கிறார் திருவள்ளுவர்.

'மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின்'

கவரிமான் தன் உடம்பில் உள்ள உரோமம் விழுந்தால் உயிரை விட்டு விடும். அதுபோல் மானிகள் மானம் போனால் உயிரை விட்டுவிடுவார்கள்.

'மானம் இழந்தபின் வாழாமை முன்இனிது'

மானத்தை மதித்து வானத்தையும் மதியாத மதியுடையோர் நம் தமிழகத்தில் பலர் வாழ்ந்தார்கள்.

வடக்கே இந்த மான வுணர்ச்சி அருகியிருந்தது. அதற்குச் சான்று இந்த வரலாறு.

பாண்டவர்கள் இந்திரப் பிரஸ்தத்தில் அதி அற்புதமான நவரத்தினங்களைப் பதித்துப் பொன் மயமான ஒரு மணி மண்டபம் புதுக்கியிருந்தார்கள். அர்ச்சுனனால் காண்டவ தகனத்தில் உயிர் பெற்ற ஒரு அசுரதச்சன், **விருவுபர்வா** என்ற அசுர மன்னன் இமயச் சுனையில் இட்டிருந்த நவரத்தினங்களைப் பொதி மாடுகள் கோவேறு கழுதைகள் மீது கொணர்ந்து அம் மாமண்டபத்தைப் பல சிற்பிகளைத் துணையாகக் கொண்டு, சிந்தனைக்கும் எட்டாத வேலைப் பாடுகள் நிறைந்தனவாய்ப் பதினான்கு மாதங்களில் கட்டி முடித்தான்.

இராச சூயம் வேள்வி முடிந்தபின், துரியோதனன் தன் பரிவாரங்கள் புடை சூழ அம் மணிமண்டபத்தைக் காண வந்தான்.

**குளத்தில் இறங்கினான்; குளம் இல்லை!**

அம்மண்டபத்தின் முன்கட்டில் மேல் தள வரிசையில் தாமரைக் குளத்தை நவ மணியால் சிற்பி சித்திரித்தான். நீலமணியால் தண்ணீரையும், பச்சை மரகதத்தால் தாமரை யிலைகளையும், கோமேதகத்தால் தாமரை மலரையும், வைர வைடூரியங்களால் அன்னங்களையும், புஷ்பராகத்தால் படிகளையும், பவளம், முத்து இவைகளால் வேறு பல மலர்களையும் அமைத்து, தாமரைத் தடாகத்தை அமைத்தான். கீழே பளிங்குக்கல் தளவரிசை, அப்பளிங்கின் மீது மேலேயுள்ள தாமரைத் தடாகம் தெரிந்தது. வடநாட்டு மன்னன் துரியோதனன், அதைக் கண்டு, 'தம்பிகளே! மண்டபம் புதுக்கியவனுக்கு மதியுளதா? வழியில் குளத்தை வெட்டியுள்ளானே மடையன்' என்று மண்டபத்தைப் புதுக்கிய சிற்பியையும், புதுப்பித்த பாண்டவர்களையும் அவமதித்து, குளத்தின் நீரினால் வேட்டி நனைந்து போகும் என்று கருதி, உடையை இடை வரை தூக்கிக் கொண்டான். குளத்தில் இறங்கினான். குளம் இல்லை. எல்லோரும் சிரித்தார்கள். 'குளம் இல்லாத இடத்தில் குளம் என்று கருதி உடையை இடை வரை உயர்த்திக் கொண்டானே' என்று கூறி எள்ளி நகையாடினார்கள்.

அடுத்த கட்டில் உண்மையிலேயே குளத்தை அமைத்து வழியை இருபுறத்தும் பிரித்து விட்டிருந்தான் சிற்பி. துரியோதனன் 'தம்பியீர்! இது குளம் அன்று - இது ஏதோ கண்கட்டு வித்தை, மாயாஜாலம், நாம் அறிவுடையவர்கள்; ஏமாந்து போகக்கூடாது' என்று கூறிக் கொண்டே வேகமாகச் சென்று குளத்தில் விழுந்தான்.

இதுதான் வடநாட்டு வரலாறு.

இனித் தென்னாட்டு வரலாறு ஒன்றைக் காட்டுகிறேன்.

மூவேந்தரும், எண்திக்கும் மதிக்கும் பெரிய தனமும் மனமும் படைத்தவர் சடையப்ப வள்ளல். கம்பரையும், பல புலவர்களையும் காத்தருளிய கருணைக்கடல் அவர். அவர் வீட்டில் 'அன்று களைந்த கழுநீர் ஆயிரம் வேலி பாயும்,' என்பது பழமொழி. அத்துணைப் பெரிய அன்னதாதா அவர்.

சேர, சோழ, பாண்டியன் என்ற மூவேந்தரும் சில சமயத்தில் அவரிடம் கடன் பெறுவார்கள், அதனால் அவர் '**திரிகர்த்தராயர்**' எனப் பேர் பெற்றார். மழையென்று ஆசங்கை கொள்ளுமாறு இரவலர்க்குப் பொன் சொரியும் வள்ளற் பெருமான் அவர். அவரை நாடிவந்த வறியவன் குபேரனைப்போல் திரும்புவான். பசியால் வாடிய இலங்கைக்கு ஆயிரம் கப்பல்களில் இனமாக நெல் அனுப்பிப் பஞ்சந்தீர்த்த பரமதயாசிலர் அவர்,

சடையப்ப முதலியார் சோழ மன்னன்பால் கௌரவ அமைச்சராயும் இருந்தார். அவரது தொடையில் சிலந்தி எழுந்தது. அது காரணமாக வீட்டுடன் இருந்தார்.

விலையுயர்ந்த ஆடை கலிங்கத்தில் நெய்வார்கள். அதனால் இடவாகு பெயராக ஆடைக்கும் **கலிங்கம்** என்ற பேர் ஏற்பட்டது. கலிங்கத்திலிருந்து ஒரு நெசவாளி பல நாட்கள் நெய்த அழகிய சரிகைப் பூ வேலைகள் அமைந்த ஒரு பொன்னாடையைச் சந்தன மரப்பெட்டியில் வைத்துக்கொணர்ந்தான். சோழ மன்னனிடம் காட்டி இழை ஒன்றுக்கு ஆயிரம் பொன் என்றான். அதை வாங்கும் அளவுக்குப் பொன் அப்போது இன்மையால் சோழவேந்தன் அந்த ஆடையை வாங்கவில்லை. விலைபோகாமல் கவலையோடு திரும்பினான்.

வழியில் சடையப்ப முதலியார் அவனைக் கண்டார்.

'ஐயா நீர் எந்த ஊர்?'

'கலிங்கம்'

'உனக்கு என்ன கவலே? உணவு வேண்டுமா?'

'எனக்குச் சோற்றுக் கவலேயில்லே. வேற்றுக் கவலே யுண்டு'

'என்ன கவலே'

'அந்தக் கவலேயைத் தீர்க்க உங்களால் ஆகாது. அதற்கும் உங்களுக்கும் வெகு தூரம்'.

'என்னய்யா? உன் குறையைக் கூறு. என்னுல் முடிந்த உதவியைத் தெய்வத்தின் திருவருளேக் கொண்டு முடிப்பேன்'.

சடையப்பருடைய எளிய தோற்றத்தைக் கண்டு அவரை அலட்சியமாக எண்ணிய கலிங்கன், சந்தன மரப் பெட்டியை எடுத்து அவர் முன்னே வைத்தான். பெட்டியைத் திறந்தான். 'ஐயா! கை தொடாமல் பாருங்கள். விலேயுயர்ந்த வேட்டி. இழை ஒன்றுக்கு ஆயிரம் பொன்' என்ருன்.

முதலியார், 'ப்பூ, இவ்வளவுதானு? நல்லது, சபாபதி! இந்த இழைகளே எண்ணி, அத்தனே ஆயிரம் பொன் இவரிடம் தாமதம் இன்றிக் கொடுத்து விடு' என்ருர்.

பொன் தரப்பட்டது. வியாபாரி வியந்து நின்ருன்.

'அன்பரே! ஒற்றை வேட்டி கட்டக் கூடாதே. இது போன்ற மற்ருெரு வேட்டி இருக்கின்றதா?' என்ருர் வள்ளல்.

கலிங்கன் மேலும் ஆச்சரியப்பட்டான். அம்மம்மா! இவரைப் பார்த்தால் தோற்றத்தில் எளிமை தவழ்கின்றது. அரசனும் வாங்க முடியாத உயர்ந்த உடையை ஒரு விஞடியில் தனத்தைத் தந்து வாங்கிஞர். இன்னும் உளதோ? என்று விஞவுகின்ருர். 'எந்தப் புற்றில் என்ன பாம்பு இருக்குமோ? என்ற பழமொழி இவரளவில் சரி' என்று எண்ணிப் புருவத்தை நெறித்து நின்ருன்.

'ஐயா! இன்னும் எத்தனே ஆடைகள் தயார் ஆகின்றனவோ, அத்தனேயும் இங்குக் கொணர்ந்து கொடுத்துப் பணம் வாங்கிக்கொள்' என்று அவனுக்கு அன்னமும், சொர்ணமும் வழங்கி வழியனுப்பிஞர்.

**விலே உயர்ந்த ஆடை:**

பின்னர் நான்கு நாட்களுக்குப் பின் நீராடி, அப்புதிய பொன்னுடையை இடையில் உடுத்திக்கொண்டு சோழனுடைய பேரவையை யடைந்தார். முதலியாரை முடிமன்னன் வரவேற்றுச் சிறந்த ஆசனத்தில் இருத்திஞன். தன்னுல் வாங்க இயலாத அந்த உயர்ந்த உடையைத் தன் அமைச்சர் வாங்கியுடுத்தியிருப்பதைக் கண்டான்.

'முதலியார்வாள்! உடை என்ன விலே?'

'இழையொன்றுக்கு ஆயிரம் பொன்; மன்னருக்கு வேண்டுமாயின் கொண்டு வருமாறு கூறியுள்ளேன்'.

மன்னவன் அதிசயம் அடைந்தான். பல உடை வாங்கும் அளவுக்கு அவரிடம் தனம் குவிந்துள்ளது என்று கருதிஞன்.

'எங்கே பத்துப் பதினேந்து நாட்களாகத் தாங்கள் நமது அரசவைக்கு வரவில்லேயே?'

'தொடையில் சிலந்தி அதனுல் வர இயலவில்லே'.

'அப்படியா? சிலந்தி ஆறிவிட்டதா?

'ஆம், ஆறிவிட்டது. இன்னும் ஒரு துவரம் பருப்பு அவ்வளவு ஆறவேணும்'.

'ஓ! எங்கே அதைக் காட்டுங்கள்' என்ருன் சோழன்.

உடனே சடையப்ப வள்ளல் விலேயுயர்ந்த அந்த ஆடையை அப்படியே

கிழித்தார். 'இதோ பாருங்கள் துடைப் புண்' என்றார்.

சோழமன்னன் திடுக்கிட்டான். ஆ! ஆ! என்ன இது? இழை யொன்றுக்கு ஆயிரம் பொன் விலையுள்ள உடையைக் கிழித்து விட்டீரே!

'மன்னரே! இது அரசவை. உடையை உயர்த்தினால் மானம் அழியும். இந்த உடைபோல் ஆயிரம் வாங்கலாம். இழந்த மானத்தைத் திரும்பப் பெற முடியாது. தமிழ் மகனுக்குத் தனம் பெரிதன்று. மானம் பெரிது' என்றார்! சடையப்ப முதலியார்.

அந்த அரச சபையில் இருந்த அத்தனை பேரும் இந்த நிகழ்ச்சியைக் கண்டு கண் இமைக்காது பேராச்சரியம் உற்று அமர்ந்திருந்தார்கள். மன்னன், முதலியாருடைய மான உணர்ச்சியை மதித்தான், துதித்தான்.

நீரில் நனையும் என்று வடநாட்டு மன்னன் சபையில் உடையை உயர்த்தினான்.

**மானம் மிகச் சிறந்த பண்பு:**

துடைச் சிலந்தியைக் காட்ட உயர்ந்தவுடையைக் கிழித்தார் தென்னாட்டுப் பெருமகன். ஆதலால் மானம் மிகச் சிறந்த பண்பு.

'துடையில் ஒருசிலந்தி தோற்றுவிக்கப் பட்டின்
புடவை கிழித்த பெருங்கை'—திருக்கை
வழக்கம். (1)

'விளைவாஞ் சிலந்தியை யாடையைக் கீறி
வெளியிலிட்டும்
வளமான கீர்த்திகொள் வேளாளர் பாண்டியன்
மண்டலமே! (2)

'உற்ற தொடைப்புண்ணுக் குடைகீறிக் காட்டி
நின்றான்
கொற்றவன் முன் உன் கங்கை கோத்திரத்
தான்' (3)

தெள்ளத் தெரிந்தவர் செய்தக்கதோர் முறை
செய்யிலையோ
எள்ளத்தனை மலையத்தனை யாமென்ப தின்ற
றிந்தோம்
உள்ளற்கரிய தொடையாடை கீறியதொன்று
மொரு
வள்ளற்றகைமையொ டொத்துளதால்
தொண்டை மண்டலமே'. (4)

'வானமும் மண்ணும் அழியாது வாழ்வர் மானம்
உடைய நல்லோர்' (5)

'மானமிகு தருமத்தின் வழிநின்று' என்கின்றார்
சேக்கிழார் அடிகள்.

ஆதலின் மானம் பேணுக.

---

## செய்திச் சுருக்கம்

**திருப்பணித் தொடக்க விழா:**

தாம்பரம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயிலில், 6-12-64 ஞாயிறு மாலை, திரு. M. தணிகாசல முதலியார் B.A., அவர்கள் தலைமையில், நமது அறநிலைய ஆணையர் திரு. M. S. சாரங்கபாணி முதலியார், B.A., B.L. அவர்களால் சிறப்புற நிகழ்த்தப் பெற்றது. உதவி ஆணையர் திரு. A. இராமச்சந்திர ஐயர், M.A.,B.L. அவர்கள், கோயிலின் நந்தவனத்தில் வில்வமரம் ஒன்றை நட்டுச் சிறப்பித்தார். மணலி திரு. S. இராமகிருஷ்ண முதலியார், B.A., திரு. அய்யா சுப்பிரமணிய முதலியார், J.P., பேராசிரியர் திரு. பூ. ஆலால சுந்தரஞ் செட்டியார், M.A., திரு. க. வடிவேலாயுதம், M.A. ஆகிய பெருமக்கள் பலர் விழாவிற் கலந்துகொண்டு சிறப்பித்தனர். 'திருக்கோயில்' ஆசிரியர் ந. ரா. முருகவேள், M.A, M.O L அவர்கள் "சைவ சித்தாந்தம்" என்ற பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றினார். திருப்பணிக்கு அன்பர்கள் பலரும் முன்வந்து, அவ்விடத்திலேயே ரூ. 1500 கொடுக்க இசைந்துதவிய செய்தி, சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

திரு K. பட்சிராஜன், B.A., B.L., திருநெல்வேலி.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

உடையவரும் தம்முடைய திருப்பாவை அனுஸந்தானமும், ஆண்டாளிடம் அவர் வைத்திருந்த ப்ரதிபத்தியும், பலன் பெற்றன என்ற நன்றியால் உடல் புளகித்தார். (இவ்விருத்தாந்தம்கொண்டே ஆண்டாள் வாழித்திருநாமத்தில் 'பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே' எனப்பட்டதென்று உணர்க).

பின்னர் எம்பெருமானார் அழகர்ஸன்னதி கைங்கர்யங்களைப் பற்றி வினவி, அதனைத் தக்கார் வசம் ஒப்புவித்து, அங்கே ராமானுஜ மடம் ஒன்று நிறுவி, இளையாழ்வான் தோப்பு முதலிய பல தோப்புகள் நிறுவ ஏற்பாடுகள் செய்து, 'திருப்பல்லாண்டு' அவதரித்த கூடல் மாநகர் செல்லத் திருவுளங்கொண்டார்.

அதன்படியே 'அழகான தென்மதுரை' என்று சிறப்பாகக் கூறப்படும் கூடல் என்ற மதுரைக்கு எழுந்தருளி கிருதமாலா என்ற வைகையிலே நீராடி, திருப்பல்லாண்டு அவதரித்த காரணமாக பராத்பரனான ஸ்ரீமந் நாராயணன், தன் ஸௌந்தர்யமனைத்தும் காட்டி 'வினதை சிறுவன் சிறகென்னும் மேலாப்பின் கீழ்ப்'' பட்டர்பிரானுக்கு ஸேவை ஸாதித்த ஸ்தலத்தை, மிகவும் ஆதரத்தோடு ஸேவித்துக் கூடலழகர் ஸன்னதி சென்று அம்மல்லாண்ட திண்டோளனைப் பல்லாண்டு பல்லாண்டென்று பாடி மங்களாசாஸனம் செய்தார். கூடலழகரும் அவருக்குப் பிரஸாத மரியாதைகளெல்லாம் அருளி அனுக்ரகித்தருளினார்.

பின்னர் உடையவர் அங்கே சில காலம் தங்கி அங்குள்ள வித்வான்களோடு வாதம் செய்து பட்டர்பிரான் சாயையிலே நாராயண பரத்வத்தையும் விசிஷ்டாத்வைத சித்தாந்த ஸத்யத்தையும் நிலைநாட்டிப் பல்லாயிரவரைத் திருத்திப் பணிகொண்டு, பல்லோராலும் சிறப்பிக்கப் பெற்றார்.

அப்பால் அங்கு நின்றும் திருமோகூர் எழுந்தருளி அங்கே அனைவருக்கும் வழித்துணையாய் எழுந்தருளியிருக்கும் ''தோளுமோர் நான்குடைச் சுரிகுழல் கமலக் கட்கனிவாய்க் காளமேக'' மான திருமோகூராத்தனை ஸேவித்து அவனழகிலே மண்டியநுபவித்து அவன் கொண்ட கோயில் வலம் செய்து மகிழ்ந்தார். அங்கு நின்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் செல்லத் திருவுள்ளமாய் வந்தவர் வழிநடையிலே ''விரும்பாத கான் விரும்பி வெயிலுறைப்ப வெம்பசி நோய்கூர'' வந்த விடாயெல்லாம் தீர, பரமன் விச்ராந்தியாக எழுந்தருளியுள்ள திருத்தண்காவிலே கால் தாழ்ந்து, அம்பனையும் அன்ன நாயகியையும் ஸேவித்து அங்கே தங்கித் தம் பயணவிடாய் ஆறினார்.

அங்கு நின்றும் ஸ்ரீவில்லிபுத்தூருக்குப் பயணமாய்ச் செல்லும் வழியிலே களைப்புற்ற முதலிகள் இன்னும் வில்லிபுத்தூர் எத்தனை தூரமோ? என்று அங்கலாய்க்க, உடையவரும் 'உடன்போன தலைவி வினவத் தலைவன் இடம் அணிந்து' என்று கூறும் துறையிலே,

முத்தூரும் வெண்ணகையாய் கடந்தோம் முதுபாலைநிலம்
எத்தூரம் போரும் முன் செல்லுநின்ற தூரமெனிலிரண்டு
செய்த்தூரம் போரும் திருமல்லிநாட்டுறை தந்தவில்லி
புத்தூரும் பச்சைத்துழாய் மணநாறிய பொய்கையுமே

என்று எல்லாம் இன்னும் சற்றுத் தூரம் தான் என்று, அவர்களைத் தேற்றியழைத்துப் போய் ஸ்ரீவில்லிபுத்தூ ரடைந்தார். சற்று சிரமபரிகாரம் செய்ததுமே அனைவருக்கும் ''மென்னடையன்னம் பரந்து விளையாடும் வில்லிபுத்தூர் உறை

வான் தன் பொன்னடி காண்பதோர் ஆசை" மேலிட்டு வளர அனைவருடனும் சென்று திருமுக் குளத்திலே நீராடித் திருமண் காப்பணிந்து, வட பெருங் கோயிலுடையான் கோயிலுக் கெழுந் தருளினர். அங்கே முந்துற முன்னம் பட்டர் பிரானை பெரியாழ்வாரை "குருமுகமநதீத்ய... விஷ்ணுசித்தம் நமாம" என்ற நாதமுனி தனியனை ஸேவித்து வணங்கினர். பின்னர் "ஆளும் ஆளார் ஆழியும் சங்கும் சுமப்பார்தாம் வாளும் வில்லும் கொண்டு பின்செல்வார் மற்றில்லை" என்றபடி நின்றவனுடைய தனிமை தீரும்படி அவனுக்குப் பல்லாண்டு பாடி மங்களா சாஸனம் பண்ணித் தம்மாலும் தம்மால் திருத்தித் திருமகள் கேள் வனுக்காக்கப்பட்ட பல்லாயிரவராலும் மங்களா சாஸனம் பண்ணப்பெற்று அதனாலேதான் பெற்ற முகவிலாஸத்தால் பெரியாழ்வார் முகம் மலர்த் தியவனும் "மெய்க்கொண்டு வந்து புகுந்த வேதப் பிரானர் கிடந்தார் பைக்கொண்ட பாம்பணை யோடும் பண்டன்று பட்டினங் காப்பே" என்று அவ்வாழ்வார் திவினைகளை நோக்கி இறுமாப்போடு கூறியபடியே, அவருள்ளத்துப் போன்றே வெளி யிலும் வேதப்ரதிபாத்யனுய், ஸர்வருக்கும் உப காரகனுய், சேஷசாயியாய்க் கண்வளர்ந்தருளு மவனும், வேதப்பயன் கொள்ளவல்ல விஷ்ணு சித்தருக்கும் பிறருக்கும் நித்திய மங்களாசாஸன விஷயனுமான வடபெருங் கோயிலுடையானைப் பெரியாழ்வார் சாயையிலே தொழுது மங்களா சாஸனம் செய்து மகிழ்ந்தார்.

அங்கு நின்றும் போந்து "அல்லிநாள் தாமரை மேல் ஆரணங்கின் இன்துணைவி" யான பூமிப் பிராட்டியின் அவதாரமான "மல்லி நாடாண்ட மயில்" போன்ற வேயர் பயந்த விளக்கான ஸ்ரீ ஆண்டாளும், மன்னனும், அம்மன்னனை விரை விலே கொணர்ந்த வேகப் பறவையான வினதை சிறுவனுமாக ஏகாசனத்திலே எழுந்தருளியுள்ள சேர்த்தியழகை முதல் முன்னம் ஸேவித்து,

வாழி திருப்பாவை பாடும் மடப்பாவை
வாழியரங்க மணவாளர்– வாழியென
மாடுநிற்கும் புள்ளரையன் வாழிபெரியாழ்
பாடு நிற்கும் வேதாந்தப பா [வார்

என்று மங்களாசாஸனம் பண்ணினர். பின்னர்,

"மெல்லிய பஞ்சடியும் துவராடையும்
மேகலையும்
வல்லியை வென்ற மருங்குமுத்தாரமும்
வனமுலையும்
சொல்லிய வண்மையும் வில்லிபுத்தூ
ரம்மை தோளழகும்
முல்லையை வென்ற நகையு மெல்லா
மென்றன் முன்னிற்குமே"

என்றபடி ஸ்ரீகோதை நாச்சியாரின் குளிந்த நோக்கிலே ஈடுபட்டு, அவளை அடிமுடியாக ஸேவிக்கவுன்னி, பாடகம் சிலம்புதண்டைக ளணியப் பெற்றதும், மன்னனர் தம் செம்மை யுடைய திருக்கையால் பற்றப்பட்டதுமான அரவிந்தமலரை "நீரேற ஓட்டும்" அழகு டைத்தான திருவடிகளையும், மந்திரித்து அந்தரி யால் உடுத்தப்பெற்ற மந்திரக் கோடியுடுத்த மருங்குலையும், அதனை வளைத்து விளங்கிய மேகலாபரணத்தையும், அம்மருங்கின்ஒருபுறத்தே நீட்டி நேரே பொகட்டதும் குலுங்கும் வளை யல்களும் தோள்வளையும் கொண்டு விளங்குவது மான திருக்கையையும், அதேபோல் மருங்குலின் மறுபுறத்தே செங்கழுநீர் மலர்பிடித்த அழ கோடே விளங்கும் மற்ற திருக்கையையும், உடுக்கை நடுப்போலே நுண்ணிதாய் ஒசியும் இட்டி டையையும், அவ்விடை கிளைத்துத் தாங்கியது போன்ற இரு கொம்மை முலைகளையும், அம்மூன் றிலே கொட்டப்பெற்று ஒளிவிடும் குங்குமச் சேற்றையும், அங்கே துயல்வரும் பல்வகைக் கலன்களையும், காறை பூண்ட திருக்கழுத்தையும், திருச்செவிகளினின்றும் தொங்கியசைந்து திருத்தோள்களைத் தடவும் செவிப்பூக்களையும், கண்டத்துக்கு மேலே கொழுஞ்சோதி வட்ட மாய் விளங்கும் திருமுகத்தையும், அதிலே விளங்கும் முத்தன்னவெண்முறுவல் செய்ய வாயினையும், குமிழினை நாணச் செய்யும் திரு மூக்கையும், "கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி'ய அழகிய மண வாளன் திருக்கண் மலர்கள் போன்று காதளவும் நீண்டு, கருணையலையெறியும் திருக்கண்களையும், ப்ரத்யேக அழகுடன் விளங்கும் கஸ்தூரி திலகத் தோடு ஒளிவிடும் பிறைநுதலையும், "நீண்டு குழன்று நெய்த்து, இருண்டு, நெறிந்து நெடு

நீலம் பூண்டு பிரிந்து சரிந்து கடைசுருண்டு புகையும் நறும்பூவும் வேண்டுமல்லவெனத் தெய்வ வெறியேகமழும்" நறுங்கூந்தலையும், தனித்தனியே ஸேவித்து நின்று பரவசராய் "சூடிக்கொடுத்தவள் தொல்லருளால் வாழ்கின்ற வள்ளல்" என்று அமுதனர் பாராட்டியமை அதிசயோக்தியன்றி, யதார்த்தமே என்னும்படி நின்றார். கோதையும் தன் "கோயிலண்ணர்" தம்முடன் கூட ஒரு குடிப்பிறப்பென்னும்படி காட்ட, 'என்னைமார்' என்று கனவிலே கண்ட இழவெல்லாம் தீர, அவர் நேரே கண்முன்னே கண்டு களிப்பத் திருப்பரியட்டம் திருவாபரணம் யாவையும் ஸமர்ப்பிக்கச் செய்து, தம்வீட்டுக்கு வந்த தமையனுக்கு விருந்திடுவாள்போலே முழங்கை வழிவார மூட நெய்பெய்த பாற் சோறும், மற்றும் பல உசிதபதார்த்தங்களும் அவர் அமுது செய்தருளுதற்குப் பக்குவமாகப் பண்ணுவைத்து அவரை அமுது செய்வித்து தீர்த்தப்ரஸாதங்களும் அருளி விடை கொடுக்க, உடையவரும் மிகவும் உளம் மகிழ்ந்தவராய் ப்ரபன்னகுலமணியான ஆண்டாளை மீண்டும் ஸேவித்து அதன் பலனுகக் குலபதியை ஸேவிக்க வேணும் என்ற தீவிர ஆசை பிறக்கவே அங்கு நின்றும் புறப்பட்டுக் குருகூருக்கு விரைந்தார்.

வரும்வழியில் "புளிங்குடிக்கிடந்து வரகுண மங்கையிருந்து வைகுந்தத்துள் நின்று" என்ற படி அத்திருப்பதிகளிலே கிடப்பது இருப்பது நிற்பதாகிற அவனுடைய "போக்ய பாகத் வரையை" (துய்க்கப்படுபொருள் பக்குவமா தலில் விரைவு) எண்ணி மகிழ்ந்து, நின்ற விடமும் இருந்தவிடமுமான ஸ்ரீவைகுண்டத் தையும், வரகுணமங்கையையும் கிட்டி அப்பெரு மான்களை ஸேவித்துத் திருப்புளிங்குடி நோக்கி எழுந்தருளினர்.

"மண்ணில் வைகுந்தமான மாயவன்
மகிழ்ந்துவைகும்
எண்ணிய பதிகள் கண்டு புளிங்குடிச்
செல்லும் எல்லை
அண்ணிதாய் நின்றவாங்கோர்
அருச்சகன் கன்னிதன்னைப்
புண்ணிய நகரின் தூரம் எத்தனை
போரும் என்ன"

"கன்னியும் எதிராசன்றன் கழல்
தொழாக் காரிமாறன்
சொன்னவாய் மொழிமுன் னேத
வில்லையோ? துறந்தயோகீ!
நன்னலமிசைந்த பாட்டை எண்ணும்,
இத்தலத்தின் வண்மை
பன்னுதற் கரிதென்றேத வுகந்தப்
பதியில் தங்கா"

வழியிலே அருச்சகர் மகள் ஒருத்தி நின்று கொண்டிருந்தாள். உடையவருக்குக் குருகூர் இன்னும் எவ்வளவு தூரமோ? என்ற ஒரு சந் தேகம் உண்டாகவே, அப்பெண்ணை யழைத்து 'பெண்ணே! திருக்குருகூர் இன்னும் எவ்வளவு தூரத்திலுள்ளது?' என்று கேட்டார். அந்தப் பெண் உடையவரை ஏற இறங்கப் பார்த்தாள். அவளையறியாமலே அவள் முகத்தில் ஒரு நகை அரும்பியது. அந்நகை முகத்துடனே அவள் உடையவரை நோக்கி 'ஏன் ஸ்வாமி! தேவரீருக் குத் திருவாய் மொழி முற்றும் பாடமில்லையோ?" என்று கேட்டாள். எதிராசரும் "ஓதியிருக் கிறேன் பெண்ணே!" எனப்பதிலிறுக்க, அப் பெண் "கூவுதல் வருதல் செய்யாயே" என்று ஆழ்வார் அருளியிருக்கிருரே, மறந்து விட்டதா? அதன் பொருள் இங்கிருந்து குருகூர் கூப்பிடுதூரம் என்பதுதானே ஸ்வாமி! என்று அலக்ஷ்யமாக உரைத்தாள். உடையவரும் "ஆஹா! இது வொரு பொருள் இன்று இவளிடமிருந்து கிடைக்கப் பெற்றேமே!" என்று மகிழ்ச்சியுற்று, அப்பெண்ணுக்கு நன்றி தெரிவிக்கும் முறையில் அவளுக்குத் தெண்டன் சமர்ப்பித்தார். அப் பெண்ணும் ஒரு யதி தன்னை வணங்கியமை கண்டு ஒன்றும் புரியாதவளாய் ஓடிச்சென்று, நடந்ததைத் தன் தந்தையாருக்கறிவிக்க அவரும் வெளிவந்து, வந்தவர் உடையவர் எனத் தெரிந்து, "ஐயோ! அபசாரப் பட்டோமே! என்று வருந்திய உள் ளத்தராய், உடையவர் திருவடிகளிலே சாஷ்டாங்

கமாக விழுந்து தம் மகளையும் வணங்கச் சொல்லி, அறியாது நடந்துவிட்ட அபசாரத்தைப் பொறுத்தருளவேண்டும் என்று உடையவரைப் பிரார்த்தித்தார். உடையவரும் அவரைத் தேற்ற, அவர் உடையவரைத் தம் மனைக்கெழுந்தருளப் பண்ணினர். உடையவரும் அங்கு அன்று தங்கி "மங்கைக் கங்காழி சாத்தித் திருவுள மகிழ்ச்சியோடும் அங்கு அமுது உகந்தார்."

பின்னர் துலைவில்லி மங்கலம் சென்றார்.

நின்றிருந் தவரைச் சென்றுற வணங்கி
நிகரிலா மாட மாளிகைகள்
குன்றென வளர்ந்த குளந்தைமா யவனைக்
கோதறு தொண்டர்க ளோடும்
அன்றுற இறைஞ்சித் தென்திருப் பேரை
அமலனை அடிதொழு தகன்று
மன்றல்சேர் வகுளத் தாரினன் புகும்ஊர்
எங்கென மற்றதிற் புகுந்தார்.

(தொடரும்)

---

## செய்திச் சுருக்கங்கள்

**திருப்பெருந்துறை:** ஆளுடையார் கோயிலில் மாணிக்கவாசக சுவாமிகளுக்கு ஆருத்ரா தரிசன மஹோத்ஸவம் (9-12-64 முதல் 19-12-64 முடிய).

**இராஜமன்னார்குடி:** ஸ்ரீ ராஜகோபால சுவாமி கோயிலில், திருவத்யயன உத்ஸவம் (4-12-64 முதல் 25-12-64 முடிய).

**நாகூர்:** பிரசன்ன வேங்கடாசலபதிப் பெருமாள் கோயிலில் திருவத்யயன உத்ஸவம்.

**ஸ்ரீவில்லிபுத்தூர்:** ஸ்ரீ நாச்சியார் தேவஸ்தானத்தில், 5-12-64 முதல் 25-12-64 முடியத் திருவத்யயன உத்ஸவமும், 6-1-65 முதல் 15-1-65 முடிய ஸ்ரீ ஆண்டாள் மார்கழி நீராட்டு மகோத்ஸவமும்.

**திருவிரிஞ்சிபுரம்:** வழித்துணைநாதர் கோயிலில் கார்த்திகை மாதம் கடை ஞாயிறு விழா (12-12-64).

**நவிரம் (திரிசூலகிரி):** ஸ்ரீ கரைகண்டேசுவரர் கோயிலில், மார்கழிமாத விழாத் தொடக்கம் (15-12-64.)

**சேலம் கோட்டை:** ஸ்ரீ அழகிரிநாத சுவாமி கோயிலில், திருவத்யயனத் திருவிழா.

**தோப்புத்துறை -** ஸ்ரீ வேதநாராயணப் பெருமாள் கோயிலில், திருவத்யயன விழா.

**பூம்புகார் கீழ்த்திசைக் கலைக்கல்லூரி:** இளங்கோவடிகள் மாணவர் மன்றம் சிறப்புக் கூட்டத்தில் திரு. வித்துவான் சி. டி. கோவிந்தராசன் அவர்கள் 'குறிஞ்சிப்பாட்டு' பற்றியும், மறைத்திரு. மாணிக்கவாசக ஞான தேசிக சுவாமிகள் அவர்கள் 'மதுரைக் காஞ்சி' பற்றியும் அரிய ஆராய்ச்சிச் சொற்பொழிவு ஆற்றினார்கள். (4-12-64)

**மதுரை:** வடக்குப் பெருமாள் மேஸ்திரி தெருவில், ஸ்ரீ ஆண்டாள் இசைப்பள்ளி, திருப்பாவை திருவெம்பாவை இலவச வகுப்புத் தொடக்க 9-ஆம் ஆண்டு விழா (14-12-64).

**திருக்குற்றாலம்:** திருக்குற்றால நாத சுவாமி கோயிலில், திருவாதிரைத் திருவிழா.

**சேலம் ஆத்தூர்:** ஸ்ரீ பிரசன்ன வேங்கடேசுவரர் கோயிலில் ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி விழா.

# கோயில்

**பேராசிரியர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், M.A., B.L., M.O.L.,**

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

**கோ** என்பதற்கு அரசன் என்பது பொருள். 'கோயில்' என்பது அரசனது இல்லம் அல்லது அரசனது அரண்மனை என்ற பொருளைத் தரும். எனவே, முதலில் அரண்மனையைக் குறித்த இச் சொற்றொடர், பின்னர் உலகத்தார் அண்டத்திற்கே அரசன் எனக் கருதிய கடவுளின் ஆலயத்தைக் குறிக்க வந்தது. பிற்கால இலக்கண விதிப்படி **ஓ** என்ற உயிரெழுத்தின் பின், உயிரெழுத்து வருமானால் வகரமே உடம்படுமெய்யாக வரும். இதற்கேற்பக் 'கோவில்' என்ற வடிவமும் எழுந்தது. ஆனால் முற்காலத்தில் முதல் வரும் உயிரின் இயல்பை ஒட்டி உடம்படுமெய் வாராது இரண்டாவதாக வரும் உயிரெழுத்தின் இயல்பை ஒட்டி உடம்படுமெய் வந்தது. அப்போது சொல்லில் இரண்டாவது வந்த **இ** என்ற உயிரை ஒட்டி யகரமே உடம்படுமெய்யாக அமைந்தது. எனவே, **கோயில்** என்றது மிகப் பழைய சொல்லின் வடிவமாகும்.

'கோயில்' என்பது அரண்மனை என்ற பொருளில் சிலப்பதிகார காலத்திலும் வழங்கியது. பதிற்றுப்பத்தின் இறுதிப் பதிகமும் பட்டத்தரசியைக் **கோயிலாள்** என்றே வழங்குகிறது. பரிபாடலில் இரண்டாவது செய்யுளில் வரும் 'கோயில்' என்ற சொல்லுக்கு, **ஆலயம்** என்று உரையாசிரியர் பொருள்கொண்டிருந்தாலும், அரண்மனையே அகநகராக அமைவது வழக்கமாதலின், அங்கேயும் கோயில் என்பதற்கு அரண்மனை என்றே பொருள் கொள்வது பொருந்தும். மதுரையின் நடுவிடத்தில் நிழல் ஒருபுறமும் விழாத நிலையில் நடுப்பகலில் கணக்கிட்டு அரண்மனை கட்டினார்கள் என்று, நெடுநல்வாடையிலிருந்து அறிகிறோம். அங்கே அமைப்பு முறையை விளக்குகிற வகையில் இருந்து இவ்வாறு பொருள் கொள்வது பொருத்தமாகிறது.

ஆனால் விரைவில் கோயில் என்பது ஆலயத்திற்குப் பெயராக வழங்க வந்தது. தேவார காலத்திற்குள் பெருங்கோயில், இளங்கோயில் முதலிய கோயில் வகைகளும், ஆலய வகைகளைக் குறிப்பனவாக வழங்கத் தொடங்கிவிட்டன. **நம்மாழ்வார்** ஆண்டவன் நமக்காக ஆலயங்களில் கோயில் கொள்வதைப் பாடுகிறார். கோயில் என்றாலே சைவர்க்குச் **சிதம்பரம்** என்பதும், வைணவர்க்குத் **திருவரங்கம்** என்பதும் நினைவுக்கு வரலாயின. பெரியாழ்வார் "கோயிற் பிள்ளாய் இங்கே போதராயே" என்று பாடுகிறார். **ஸ்ரீ** கோயில் என்று ஆலயங்களையும், **ஸ்ரீ கோயில் வாரியம்** என்பது அதைப் புறங்காத்து வரும் செயற்குழுவினையும், பல்லவர் காலத்தில் இருந்தே கல்வெட்டுக்கள் பேசலாயின.

அரசர்கள் பெரிய ஆலயங்களைத் தங்களுடைய கோயில்களைப் போலவே அகநகரும் புறநகரும் அகழியும் மதிலுமாக எழுப்பி வந்தார்கள். அரசனைக் கடவுளின் பிரதிநிதியாகக் கொண்டு "திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே" என்று பேசுகின்ற நிலை பரவியபோது, பிரதிநிதியின் அரண்மனைக்கு மேலாக அல்லவா உண்மைத் தலைவரின் கோயில் அமையவேண்டும்! கோச்செங்கணான் சிவபெருமானுக்கு 70 பெருங்கோயில்கள் (மாடக்கோயில்) எழுப்பினான் என்று பாடுகிறார் **திருமங்கை மன்னன்.**

கோட்டை என்பதன் மற்றொரு வடிவமே கோட்டம் எனலாம். ஐ என்ற சொல்லுறுப்பும், அம் என்ற சொல்லுறுப்பும் ஈற்றில் மாறுபடி வரும். அதனால் கோயில் என்ற வழக்குக்கு முன், ஆலயத்தைக் கோட்டம் என்று வழங்கும் வழக்கம் மிகப் பழையது எனலாம்.

"கோழிச் சேவற் கொடியோன் **கோட்டம்**" முதலாகப் பாடுகின்றார் தம்முடைய சிலப்பதிகாரத்தில் **இளங்கோ**. அதற்கு முன்னெல்லாம் ஆலயத்திற்கு **அம்பலம்** என்பதே பெயர். இன்றும் கேரளத்தில் கோயில்களுக்கு அம்பலம் என்றே பெயர் வழங்குகிறது. "**தில்லைச் சிற்றம்பலம்**" என்ற பெயரில் அந்த அம்பலம் இன்றும் நிலைபெற்றிருக்கக் காண்கிறோம். அம்பலத்திற்குப் பொது இல் என்பது மற்றொரு பெயர். இதுவே **பொதுயில்** என்று முற்காலத்தில் வழங்கி இருத்தல் வேண்டும். பின்னர் **பொதியில்** என்ற வடிவத்தில் வழங்கி வந்தது. 'பொதியில்' என்பதற்கு எல்லோரும் பொதுவாகக் கூடுமிடம் என்பது பொருளானாலும், அவ்வாறு கூடி வழிபடுகிற ஆலயத்தையே அது குறித்தது. தனியே வீட்டில் வழிபடுகிற முறை ஒன்று, எல்லோருமாகக் கூடி வழிபடுகிற முறை இரண்டு.

இந்த வழிபாடு தீ வளர்த்துச் செய்கின்ற வேள்வி வழிபாட்டினும் வேறானது. **பலி** என்ற சொல் வந்தாலும், பூ முதலியன தூவி வழிபடுவதையே இங்கே காண்கின்றோம். எனவே, **பூப்பலி** என்ற வழக்கும் உண்டு. மதுரைக் காஞ்சி,

> "நீரும் நிலனும் தீயும் வளியும்
> மாக விசும்போ டைந்துடன் இயற்றிய
> மழுவாள் நெடியோன் தலைவனாக
> மாசற விளங்கிய யாக்கையர் சூழ்சுடர்
> வாடாப் பூவின் இமையா நாட்டத்து
> நாற்ற உணவின் உருகெழு பெரியோர்க்கு
> மாற்றரு மரபின் உயர்பலி கொடுமார்
> அந்தி விழவிற் றூரியங் கறங்க"

என்று பாடுகிறது. பூவினைக் கொண்டு செய்கின்ற வழிபாடுதான் **பூஜை** (பூ+செய்) என வடமொழியில் மாறி விட்டதெனக் கூறுவோரும் உண்டு. பூவினைச் சூடி அழகு செய்வதோடு நில்லாமல், மக்களுக்குச் செய்வது போலவே கடவுளையும் அன்போடு பாராட்டி வழிபடுகின்ற வழக்கம் அன்புநெறியாகத் தழைத்தோங்கியது. கடவுள் உலகப் பெருந் தலைவராதலின் நீராட்டல், உடையுடுத்தல், உண்டாடல், முதலியவற்றோடு நில்லாமல் குதிரையேற்றம், யானை ஏற்றம், கவரி வீசுதல் முதலிய அரச வழிபாடுகளை எல்லாம் செய்வதும் வழிபாட்டு முறையில் அடங்கிற்று. இவ்வாறு அரசவழிபாடு செய்து வரும்போது ஆலயமும் அரண்மனை போல அமையவேண்டுமல்லவா? அதற்கேற்ப ஆலயங்கள் கோயில்கள் ஆயின.

பல்லவர் காலத்தும், சோழர் காலத்தும் இவை படிப்படியாகச் சுற்றளவிலும் உயரத்திலும் வளர்ந்து அரண்மனையை விடச் சிறந்தன ஆயின. அரண்மனைகள் எல்லாம் செங்கல்லால் அமைய ஆலயங்கள் கற்றளிகளாக ஓங்கின. அதனால் கடவுளுக்குக் "**கல்வீட்டுக்காரன்**" என்ற பெயர் பொதுமக்களிடத்தில் வழங்குகிறது அண்டத்திற்குள்ளே ஆண்டவன் விளங்குகின்ற உண்மையைக் காட்டுவனவாகவும் கோயில்களின் அமைப்புகளும் கோபுரங்களும் எழுந்தன. திருவிழாக்களும் அரசரது ஊர்வலத்தையும் மிஞ்சிப் போயின. இவற்றை எல்லாம் விளக்குவதே ஆகமங்களாம். இவ்வாறு வளர்ந்த கோயில்களின் ஒப்பற்ற நிலையைக் கீழைக் கடல் தீவுகளில் காணலாம். "**அங்கோர் வாட்**", "**போராபூதூர்**" முதலிய இடங்களில் விளங்கும் கோயில்கள், அணுயுகத்தில் வாழும் உள்ளத்தையும் கவர்ந்து, ஓவென வாயைப் பிளந்து நிற்கச் செய்கின்றன.

இவ்வாறு வேத வழிபாட்டினின்றும், ஆகம வழிபாடு வேறாகி வளர்ந்தாலும், இந்திய நாட்டின் பண்பாட்டிற்கேற்ப ஒருமைப்பாடு தோன்றியது. வேள்வி, ஆகம வழிபாட்டில் புகுந்தது. ஆனால் உயிர்க்கொலை இல்லாத வேள்வி இது, வேதத்தைப் பாடுவதற்கும், ஆகமத்தில் இடம் ஏற்பட்டது. அதனை அறிந்து கொள்ளக்கூடியவர்கள் சிலரே! ஆதலால் வேதம் தமிழ் செய்த **மாறனும்**, மறைஞான முனிவராம் **திருஞான சம்பந்தரும்** தோன்றி, மேலும் ஓர் ஒற்றுமையை நிலைநாட்டிக் கடவுளன்பை எல்லோரும் பேசும் தமிழில் வளர்த்தார்கள். *

# நீறணி அம்பலவன்

(பேராசிரியர் திரு. G. சுப்பிரமணிய பிள்ளை, M.A., B.L.,)

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

ஒரு தலைமகள் ஒரு தலைமகனைத் தனியாய் ஒரு சோலையில் தற்செயலாய்ச் சந்தித்தாள். இருவரிடையும் காதல் பிறந்தது. பிறகு பல நாட்கள் அவனை அவ்வாறே அவள் சென்று கண்டு பழகி வந்தாள். எப்பொழுதும் அவனுடன் பிரியாது இருக்க முடியவில்லையே என்று வாடினாள். இது அவள் தோழிக்குத் தெரியாது. தலைவி பிரிந்து சென்று வந்த பொழுதெல்லாம் தோழி கேட்டதற்குத் தான் ஓர் அழகான மயில் நின்று ஆடுவதைச் சென்று கண்டு வந்ததாகக் கூறி உண்மையை மறைத்தாள். மகிழ வேண்டிய அதற்கு வாட்டமுறுவானேன்? என்று தோழி கேட்டபொழுது, தலைவி 'நீயும் அந்த மயிலைக் காணப் பெற்றிலையே என்று வாடினேன்' என்றாள். இதைக் கேட்டதும் தோழிக்கு ஐயம் உண்டாகியது.

ஒரு நாள் அவள் தலைவியின் பின் மறைவாகச் சென்று உண்மையை அறியலானாள். தலைவி கண்டுவந்த மயில் உண்மையில் மயில் அன்று என்பதையும், தலைவியின் காதலனே அந்த மயில் என்பதையும் தோழி உணர்ந்து கொண்டாள். அதன் பின் தலைவனே தோழியிடம் சென்று குறையிரந்து, தலைவியுடன் தன்னைச் சேர்த்துவைக்கும்படி வேண்டவும், தோழியும் குறைநேர்ந்து பகற்குறியின் கண் குறியிடத்திற்குத் தலைவியை அழைத்து வருவதாக வாக்குக் கொடுத்தாள். அவ்விதம் ஒப்புக்கொண்டபடி தலைவியைத் தலைவனிடம் எவ்வாறு அழைத்துச் செல்வது என ஆராயலானாள். தலைவனைத் தான் கண்டு கொண்டதாகத் தலைவியிடம் கூறினால், ஒரு வேளை அவள் நாணத்தால் மறைக்கக் கருதி மறுத்து விடக் கூடும். அவ்விதம் நேர்ந்து விடாதபடி அவளைத் தந்திரமாய்க் கூட்டிச் செல்ல வேண்டும்.

எனவே, 'தினைப்புனங்காத்து வருவோம், வா' என்று தோழி தலைவியை அழைக்கிறாள், தினைக் காவலைத் திடீரென்று இவள் ஏன் பெரிதாகக் கருதினாள் என்ற ஆராய்ச்சி தலைவிக்கு நிகழாதபடி, உடனே, 'நாம் விளையாடியும் வரலாம், வா' என்று அழைக்கிறாள். என்னென்ன விளையாட்டுகள்? அது மலைப் பக்கம் ஆனதால் குகை வாயிலில் கூவியழைத்து எதிரொலி கேட்டு மகிழ்தலாகிய சிலம்பெதிர் கூவுதல் என்னும் விளையாட்டு, சிறு வீடு கட்டிச் சிறு சோறு சமைத்தல், சுனைநீர் பொங்கி குளிர் புனலிற் பாய்ந்து குள்ளக் குடைந்து குதித்துக் குளித்தல், மலர்களைப் பறித்து மாலை தொடுத்தல் ஆகிய இவற்றையெல்லாம் செய்துகொண்டு பிறகு, தினமும் தலைவி கண்டதாகச் சொன்னாளே அந்த மயிலையும் பார்த்து விட்டு வரலாம் என்று தோழி அழைக்கிறாள்.

இவ்வாறு அவள் அழைப்பது எவ்விடத்திற்குத் தெரியுமா? பணிவார் வினையைப் போக்கத் திருநீறு அணியும் சிவ பெருமானின் மலையாகிய கயிலாய மலைக்குத் தான். இதோ பாடல் வருமாறு :—

"தினைவளங் காத்துச் சிலம்பெதிர் கூய்ச்
சிற்றில் முற்றிழைத்துச்
சுனைவளம் பாய்ந்து துணைமலர்
கொய்து தொழுதெழுவார்
வினைவளம் நீறெழ நீறணி
அம்பலவன் மலையிற்
புனைவளர் கொம்ப ரன்னா யன்ன
காண்டும் புனமயிலே"

—(திருச்சிற்றம்பலக்கோவை)

மயிலையுங் கண்டு வருவோம் என்று சொன்னாள், தலைவி மறுது வருவாள் என்னுங் கருத்தாலும், தனக்கு உண்மை ஒருவாறு தெரியும் என்பதைக் காட்டவும் எங்க. தலைவனையும் கண்டு வரலாம் என்று தோழி கூறுவது நாகரிகமாகாது ஆதலால், குறிப்பாக 'அன்ன காண்டும் புனமயிலே' என்றாள்.

இது சிற்றின்பத்துறையில் 'குறியிடத்துக் கொண்டு சேறல்' என்பதாகும். ஆனால் இது வெறும் அகத்துறையில் அமைந்த ஊனப் பாடல் அன்று; பேரின்பத்துறையில் அமைந்த பெரு ஞானத் திருப்பாடல் என்பதை நாம் அறிதல் வேண்டும். 'அருமையிற் சிவத்தை உயிரிடத்துய்த்தல்' என்பது இந்தப் பேரின்பத் துறையாகும். இதில் மாணிக்கவாசகர் நம்மை நேரே சிவனிடத்துக்கே அழைத்துச் சென்று சிவதரிசனம் செய்து வைக்கின்றார். தில்லைக் காட்சியைக் காட்டி நம்மைக் கயிலாய மலைக்குக் கைகாட்டி அழைக்கின்றார். சிவனை அடைவதற்குரிய வழிவகைகளை உள்ளுறையாக அமைத்து அழகுபெற அவர் காட்டுவது வியத்தற்குரியதாகும். ஆகவே 'சிவத்தை உயிரிடத்துய்த்தல்' என்று சொல்வதைவிட, 'உயிரினைச் சிவத்திடத் துய்த்தல்' என்று துறையமைதி கூறுவது மிகவும் ஏற்புடையதாக இருக்கும். இதனைச் சிறிது விளக்குவோம்:

உலகியலில் தினைவளங்காத்தல் என்பது விளைந்து கிடக்கும் தினைப்புனத்தைப் பறவைகளும் விலங்குகளும், வேடர்களும் சூறை கொண்டுவிடாமல் காப்பதாகும். பேரின்பத் துறையில், உண்மை என்னும் உழவைச் செய்து, அன்பு என்னும் விதை விதைத்துப் பொய்ம்மை எனும் களையைக் களைந்து, பொறுமை என்னும் நீரைப் பாய்ச்சித் தகவு என்னும் வேலி கட்டித் தம்மையும் நோக்கிக் கண்டு, செம்மை மனத்தவராய்ச் செயற்படுவதுதான் புனங்காத்தலாகும். இங்ஙனம் செம்மை மனத்தராய் ஒழுகும் சீவன் முத்தர்களுக்குச் சிவானந்தம் மேவிடுவதை விளக்க எழுந்ததுதான், **வள்ளியம்மை** திருக்கலியாண வரலாறு என்பதையும் நாம் இங்கு நினைவு கூர்தல் தகும். இதனை **அப்பரடிகள்** விளக்கியுள்ளமையும் ஈண்டு அறிதற்பாலது.

"மெய்ம்மையா முழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்பராகிற்
சிவகதி விளையு மன்றே."

'சிலம்பெதிர் கூவுதல்' என்பது மகளிர் விளையாட்டுக்களுள் ஒன்று. மலைக்குகை வாசலின்முன் நின்று கூவி, அங்ஙனம் கூப்பிட்ட குரலே மீண்டும் புரண்டு எதிரொலியாய்த் தம்மிடம் வரக்கண்டு சிறுமிகள் மகிழ்வார்கள். பின்னர்க் கணவன் கூறுவதையே தானும் கூறிவாழும் வாழ்க்கையை மேற்கொள்ளும் ஒரு பெண்ணுக்கு இது ஒரு நல்ல பயிற்சியாகப் பண்டைக்காலத்தில் கருதப்பட்டது. இது உலகியல். பேரின்பத்துறையில், உயிர்தன் முனைப்பு அடங்கித் தன் அறிவு இச்சை செயல்களை யெல்லாம் இறைவன் வசம் கொடுத்துவிட்டு, அவனுடைய அறிவு இச்சை செயல்களிலே அருள் அறிவு கொண்டு பணியாற்ற வேண்டும். இதற்குப் பயிற்சியாக, இதயமாகிய குகையிலே **சிவாய நம ஓம்** என்னும் ஐந்தெழுத்தோடு கூடிய ஓங்கார மந்திரத்தை ரீங்காரம் செய்யவிட்டு, எதிரொலி கேட்டு உயிர்ப்பு அடங்கியிருத்தலே சிலம்பெதிர் கூவுதல் ஆகும்.

'சிற்றில் முற்றிழைத்தல்' என்பது சிறு வீடுகட்டிச் சிறு சோறு சமைத்துச் சிறு பெண்கள் விளையாடும் விளையாட்டு; பின்னர்த் தாம் நடத்தும் இல்லற வாழ்க்கைக்கு வழிகோலுவதாக உள்ளதொரு சிறந்த பயிற்சி இது. பேரின்பத் துறையில், சீவன் முத்தர்களாக உள்ளவர்கள் இன்பமாகிய வீட்டினை இம்மையிலே அடைந்து வாழ்தல்.

சிவன் திருவடிக்குத் தொண்டு செய்து வாழ்தலே இத்தகைய நிலையைத் தரும். அதுவே இங்குச் சிற்றில் இழைத்தல் என்பதாகும்.

உலகியலில், மகளிர், பொய்கையில் குளித்துப் போது போக்குதல் 'சுனைவளம் பாய்தல்' ஆகும். பேரின்பத் துறையில் சுனை பாய்தல் என்பது, மலபரிபாக முற்ற உயிர்கள் சிவனருளில் தோய்ந்து குடைந்து குடைந்து ஆடுதலாகும். இதனைத் திருவெம்பாவைப் பாடல்களிற் பரக்கக் காணலாம்.

'துணைமலர் கொய்தல்' என்பது பெண்கள் விளையாடவும் தலையிற் சூடவும் வேண்டும் மலர்களைப் பறிப்பதாகும்; பேரின்பத் துறையில் சிவனடியார்கள் சிவனுக்குகந்த மலர்களை முறைப்படி கொய்து அர்ச்சனை செய்தலைக் குறிக்கும்.

இவையனைத்தும் சிவனை அடைவதற்குரிய நெறிமுறைகள். இவற்றைக் குறிப்பாக நமக்கு உணர்த்தியதோடு சிவனை அடைவதற்குச் சிறந்த நல்ல சாதகமான மற்றும் ஒன்றை வெளிப்படையாகவும் கூறியுள்ளார். எவ்வாறு கூறினார்? **"தொழு தெழுவார் வினைவளம் நீறெழ நீறணி அம்பலவன்"** என்றார். 'தொழாநின்று துயிலெழுவோருடைய வினையினது பெருக்கம் பொடியாகத் தன் மேனிக்கண் திருநீற்றையணியும் தில்லைச்சிற்றம்பலவன்' என்பது அதன் பொருள். துயிலெழுவார் என்றது, துயிலெழுங்காலத்தல்லது முன்னுணர்வின்மையின் உணர்வுள்ள காலத்து மறவாது நினைவார் என்றவாறு. நீறணிந்த கோலம் நெஞ்சம் பிணிக்கும் எழிலுடைமையின், அக்கோலம் தொழுதெழுவார் உள்ளத்து நீங்காது நிற்றலான் ஆண்டுள்ள வினை நீறும் என்னும் கருத்தான், வினைவளம் நீறெழ நீறணியம்பலவன் என்றார். குழந்தையினது பிணிக்குத் தாய் மருந்துண்டாற் போலத் தொழுதெழுவார் வினைக்குத் தான் நீறணிந்தான் என்க. நம்முடைய வினைச் சுமையானது மலைபோலக் குவிந்து கிடத்தலான் நாம் அணியும் திருநீறு மட்டும் அதனைப் பொடியாக்கப் போதாது என்று சிவபெருமானும் நம்மீது கொண்ட பெருங் கருணைப் பெருக்கால் திருநீறு நிறையப் பூசுகின்றான் என்க. சிவன் அணிகின்ற திருநீறு அவனது பேரருளையே காட்டுவதாகும். இதனால் சிவனை அடைவதற்குத் திருநீறு அணிவதும், சிவனது திருநீறணிந்த கோலத்தைத் துயிலெழும்போது பணிவதும், அத்திருக் கோலத்தை இடைவிடாமல் சிந்தித்தலும் சிறந்த சாதனங்களாகும். இப்பயிற்சியால் நம் வினைகளை எல்லாம் தீர்த்து வைப்பது திருநீறு என்பதை அப்பரடிகளும் குறிக்கின்றார் :-

"சந்திரற் சடையில் வைத்த
சங்கரன் சாம வேதி

அந்தரத் தமரர் பெம்மான்
ஆன்நல்வெள் ளூர்தி யான்தன்

மந்திரம் நமச்சி வாய வாக
நீ றணியப் பெற்றால்

வெந்தறும் வினையும் நோயும்
வெவ்வழல் விறகிட் டன்றே"

நீறணிந்த கோலம் நெஞ்சைப் பிணிக்கும். அதை நினைக்க நினைக்க நெஞ்சை உருக்கும். சிவன் தோளில் திருநீறு பூசியிருக்கும் கோலத்திலே மனத்தைப் பறிகொடுத்து அக்காட்சி மறையவும், நெக்கு நெக்குருகி, நீள நினைந்து தவித்து மணிவாசகர் எவ்வாறு பாடுகிறார் பாருங்கள் :-

"மாறி நின்றெனைக் கெடக்கிடந் தனையையெம்
மதியிலி மடநெஞ்சே

தேறு கின்றில மினியுனைச் சிக்கெனச்
சிவனவன் திரள்தோள்மேல்

நீறு நின்றது கண்டனை யாயினும்
நெக்கிலை இக்காயம்

கீறு கின்றிலை கெடுவதுன் பரிசிது
கேட்கவுங் கில்லேனே."

1

# 2. செங்கீரைப் பருவம்

அருவாகி யுருவாகி அருவுருவம் எனவாகி
    ஐவகைச் சத்தி தன்னால்

அரிய இந் திரஜால விச்சையோ னென்னவும்
    அலர்கதிர்ப் பருதியும்போல்

கருவாதல் இன்றியே கருவாகி யுலகெலாம்
    கரவாது காத்தளித்துக்

கடைநாளில் அவையெலாம் முடிவுசெய் எம்பிரான்
    கழலிணைப் போதில் மன்னி

ஒருவாத பேரின்ப வாரியுண் டிறுமாந்த
    ஓங்குநிலை தன்னில் நீங்கி

உலகெலாம் சைவதவ நன்னெறி பரந்துலவ
    உயர்நீற்றின் ஒளிவிளங்கத்

திருவார் செழும்புகலி வருஞான மறையவன்
    செங்கீரை ஆடியருளே !

செந்தமிழில் எழுதுமறை தந்தருள வந்தவன்
    செங்கீரை ஆடியருளே !!

2

காணார்ப சுந்துளவ மாலையணி மார்பினன்
    கரியமா மேனியானும்

கமலமா மலர்மேவு நான்முகத் தண்ணலும்
    கழலிணையும் முடியும் காணாத

வானுரும் ஏகினஉரு வாகியும் கூர்ங்கோட்டு
வன்கேழல் உருவாகியும்

வாவியும் அகழ்ந்துந்தம் ஆவிதேய்ந் தலமந்து
வாட்டமுற நின்ற முதல்வன்

ஏனோரும் இன்னவுரு இன்னநிறன் என்றியாதும்
அறியொணு இயல்பில்நிற் போன்

இமயமா மலைவல்லி யுடனுக எருதேறி
இன்னருள் வழங்க நின்ற

தேனுர்செ ழுங்கமல மாலையணி மார்பினன்
செங்கீரை ஆடியருளே !

செந்தமிழில் எழுதுமறை தந்தருள வந்தவன்
செங்கீரை ஆடியருளே !!

3

அவனிமலர் இன்பநீத் தைம்புலக் கதவடைத்து
ஆடையும் ஒழிந்த வெற்றர்

அத்தியென நாத்தியெனச் சித்தமருள் நீங்காது
அனேகாந்த வாதமிட்டுப்

புவனிமிசை வித்திடார் விளைவினையும் நோக்காது
பொழுதெலாம் உழவு செய்யும்

புல்லரில் தவமென்று பாயினை யிடுக்கியும்
புன்மயிர்த் தலைபறித்தும்

பவநெறியில் அவிசார மந்திரத் தொழிலாதி
பாவங்கள் பல பயின்ற

பாழ்அமணர் பாழியொடு பாழாக நீற்று நெறி
பார் முழுதுமாக உண்மைச்

சிவநெறி தழைத்தோங்க அவனிதழை யந்தணன்
செங்கீரை ஆடியருளே !

செந்தமிழில் எழுதுமறை தந்தருள வந்தவன்
செங்கீரை ஆடியருளே !!

[கடவுள் நம்பிக்கை இல்லாமலும், முத்தி இன்னதென அறியாமலும் சமணர் செய்த தவம், வித்திடாமல் விளைவையும் நோக்காமல் செய்யும் உழவினைப் போன்றது என்பது கருத்து.]

4

வம்புலவு நாண்மலர் கொய்திட வரங்கொண்ட
வளர்புலிக் கால் முனிவரன்

மாதவஞ் செய்தீன்ற மதலையழு தேங்குநாள்
மன்னுபாற் கடலையேவும்

எம்பிரான் நின்மலர்க் கண்ணீர் துளிக்குமுன்
ஏழையொடும் எருதேறிவந்து

இன்னருள்கு ழைத்தபொன் வள்ளமேந்தினன் எனில்
யாரளந் தறிவர் நின்சீர் ?

வெம்புமுயி ருண்டெனவு மின்றெனவும் **எழுவகையின்**
வீண் வழக்காடி நாளும்

வேதமொழியைப் பரம நாதனருளைத் தவிரும்
வெற்றரும் காணுமாறு

செம்பொருளின் நிலை தேற்ற அம்புவி யுதித்தவன்
செங்கீரை ஆடியருளே !

செந்தமிழில் எழுதுமறை தந்தருள வந்தவன்
செங்கீரை ஆடியருளே !!

[உண்டுமாம் - இல்லையுமாம் சொல்லொணுதாம் என்ற வாய்பாட்டில் ஏழு வகையாகக் காணும் சமணர்கொள்கை.]

5

களிமருவு தீஞ்சுவைச் சாறுவழியப் பசுங்
கழைமுதிர் காடுழக்கிக்

கடைவாய் குதட்டிவரும் மோட்டெருமை வாவியிற்
கருமேகம் என்ன மண்டி

அளிமருவு வள்ளிதழ்க் கமலமென் மலர்மேய
அசைதொறும் செங்கண்வரால்

அகடுற இடித்துகள மடிமடை திறந்தபால்
அலையோ டெழீஇய வாளை

துளிமருவு கொண்டல் சூழ் சோலைவளர் பூதத்தின்
சூழ்குலை யுதிர்த்து மீப்போய்ச்

சுவைமுதிர் இளந்தெங்கின் முப்புடைக் கனிசிதறி
சோதிவிண் மீனின் மீளும்

தெளிமருவு பூம்புனற் பொன்னிவள நாடன்நீ
செங்கீரை ஆடியருளே !

செந்தமிழில் எழுதுமறை தந்தருள வந்தவன்
செங்கீரை ஆடியருளே !!

## 6. வேறு

பழகிய ஞானம லர்க்கழல் காணப்
பதறி வெரீஇ யழுத

பான்மை யுணர்ந்துனை ஈன்றருள் அம்மை
பரமன் அடித்தளிர் சேர்

விழுமிய அன்பே முலையமு தாக்கிய
மேதக வதனாலே

வேதியர் மணிநீர் மூழ்கிய காலை
விரிநீர்ச் செஞ்சடை சேர்

குழகனை நினையூஉ அமுதனை எனையாள்
குருமா மணிநீயே

கொன்றைச் சடையான் அருளாற் குண்டைக்
குறட்பூ தந்தந்த

அழகிய தரளச் சிவிகை பரித்தாய்
ஆடுக செங்கீரை!

ஆரமண் ஆதர்தம் வீறழி வித்தகன்
ஆடுக செங்கீரை!!

7

பரந்த நுதற்பொலி நீற்றொளியிற்படர்
சுட்டி பதிந்தாடப்

பைங்கன கக்குழை வார்செவி ஆடப்
படர்சூ ழியம்ஆட

விருந்து செயும்எழில் முகமலர் ஆட
விழிக்கடை அருளாட

வேதம்விரித்த பசுந்தமிழ் மலர்வாய்
விரிநகை நிலவாடப்

பொருந்திய ஐம்படை மார்பிடை யாடப்
பொங்கொளி வடமாடப்

பொன்னரை ஞாணொடு கிண்கிணி ஆடப்
போற்றும் அடிச் சிறியேம்

அரந்தை கெடுத்தெமை ஆள உதித்தவன்
ஆடுக செங்கீரை !

ஆர்அமண் ஆதர்தம் வீறழி வித்தகன்
ஆடுக செங்கீரை !!

8

செம்பது மத்தவன் நாம மணிப்புனல்
தீர்த்தக் கரையதுவே

சீர்திகழ் சரவண வான்தடமாகச்
செய்தனை ! அஃதொன்றோ ?

நம்பன் அமர்ந்துறை வெள்ளி மலைத்தடம்
ஆயது நற்புகலி

நற்றமிழ் வேள்என ஆயினை நீயெனின்
நானென பாடலுனை ?

உம்பர்த மக்கும் அரும்பொரு ளாகியென்
உள்ளத் தடமலரும்

ஒருதாள் உந்தியெ ழுந்திரு கையும்
ஒருங்கு பதித்து நிமிர்ந்து

அம்பிகை செம்பொற் கிண்ணம் அளித்தவன்
ஆடுக செங்கீரை !

ஆர்அமண் ஆதர்தம் வீறழி வித்தகன்
ஆடுக செங்கீரை !!

**9**

ஆர்தர உண்டனை எச்சில் மயங்கிட என்றே நின்தாதை
அங்கண் இருந்ததொர் கோல்கொடு நீட்டவும் அஞ்சாநெஞ்சோடு

சீர்திகழ் பாடலோ டாடல னாகிச் சினமால் விடையேறித்
திருவளர் தோணிபு ரத்தர னரிவ ளணையாள் நினைவோடும்

பார்திகழப் பனிமாமலை யாளுடன் வந்தே எந்தாய்இப்
பரிசெனை யாக்கின னெனமலர் வாயின்மொ ழிந்தாய் செந்தேனே

போர்வலி யாயெனை யாள்கரு ணைப்புயல் செங்கோ செங்கீரை !
பொற்கிழி நீட்டிய அற்புத நாயக செங்கோ செங்கீரை !!

**10**

கத்துக டற்புவி ஆழ்துய ரத்தால் நொந்தே வந்தோரைக்
காத்தரு ளித்தழை பூங்கழல் மாமலகுண்டே வண்டாடி

மொய்த்திட இன்னற ஊற்றெழும் முளரிப் பைந்தார் கொண்டோனே
மூடமதிச்சிறு வேனை யணைத்தருள் தந்தாள் செந்தேனே

அத்தன் எமைத்தரும் ஐயனெ னச்சொலி யன்பாலின்பூறி
ஆயம் அழைத்தொறும் மோகம் விளைத்து மகிழ்ந் தாடும் தேவே

புத்தமு தத்தமிழ் மெத்த வளர்த்தவ செங்கோ செங்கீரை !
பொற்கிழி நீட்டிய அற்புத நாயக செங்கோ செங்கீரை !!

---

## வார வழிபாட்டுச் சிறப்புக் கூட்டம்

சென்னைத் திருமயிலை ஸ்ரீ வெள்ளீசுவரர் கோயிலின், வார வழிபாட்டுச் சிறப்புக் கூட்ட விழாவில், தவத் திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் "சமயத் தொண்டு" என்னும் தலைப்பில் மிகவும் உருக்கமான சிறந்த அருளுரைச் சொற் பொழிவு நிகழ்த்தினார்கள். வார வழிபாட்டிலும் நிகழ்ச்சியிலும் திரு. ஜி. முத்து சாமி பிள்ளை, I. A. S. (Retd) அவர்களும், திரு. ந. ரா. முருகவேள், M.A., M.O.L., அவர்களும் கலந்து கொண்டனர். அறங் காவலர் திரு. பொ. சி. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் நன்றியுரை நவின்றார்கள் திருமயிலைப் பெருமக்கள் பலர் வந் திருந்து சிறப்பித்தனர் (4-12-64).

# சங்காபிஷேகம்

(கோவை திரு. C. M. இராமச்சந்திரன் செட்டியார், B.A., B.L.)

கார்த்திகைத் திங்கள் சோமவாரத் தின்போது இறைவனுக்குச் சிறந்த விரத பூசை செய்வார்கள். அதற்குச் சோம வார விரதம் என்று பெயர். விரதம் இருப்பவர்கள் ஒரு வேளை மட்டும் உணவு அருந்தி இறைவன் கோயில் சென்று வழிபாடு செய்து விட்டுத் திரும்புவார்கள். அந்த விரதம் மிகச் சிறந்தது என்று சிவ புராணம் கூறும். அன்று சிவாலயங்களில் கங்கைகொண்டு தூய தீர்த்தம் முகந்து இறைவனுக்கு முழுக்கு நடத்துவார்கள், கார்த்திகைத் திங்களில் ஒவ்வொரு திங்கட்கிழமையும் சங்குகளைக்கொண்டு குடமுழுக்கு நடத்தி னாலும் இறுதித் திங்களன்று ஆயிரம் சங்குகளைக்கொண்டு நூற்றியெட்டு திர வியங்களை இட்டுத் தீர்த்தங்கள் முகந்து திருமுழுக்கு நடத்துவார்கள், ஓராயிரம் சங்குகளைக்கொண்டு நடத்தும் இந்தக் குடமுழுக்கு தான் சங்காபிஷேகம் என்று சொல்லப்படுகிறது.

இந்தச் சங்காபிடேகம் சோழநாட்டுச் சிவாலயங்களில் திருக்கடவூர் வீரட்டா னத்தில் வெகு தொன்மையான திரு விழாவாக நடத்தப்படுகிறது. தூய்மை யான வெண் சங்குகள் ஆயிரத்தெட்டு இந்தப் புனிதக் கோயில் பண்டாரத்தில் சேகரித்து வைக்கப்பெற்றிருக்கின்றன. அச் சங்குகளைத் தூய்மைப்படுத்தி அவை களில் திருக்கோயில் தீர்த்தத்தை இட்டு 108 திரவியங்களைப் பெய்து ஆகமப்படி வழிபாடு இயற்றி மூர்த்திக்கு முழுக் காட்டுவார்கள். அப்போது வேத பாரா யணமும், தமிழ்மறையும் ஓதப்பெறும். வழிபாடு முடிந்த பிறகு தீர்த்தம் வழங் கப்படும். ஆயிரக்கணக்கான அன்பர்கள் இதில் ஈடுபட்டுப் பிரசாதம் பெற்றுப் பேரின்பம் அடைவார்கள்.

திருக்கடவூரில் எப்போதிருந்து இந்த வழிபாடு நடக்கிறதென்று கூறமுடியாது. ஐதீகப்படி முசுகுந்த சக்கிரவர்த்தி காலத்தில் அது தொடங்கியதென்பர். அச்சக்கிரவர்த்தி திருக்கடவூர் வழிபாட் டிற்குச் சென்றபோது திருக்கடவூர் மயானத்திற்குத் தீர்த்தம் ஆடச் சென் றனராம். அத் தீர்த்தத்தில் இறைவன் ஒருவர் தான் தீர்த்தம் ஆடலாமாம். அர சன் நீராடினதும் உடல் முழுதும் ஒரு கொடிய நோய் உண்டாயிற்றும். அர சன் வருந்திக் காரணம் தெரிந்து அதற் குக் கழுவாய் வீரட்டானத்தில் சங்காபி டேகம் செய்வித்தலே ஆகும் என்று அறிந்தான். அதன்படியே 1008 சங்கு களைத் தருவித்து 108 திரவியங்களையும் சேகரித்து திருமுழுக்கு நடத்திவைத்தா ராம். அப்போது இறைவன் அம்மன்ன ருக்கு நோய்தீர்த்தருளினனும். யம பாதை நீக்கியருளின கடவூர் வீரட் டானர் கோயிலில், அது முதல் கார்த் திகை சோமவாரங்கள் தோறும் 1008 சங்கினுல் குடமுழுக்கு நடத்தப்படுகிற தாம்.

சங்குகளில் இடப்படும் திரவியங்கள் இன்னின்னவை என்று ஆகமங்கள் கூறு கின்றன. கடவூரில் ஒரு குறிப்பு வைத்தி ருக்கிறுர்கள். வேறிடங்களில் ஏறியும் இறங்கியும் உள்ளனவாம். எட்டு மலர் கள், எட்டு பத்திரங்கள், ஏழு நிறச் சரக்குகள், ஐந்து உலோகங்கள், ஒன்பது மணிகள், பப்பத்து காய்களும் கனிகளும், ஏழு பரிமளங்கள், ஒன்பது பாடாணங் கள், பூச்சுக்கள் முலாம்கள், ஏழு நதி தீர்த்தங்கள், அமுதுகள், தானியங்கள், மூலங்கள், மலைபடு பொருள்கள், கடல் படு பொருள்கள் முதலியன சேகரிக்கப் பட்டு சங்குகளில் இடப்படும். அப்படிப் பட்ட தீர்த்தங்களினுல் முழுக்கு நடத் தப்படும்.

சங்காபிடேகத்தின் அருமை அறிவதன் பொருட்டு சங்கின் இயற்கைப் பெருமை

யையும் அறிய வேண்டாமா? சங்கு ஒரு இயற்கைப் பொருள். அது உயிருள்ள பிராணியின் ஒரு உறுப்பு ஆகும். மனிதனுக்கு எலும்பும் சதையும் சேர்ந்து உடம்பு ஆகிறதல்லவா. அதுபோல சங்குப் பிராணிக்குச் சங்குக் கூடும் அதனுள் சதையும் சேர்ந்து உடம்பு ஆகிறது. நமக்கு உடல் வளரும்போது எலும்பும் சதையும் வளரும். அதுபோல சங்குப் பிராணிக்குச் சங்குக் கூடும் மெல்லிய சதையும் வளரும். நமக்கு எலும்பு சதைக்கு உள்ளே இருக்கிறது. சங்குப் பிராணிக்கு எலும்பாகிய சங்குக் கூடு சதைக்கு வெளியே இருக்கிறது. சங்குக் கூடு இன்றி சங்குப் பிராணி வளராது. சதை இறக்குமாகில் கூடு பிரிந்துவிடும். பின் வளராது, சதை மெல்லியது. தனித்தே இயங்காது. அதற்காக உள்ள கூடே அதன் வீடு போல இருக்கும். எதிரிகள் துன்புறுத்த வந்தால் சங்காகிய வீட்டுக்குள் அது பதுங்கிக் கொள்ளும். சங்குக்கூடு மிகவும் பலமுள்ளது. ஆகையால் பிற பிராணிகள் அதை இடிக்க முடியாது. நமது எலும்பைப் போலவே, சங்கும் சுண்ணாம்புச் சத்தால் ஆகியது.

சங்கு கடலில் தோன்றி வளருவது. இறந்த பிறகு அலைகளால் அடிக்கப் பட்டுக் கரையில் வந்து சேரும். சங்குப் பிராணிகளில் பலவகை உண்டு. நத்தை முதற்கொண்டு பெருஞ் சங்குவரை ஒரு இனமே. சிறிய சங்குகளை ஆற்று மணலில் காணலாம். பெருஞ் சங்குகளைப் பல நிறங்களிலும் பளபளப்புகளிலும் வடிவங்களிலும் கண்காட்சிச் சாலைகளில் காணலாம். நத்தை ஓடுகள், கிளிஞ்சல்கள் பலகறைகள், சிப்பிகள், சிறு சங்குகள், பெரிய சங்குகள் முதலியவைகள் எல்லாம் ஒரே சாதி. எல்லாம் சுண்ணாம்பு மிசிரப் பொருள் (Calcium oxide or carbonates) ஆகும். சுண்ணாம்புச் சத்தாகையில் சுடச்சுட வெண்மை ஆகும். கிளிஞ்சலிலிருந்து சுண்ணாம்பு செய்தலை அறிவோம். 'சங்கு சுட்டாலும் வெண்மை தரும்' என்பது நீதிமொழி. சங்குப் பிராணிகளில் முத்துச் சிப்பி ஒரு வகை. அதனை ஆங்கிலத்தில் Oyster shell fish என்பர். அந்தச் சிப்பிகள் தூத்துக்குடிக்கருகில் மன்னார்குடாவில் கிடைக்கும். அச்சிப்பியில் முத்து விளையும். அதுவும் மிகக் கடினமானது. அதனை ஒன்பது மணிவகைகளில் ஒன்றாகக் கொள்ளப்படும். அதனைக் கடல்படு பொருளாகக் கொண்டு மக்கள் அணியும் நகைகளுக்கும் இறைவனுக்கு அணிவிக்கும் மாலைகளுக்கும் பயன் படுத்துவார்கள். பிராணியில் உடலின் உறுப்பாக இருந்தபோதிலும் குற்றம் அற்றதாகக் கருதப்படும், முத்தைப்போலவே சங்கும் பிராணியின் உறுப்பாக இருந்தபோதிலும் சமயச் சடங்குகளுக்குப் பயன்படும். இது வியப்பு அல்லவா?

ஆகவே கோயில் வழிபாடுகளிலும், வைதீகக் கிரியைகளிலும், இல்லறச் சடங்குகளிலும் தாவரப்பொருள்களே யன்றி உயிர்களுடைய உறுப்புகளும் பயன்படுகின்றன. தாவரங்களில் நெல் முதலிய தானியங்களும் மரத்தினால் உண்டாகிய தட்டுமுட்டுச் சாமான்களும் பயன்படுகின்றன. பிராணிகளில் வெவ்வேறு உறுப்புகளாகிய தந்தம், கொம்பு, பல், தோல், எலும்பு, சங்கு, முத்து முதலியவைகள் பயன்படுகின்றன. யானையின் தந்தம், மானின் கொம்பு, புலிப்பல், கடமான் தோல், ஆமை ஓடு, மயில் பீலி, புலிச்சர்மம் முதலியவைகள் ஆளப்படுகின்றன.

இப்படி மானுடன் தன் வழிபாட்டிற்கும் வீட்டு வாழ்க்கை முதலியவைகளுக்கும் பிராணிகளின் வலிவுள்ள பொருள்கள் பயன் ஆவதை எண்ணித்தான், சிவபெருமானுக்கும் புலித்தோல் ஆடை கபால ஓடு, ஆமை ஓடு, பாம்பு முதலியவைகளை அணிவித்தான் போலும்! மற்ற நேரங்களில் அருவருப்பாக நினைக்கப்படும் உறுப்புக்கள் சில காலங்களில் தூய பொருள்களாகி விடுகின்றன.

மனிதனுக்குப் பிறப்பு முதல் இறப்பு வரையில் தொண்டு புரிந்து வருவதில் சேவை செய்யும் பொருள்களில் சங்கு என்பது ஒன்று ஆகும். குழந்தை பிறந்-

ததும், அதற்குப் பால் ஊட்டுவதற்குச் சிறு சங்கு பயன்படுகிறது. மற்ற எல்லாக் கரண்டிகளைக் காட்டிலும் சிறு வெண் சங்கே மிகவும் தூய்மையானது. பின்னர் பல சடங்குகளிலும் அது பயன் படுகிறது. ஊது சங்கு சடங்குகளில் எல்லாம் காணலாம். திருமணக் காலத்திலும் திருவிழாக் காலங்களிலும் சங்கு ஊதப்படுகிறது. பிச்சை எடுப்பவனும் சங்கு ஊதுகிறான். திருமால் கையிலும் சங்கு இருக்கிறது. மனிதன் இறந்த பிறகு பச்சைப் பல்லக்கில் போகும் போதும் சங்கு ஊதப்படுகிறது. ஆகவே மனிதன் பிறந்தது முதல் இறக்கும் வரையில் சங்கின் தொடர்பு பெறுகிறான், குழந்தைக்குச் சிறு சங்கும் முதியவருக்குப் பெரிய சங்கும் உதவுகின்றன. மனிதனோடு சங்கின் வடிவமும் வளருகிறது, என்னே தொடர்பு.

பல வாத்தியங்களிலே சங்கு வாத்தியம் ஒன்று. சிறப்பாகக் கோயில் உற்சவங்களிலே சங்க வாத்தியம் முழங்கப்பெறும். சங்கின் உள்ளே வட்டமாக உள்ள துளை நல்ல ஓசை பிறப்பதற்கு ஏதுவாக இருக்கிறது. நமது காதின் வடிவம் வெளியிலிருந்து வரும் ஒலி சிறிதும் பிசகாமல் இழுத்துக் கொள்வதற்கு ஏற்றபடி வளைவு வளைவாக உள்முறை இருக்கும். அது போலவே ஊதும் சங்கின் உள்வடிவம் இருக்கும். ஊதுவதற்கு ஏற்பட்ட சங்குக்கு நுனியில் ஒரு துளையிட்டு உலோகத்தினால் ஒரு துளைவாய் அமைப்பதினால் அது ஒரு வாத்தியம் ஆகிறது. சங்க வாத்தியம் உலகப் பிரசித்தி பெற்றது. கோயில் விழாக்களுக்குச் சிறப்பாகப் பெருமாள் கோயில்களுக்கு இது இன்றியமையாதது.

நமது நாட்டுப் பண்டைப் போர்களிலே சங்கநாதம் செய்வது ஒரு அவசியமான சின்னம். ஒவ்வொரு போர் வீரனும் ஒவ்வொரு தனிச் சங்கு வைத்திருப்பான், அச் சங்குக்குத் தனிப் பெயரும் உண்டு. பாரதப் போரில் குருக்ஷேத்திரப் பூமியில் போர்வீரர்கள் கூடினதும் போர்த் தொடக்கத்தைத் தெரியப்படுத்தச் சங்கநாதம் செய்தார்கள், இதனைக் கீதை சில சுலோகங்களினால் அழகாக வருணிக்கிறது. ஒரு சுலோகம் உதாரணமாகக் கூறுவோம்.

"பாஞ்சஜன்யம் ஹ்ருஷீகேசோ தேவ தத்தம் தனஞ்சய; பௌண்ட்ரம் தத்மௌ மகா சங்கம் பீமகர்மா வ்ருகோதர:"

இதன் பொருள் பாஞ்சசன்யத்தை ஹ்ருஷீகேசனும் (கிருஷ்ணன்) தேவதத்தத்தைத் தனஞ்சயனும் (அருச்சுனன்) ஊதினார்கள். ஆகவே ஒவ்வொரு வீரனுக்கும் ஒவ்வொரு பெயர் கொண்ட சங்கங்கள் இருந்தன என்பதாம். அவைகளின் ஒலியும் வெவ்வேறாக இருந்ததாம், திருமால் கைகளில் சங்கும் சக்கிரமும் இருந்தன. அவைகள் ஆழ்வார்களாக வருணிக்கவும் தொழவும் படுகின்றன. (ஸ்ரீரங்கம் கோயில்)

சங்கு வேறு பல வகையிலும் பயன்படுகிறது சங்கைத் தேய்த்து மருந்தாகக் கொடுப்பதுண்டு. கண்கட்டி முதலிய அழற்சிகளுக்கு சங்கை அறைத்துப் பற்று போடுவதுண்டு. மூல நோய்களுக்கு வயிற்றுக்குக் கொடுப்பதுமுண்டு.

சங்கை வளையலாக அறுத்துப் பெண்கள் கைக்காப்பாக அணிவதுண்டு. வடநாட்டில் சங்கு வளையல் சிறப்பாக மதிக்கப்படுகிறது. தென் நாட்டிலும் சில இடங்களில் சங்கு வளையல் காணலாம். பால் வேளாளரும் பால் இடையரும் சங்குக் காப்புகள் அணிவார்கள். அவைகளில் ஒன்றுவதும் மிக விலை கொடுத்து வாங்கி அணிவார்கள். ஒரு முறை அணிந்த பிறகு அதனைக் கழட்டுவதே இல்லை. முன்னாளில் சங்கு அறுப்பது ஒரு தொழிலாகவும் இருந்தது. நற்கீரனைப்பற்றி கீர் கீர் என்று சங்கை அறுப்பவர் வகுப்பு என்று கூறப்படும்,

சங்க காலம் முதற்கொண்டு தற்காலம் வரையில் இலக்கியங்கள் சங்கைப் பற்றிப் பல கருத்துக்கள் வெளியிட்டுள்ளன. சங்கு ஊதுதலைச் சிறப்பித்து வள்ளலார்

'ஊதூது சங்கே' என்ற பல்லவியில் அரிய சமயக் கருத்தை வெளியிட்டுள்ளார். இறைவன் நம்பினோரைக் கைவிட மாட்டான் என்ற கருத்தில், "கைவிட மாட்டா னென்றூதூது சங்கே" என்று பாடியுள்ளார்.

திருக்குற்றாலக் கோயிலின் வடிவம் சங்கு போன்றதென்றும் அதனைச் சுற்றியுள்ள வீதி சங்கு போல வளைந்துள்ளதென்றும் கூறுகிறார், அதனாசிரியர் திரிகூடராசப்ப கவிராயர். "சங்கணி வீதியிலே" என்பது அம்மேற்கோள். குற்றாலக் கோயிலைத் திருப்பணி செய்த போது அதன் சங்கு வடிவத்தை மாற்றக் கூடாது என்று அதன் ஆசிரியரின் பேரனார் என்னிடம் ஒருமுறை கூறினார். சங்கு கோயில் வடிவத்திற்குப் பொருத்தமாகக் காட்டப்பட்டது.

சென்ற தடவை ஈழநாட்டிற்குச் சென்றபோது பாடல் பெற்ற தலமாகிய திருக்கேதீச்சரம் வழிபடும் வாய்ப்புக் கிடைத்தது. அந்த நாளில் அந்தத் தலத்தில் புதைபொருள் ஆராய்ச்சி நடந்து கொண்டிருந்தது. இலங்கை அரசியல் பகுதியார் நிலத்தை அகழ்ந்து புதை பொருள்களை வெளியெடுத்து வைத்துக் கொண்டிருந்தார்கள். ஒரு சிறந்த ஆராய்ச்சியாளர் - தொழிலாளர்களை வைத்துக்கொண்டு நிலத்தைத் தோண்டி அடியிற் கிடைத்த அரிய பொருள்களைக் கண்காட்சியாக ஒழுங்கு படுத்தி வைத்திருந்தார். பண்டைக் காலம் அந்தத் தலம் ஒரு நகரமாக இருந்த தென்பதற்குக் கோயில் சுவர்கள், இருக்கைகள், வழிபாட்டுப் பொருள்கள், சமயச் சின்னங்கள் முதலான பலவற்றையும் கண்டோம். அவைகளிலே மிகச் சிறப்பாக இருந்தது வெண் சங்கத் தொகுதி. ஐந்நூற்றிற்கு மேலாகவே அவைகள் நல்ல நிலைமையில் இருந்தன. அலுவலாளர் கருத்தின்படி இன்னமும் தோண்டினால் குறைவுபடும் சங்குகளும் கிடைக்குமாம். அக்காலத்தில் கேதீச்சரம் கோயிலிலே 1008 சங்காபிடேகம் நடைபெற்றிருக்க வேண்டும் என்றும் அவர் சொன்னார். புதைக்கப்பட்ட பொருள்கள் 15, 20 அடி ஆழத்தில் அகப்பட்டன. அக்காலம் முதற்கொண்டே மணலும் மண்ணும் மூடின வகையில் சங்குகள் கெடாமல் இருந்தன. 1008 சங்குகளால் வழிபாடு நடந்த செய்தி எந்தக் காலத்தில் ஏற்பட்டதோ அறிய வகை கிடைக்கவில்லை. 8, 9-ஆம் நூற்றாண்டிலே சுந்தரர் இக் கோயிலைப் பாடியபோதே திருக் கேதீச்சரம் மிகச் சிறந்ததாக இருந்திருக்க வேண்டும். பூம்புகார் ஆராய்ச்சியில் காணும் சிறப்புகளில் ஒன்றாக இவ்வூரும் இருக்கலாம். சங்கை நினைவு படுத்தும் மற்றொரு திருத்தலம் தென்னாட்டில் உண்டு. அது திருக்கழுக்குன்றம் ஆகும். அந்தத்தலம் நால்வர்களாலும் பாடப் பெற்றது. மணிவாசகருக்கு இறைவனார் தன் திருக்கோலத்தைக் காட்டியருளிய புனிதத்தலம். "கோல நீ வந்து காட்டினாய் கழுக் குன்றிலே" என்று திருவாசகம் கூறும், இந்தத் தலத்தில் ஒரு அரிய தீர்த்தம் "சங்க தீர்த்தம்" என்ற பெயரில் இருக்கிறது. இத்தீர்த்தத்தில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை சங்கு உற்பத்தியாகி வெளிவருகிறதாம். இச்சங்குகள் கோயிலில் சேமிக்கப்படுமாம். இந்த ஆண்டில் கார்த்திகை இறுதித் திங்கட்கிழமை (14-12-64) யன்று திருக்கழுக்குன்றத்தில் சங்காபிடேகம் நடைபெறுகிறது. அன்பர் கோடிகள் சென்று வழிபடுவார்கள். இக் கோயிலிலும் இவ்வபிடேகம் மிகத் தொன்மையானது.

இறைவனுக்குத் திருமஞ்சனத்திற்குப் பயன்படும் சங்குகள் இருவகைப்படும். அவை வலம்புரி சங்கும் இடம்புரி சங்குமாகும். இவைகளில் வலம்புரி சங்கு மேன்மையானது. கிடைப்பதும் அரிது. வலம் புரியாகவும் இடம் புரியாகவும் அமைவது இயற்கையாகும், அப்படிப் பட்ட வலம்புரி சங்குகளைத் தேடிச் சேகரிப்பது முற்கால வழக்கம். அவைகளைப் பண்டைய ஆலயங்களில்தான் காண முடியும்.

# இல்லறம் நல்லறமாகும் வழி

[மதுரைத் திருஞான சம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்.]

ஒருவனுடைய குடும்ப வாழ்க்கை இன்ப முடையதாக அமைவதற்கும், புகழுடையதாகத் திகழ்வதற்கும், கணவன் மனைவியிடத்திலும், மனைவி கணவனிடத்திலும் மாறாத அன்பு பூண்டு இன்பத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

**இல்லற தருமங்கள்** பலவகைப்படும். அவை (1) தன்னையும் தன் குடும்பத்தையும் பேணித் தன்னுடைய பிள்ளைகளை நன்றாகப் படிக்க வைத்தல் (2) படிக்கின்ற மாணவர்களுக்கு உதவி செய்தல் (3) தவ ஒழுக்கமுடைய பெரியோர்களுக்கு உதவி செய்தல் (4) தியாக உணர்ச்சியுடைய முனிவோர்க்கு உதவி செய்தல் (5) ஆதாரமற்ற அனாதைகளுக்கு ஆதாரம் அளித்தல் (6) வறுமைப் பட்டவர்களுக்கு உண்டி முதலியவை கொடுத்து உதவுதல் (7) ஒரு கதியுமின்றி இறந்தார்க்கு ஈமக்கடன் செய்வித்து உதவுதல் (8) சுற்றத்தாரைப் பேணுதல் (9) விருந்தினரை உபசரித்தல் (10) இறந்தவர்களின் ஈடேற்றத்திற்காகச் செய்கின்ற தான தருமங்கள் (11) எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்டவன் வழிபாட்டிற்குச் செய்கின்ற உபகாரங்கள் முதலியனவாகும்.

தருமங்கள் செய்வதற்கு இன்றியமையாதது வேண்டப்படுகின்ற பொருள் நல்வழியில் ஈட்டியதாக இருக்க வேண்டும். மனதில் இன்ப அன்பு ஊற்றெடுக்கவும், பிறர் மாட்டு இரக்கம் காட்டும் கனிவு ஏற்படவும் கடவுள் வழிபாடு அவசியத்திலும் அவசியம்.

ஒருவனது மனைவியானவள் அவனது வாழ்க்கைக்கு, எல்லா வகையிலும், உறு துணை புரிவதாலேயே "வாழ்க்கைத் துணை" என்று பாராட்டப் படுகிறாள். அவளிடத்தில் என்னென்ன நலங்கள் இருந்தால், உயர்ந்த வாழ்க்கைத் துணைவியாக அமையலாம் என்பதைச் சிறிது சிந்திப்போம்.

இல்வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களைச் சேகரித்துக் கொடுக்கின்ற பொறுப்பும், குடும்பத்தின் மேல்-பார்வைக்குரிய வல்லபமும், கணவரிடத்தில் அமைந்திருத்தல் வேண்டும். ஆனால் கணவன் சேகரித்த பொருளின் அளவுக்கேற்ப, செலவு செய்கின்ற பொறுப்பும், குடும்பத்தை உள்ளதைக்கொண்டு கெட்டித்தனமாக நடத்துகின்ற நற்பண்பும், மனைவியிடத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

உலகத்தை உற்று நோக்குமிடத்து, பொருள் சேகரிப்பதில் எல்லோரும் ஒன்று போல் சேகரிக்க முடிவதில்லை என்பது தெரிகின்றது. எல்லோரும் அதிகமான பொருள் சேகரிக்க வேண்டும் என்றுழைப்பதில் யாதொரு குறையும் இல்லை, ஆனால் முயற்சியின் அளவுக்குத் தக்க பொருள் முடிகின்றதா என்று ஆராய்ந்தால் அதிகமாக சேகரிக்க உழைத்தபோது வருவாய் குறைவாகவும், அதிகமாக உழைக்காத போதுவருவாய் கூடுதலாகவும் இருக்கவும் காண்கிறோம். ஆனதால் முயற்சியின் அளவுப்படியே பொருள் ஈட்டமுடிகின்றதென்று சொல்ல முடியாமல் மயங்குகின்றோம். அல்லாமலும் ஒரு ஏழைக்குடும்பத்தில் வேறு சில குண நலங்களால், அல்லது வனப்பு நலங்களால் பெரிய சொத்துடைய ஒரு மனைவியை மணந்து தானும் சொத்துடையவர்களில் ஒருவனாகின்றான். ஒருவன் பிறக்கும் பொழுதே ஒரு பெரிய தனவந்தனுடைய வீட்டில் பிறந்து, அந்த சொத்து முழுவதற்கும் அதிபதியாகி விடுகின்றான். அதுபோலவே எளிய குடும்பத்தில் பிறந்த பெண்கள் பெரிய தனவந்தர்களுடைய வீட்டில் மணமாகி அந்தச் சொத்திற்கு உரிமையுள்ளவர்களாகி விடுகிறார்கள். பிறக்கும்பொழுதே பெரும் பொருள்

படைத்தவர்களாகத் திகழ்கின்ற பெண் மணிகளும் உண்டு. ஆகவே முயற்சியினால் மட்டும் பொருளை ஒருவனுடைய இஷ்டம் போல் ஈட்டிக்கொள்ள முடிகிறதில்லை என்பதை ஆண்களும், பெண்களும் சந்தேக விபரீதமின்றித் தெரிந்து கொள்ள வேண் டும். பொருள் ஈட்டுகின்ற ஆண்கள் மாத் திரம் இதைத் தெரிந்திருந்தால் போதாதோ என்றால் போதாது. காரணம் என்ன?

குடும்பத்தை நடத்துகின்ற பொறுப்பு வாய்ந்த இல்லாள், தன்னுடைய கணவன் அரும்பாடுபட்டு, என்ன கொண்டுவர முடிந்ததோ அதைக் கொண்டு வந்தால், பக்கத்து வீட்டுக்காரர் சம்பாதிப்பது போல், சம்பாதித்துத் தரவில்லையே என்று குறை நினையாதிருப்பதற்கு, இதுபோன்ற சில உண்மைகளைப் பெண்களும் நன்றாக உணர்ந்திருத்தல் வேண்டும். அதனாலேயே "ஈட்டும் பொருள் முயற்சி எண்ணிறந்த வாயினும் கூட்டும்படியின்றிக் கூடாவாம்" என்றும், "வருந்தி அழைத்தாலும் வாராத வாரா, பொருந்துவன போமினென்றாற் போகா" என்றும் ஔவைப் பிராட்டியார் அருளிச் செய்திருக்கிறார்.

வாழ்க்கைத் துணைவியான மனைவி கண வனுடைய வருமானத்தைக் கொண்டு மனத்திருப்தியுடன் எவ்வளவு சிக்கனமாக வும் சிறப்பாகவும் குடும்பத்தை நடத்த முடியுமோ அவ்வளவுக்கு மேம்பாடு உடையவளாகின்றாள். அது மாத்திரம் இருந்தால் போதாது. நல்ல குணமும், நல்ல செயல்களும் உடையவளாகவும் இருக்க வேண்டும். நல்ல குணமென்பது கற்பொழுக்கம் உடைமையும், வறுமை உடையாரிடத்தில் இரக்கம் உடைமையும், விருந்தினரை இனிய மொழி பேசி உபசரித் தலும், துறந்தாரைப் பேணுதலும் ஆகும். நல்ல செயல்கள் என்பது வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களைப் பத்திரப்படுத்தி வைத்தலும், உணவு சமைத்தலில் வல்லமை உடையவளாயிருத்தலும், உபசாரம் செய் தலும் ஆகும்.

இந்தக் கருத்துக்களை அடக்கியே திரு வள்ளுவர் "மனைத்தக்க மாண்புடையள் ஆகித் தற்கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத் துணை" என்று அருளிச் செய் தார். அதன் கருத்து "மனையறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகளை உடைய வளாய்த் தன்னைத் திருமணம் செய்து கொண்டவனது வருவாய்க்குத் தக்க வாழ்க்கை நடத்தி வருகின்றவளே நல்ல வாழ்க்கைத் துணைவியாகின்றாள் என்ப தாகும். மேலே கூறிய நற்குண, நற்செய் கைகளும், வரவுக்குத் தக்க செலவு செய்யும் கெட்டித்தனமும் ஒரு மனைவியிடத்தில் அமைந்து விடுமானால் அந்தக் குடும்பமே எல்லா விதத்திலும் பாக்கியம் பெற்ற குடும்பமாகும். இல்லற தருமங்கள் இனிது நடைபெற அந்த ஒரு வாய்ப்பே தேவை யானது. வாய்ப்புக்களைப் பற்றிய கவலை வேண்டாம். ஆனால் பொருளும், கல்வியும், பதவியும் புத்திக் கூர்மையும் கணவனிடத் தில் இருந்தும், மனைவியிடத்தில் மேலே கூறிய மாண்புகள் அமையாது போகு மானாலோ, அந்தக் குடும்பத்தில் ஒற்றுமை யும், ஒத்துழைப்பும் இன்றி இன்பத்திற்குப் பதிலாகத் துன்பமும், புகழுக்குப் பதிலாக இகழுமே காணப்படும். அதனாலேயே ஒருவனுக்கு அமைகின்ற பொருள்களில் தற்காப்பாகிய கற்பும், நற்குண நற்செயல் களும் உடைய பெண்ணை விட மேலான பொருள் உலகத்தில் என்ன இருக்கிறது? இதை வலியுறுத்தவே "பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும் திண்மை உண்டாகப்பெறின்" என்றும் "இல்லதென் இல்லவள் மாண்பானால், உள்ளதென் இல்லவள் மாணாக்கடை" என்றும் அருளியிருக்கிறார் திருவள்ளுவர். ஆகவே மனைவியானவள் கற்பினின்றும் வழுவாமல் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டியது முதல் கடமை யாகும். தன்னைத் திருமணம் செய்து கொண்டவனை உணவு முதலியவற்றால் உபசரித்துப் பேண வேண்டியது இரண் டாவது கடமையாகும். பிள்ளைகளைப் பேணவேண்டியது மூன்றாவது கடமை யாகும். இல்லற தருமங்களை இயன்ற அளவு செய்து தன்னுடைய குடும்பத்திற்கு எவ்வளவு புகழ் உண்டாக்க முடியுமோ அவ்வளவுக்குக் கணவனோடு ஒத்துழைக்க வேண்டியது நான்காவது கடமையாகும்.

இவை நடைபெறுவதற்கு வேண்டிய நற்குண நற்செய்கைகளை மறவாதிருக்க வேண்டியது ஐந்தாவது கடமையாகும்.

நமது முன்னோர்கள் சமையல் செய்வதற்கு வேலையாள் வைக்காமல் மனைவியையே சமையல் செய்யும்படி செய்ததில் பல நன்மைகள் உண்டு. மனைவி சமையல் செய்யும்பொழுது தன்னுடைய கணவனுக்காகவும், பிள்ளைகளுக்காகவும், அவள் அபிமானத்துடன் எடுத்துக் கொள்ளுகிற சிரத்தையை, எவ்வளவு பணம் கொடுத்தாலும், வேலைக்காரர்கள் எடுத்துக் கொள்ள மாட்டார்கள். அவர்களிடம் அவ்வளவு அபிமானம் எதிர்பார்க்க முடியாது. மனைவி கையினால் செய்கின்ற பண்டங்களின் ருசியும் செலவின் சிக்கனமும் வேலையாட்கள் செய்வதில் அமைய முடியாது. அல்லாமலும் சில குடும்பங்களில் குரோதம் காரணமாக வேலையாட்களுக்கு ஏதாவது பொருள் கொடுத்து உணவில் சேர்க்கக் கூடாத சாமான்களைச் சேர்த்து நோய் உண்டாக்கவும், மனமாற்றம் ஏற்படும்படி செய்யவும், ஏன் மரணமே உண்டாக்கவும் வேலையாட்கள் துணிந்து விடுவதையும் காண்கின்றோம். தன்னுடைய உயிர் போன்று பாதுகாக்கும் மனப்பான்மையுடைய மனைவியைப்போல் வேறு யார்தான் உறுதுணையாக இருக்க முடியும்?

தவிரவும் நமது முன்னோர்கள் குழந்தைகளைப் பராமரிக்கின்ற பொறுப்பைப் பெற்றெடுத்த தாய்மாருக்கே கொடுத்தார்களே யன்றி, அந்தப் பெரிய பொறுப்பை எந்த வேலைக்காரிக்கும் கொடுத்தார்களில்லை. ஈன்றெடுத்த தாய்மார்கள் தங்களுடைய குழந்தைகளுக்குத் தம் தம் உடலிலுள்ள பாலையே கொடுத்து வந்தார்கள். அதிலும் பலவித நன்மைகள் உண்டு. குழந்தையும், தெய்வமும் கொண்டாடுமிடத்தே என்றபடி சிறு குழந்தைகளை, யார் அதிகமாக எடுத்துப் பழகுகிறார்களோ அவரிடத்திலேதான் அந்தக் குழந்தை அபிமானமுள்ளதாக இருப்பது இயல்பு. தாய்ப்பால் உண்டவர்கள் தாயாரிடத்தில் பழகுகின்ற நெருங்கிய பழக்கம் காரணமாக அவரிடத்தில் பேரன்பு கொண்டவர்களாக எவ்வளவு வயது முதிர்ந்த பருவத்திலும் காணப்படுகிறார்கள். ஆனால் தாய்ப்பாலுண்ணாமல் புட்டிப்பால் குடித்து வளரும் குழந்தைகள் சிறுபிராயத்திலிருந்தே தாயாரிடத்தில் அன்பில்லாதவர்களாய் புட்டிப்பால் கொடுக்கிற ஆயாவிடத்திலேயே அன்புடையவர்களாகக் காணப்படுகிறார்கள். அது மாத்திரம் அல்ல. உணவைப் பொறுத்தே சாந்த குணமும், மூர்க்க குணமும் ஏற்படுகின்றது. நம்முடைய முன்னோர்கள் இதனுடைய உண்மையைப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே கண்டு பகுத்தறிவு பெறவேண்டிய பிள்ளைகளுக்கு பகுத்தறிவில்லாத மிருகத்தின் பாலைக் கொடுக்கக் கூடாது என்று கண்டார்கள். தாய்ப்பாலைப் பெருக்குவதற்குரிய ஆகாரங்களைச் சாப்பிட்டுத் தாய்ப்பாலையே கொடுத்து பகுத்தறிவுடைய பிள்ளைகளாக வளர்த்தார்கள். தாய்ப்பாலைப் பெருக்குவதற்கு, மோர் தயிர், நீராகாரம் கஞ்சி முதலியவற்றை நிரம்பச் சாப்பிட்டார்கள் அதனால் பால் பெருகித் தங்கள் குழந்தைகளுக்கு இரண்டு மூன்று வயது வரை தாய்ப்பால் கொடுக்கக்கூடிய நிலையிலிருந்தார்கள். பால் கொடுத்து வரும்வரை மறுகுழந்தை உண்டாக ஏது கிடையாதாகையால் கவலைப்பிள்ளைகளைப் பெற்றார்கள் இல்லை. ஆனால் இப்பொழுது தாய்ப்பால் கொடுக்காத தாய்மார்களே தாங்கள் பெற்ற பிள்ளைகள் தங்கள்பால், நன்றி விசுவாசம் இல்லாதிருக்கிறார்களே என்று வருந்துகிறார்கள். மாட்டின் பாலை, அதுவும் நம்நாட்டு மாடல்லாத அந்நிய நாட்டு மாட்டின் பாலை, புட்டியில் அடைத்து, அதையும் தான் கொடாமல் பிறரைக்கொண்டு கொடுக்கவைத்தால் அதற்குரிய குணவேற்றுமை குழந்தைகளுக்கு ஏற்படும் என்பதில் என்ன சந்தேகம் இருக்கிறது. **கன்றுகள் பிராயம் வந்ததும் தாயை மறந்து விடுவதுபோல்** புட்டிப்பால் குடித்த பிள்ளைகளும், பெற்ற தாயையும் மறந்து நடப்பதில் என்ன வியப்பு இருக்கிறது. நாகரீகத்தில் தலைசிறந்த நம்முடைய பழமையான பழக்கங்களைக் கைவிட்டுப் புதுப்பழக்கங்களைக்

கையாண்டால் அதற்குரிய பலன்களையும் நாம் அனுபவிக்காமல் எப்படி இருக்க முடியும். சுய ஆட்சிபெற்ற நாம் நம்முடைய சிறந்த பழைய வழக்கங்களை மீண்டும் கையாண்டு, மக்களை மாக்கள் ஆக்காமல் மக்களை மக்களாகவே திகழச் செய்தல் வேண்டும்.

உலகத்திலுள்ள சுமார் 300 கோடி மக்களுள் ஒருவரைப்போல் இன்னொருவர் இருக்கின்றாரா என்று பார்த்தால் இல்லவே இல்லை. உருவத்தால் ஒருவருக்கொருவர் வித்தியாசமாகக் காணப்படுகின்றனர். அழகால், நிறத்தால், பேசும் திறமையால் ஒருவருக்கொருவர் மாறுபட்டுக் காணப்படுகின்றனர். உடல் அமைப்பால், உடல் வலியால், நடக்கின்ற சாயலால், எழுதுகின்ற தன்மையால், ஒழுக்கத்தால், வேறுபட்டிருக்கின்றனர். குணத்தால், அறிவால், காமம், குரோதம், மோகம், லோபம், பயம், தைரியம், முதலிய தன்மைகளாலும் ஏன் எல்லா விதத்தாலும் ஒருவருக்கொருவர் வேறுபட்டிருக்கின்றனர். அது மட்டுமா? வியாதிகள் பல் வேறு வகையாகப் பீடிக்கின்றன. பிற வாய்ப்புக்கள் எல்லாம் இருந்தும் வாழ்க்கையில் இன்பம் அனுபவிக்க முடியாத நிலையும், பிற வாய்ப்புக்கள் ஒன்றும் இல்லாவிட்டாலும், சுகமான உடலை மாத்திரம் கொண்டு வாழ்க்கையில் இன்பம் அனுபவிக்க முடிகின்ற நிலையையும் கண்ணாரக் காண்கின்றோம். இவற்றையெல்லாம் கண்டால் மாத்திரம் போதாது. அதிலிருந்து ஒரு ஒப்பற்ற உண்மையை உணர்ந்துகொள்ள வேண்டும்.

உலகத்தில் எந்தப் பெரிய வல்லமையுடைய அரசனுக்கும், எந்தப் பெரிய அறிவுடைய முனிவர்க்கும் மேம்பட்ட சக்தி ஒன்று நம்முடைய கண்களுக்குத் தோன்றாமல் இருந்து நம்மை எந்த தேசத்தில், எந்தக் குடும்பத்தில், என்ன நிலையில், எந்த உருவத்தில், எந்தத் தேதியில் பிறக்கும்படி செய்ய வேண்டுமோ அந்தப்படி பிறக்கும்படி செய்து, எவ்வளவு நாள் வசிக்க வைக்க வேண்டுமோ, அவ்வளவு நாள் வசிக்கும்படி செய்து, என்ன இன்ப துன்பம் அனுபவிக்க வேண்டுமோ அதை அனுபவிக்கும்படிசெய்து, அழைத்துக் கொள்ளுகின்ற நாளில் யாவராயினும் தடுக்கமுடியாத வகையில் விண்ணுலகத்திற்கு அழைத்துக் கொள்ளுகின்றது என்று உணரவேண்டும். அந்த சக்தியையே பரம்பொருள், ஆண்டவன், கடவுள், சிவம் என்றும் அதையே பிற பாஷைகளில், பிற பெயர்களாலும் வழங்குகின்றனர் என்றும் உய்த்துணர வேண்டும். "நம்முடைய காட்சிக்குப் புலனாகாத அந்த சக்தியே நம்மை ஆண்டு வருகிறதென்பதையும், நாம் அதற்கு அடங்கியே வாழ்க்கையை நடத்தவேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதையும், ஆண்டவன் அருளின்றி இன்பம் அனுபவிக்க முடியாதென்பதையும், ஒவ்வொரு கணவனும், ஒவ்வொரு மனைவியும், சந்தேகத்திற்கு இடமின்றி நம்பி, இல்வாழ்க்கையை நடத்திவர வேண்டும். இல்லையேல் மனதிற்கு நிம்மதி ஒருபொழுதும் ஏற்பட முடியாது.

ஒவ்வொரு வாலிபனும் தனக்கு மிகவும் அழகான, நற்குணமுள்ள மனைவி வாய்க்க வேண்டுமென்றுதான் விரும்புகிறான். ஒவ்வொரு பெண்ணும் மன்மதன் போன்ற அழகுள்ள கணவன் வாய்க்கவேண்டுமென்றுதான் விரும்புகின்றாள். ஆனால் ஆண்டவன் கூட்டிவைத்தது போலவே திருமணம் முற்றுப் பெறுகிறதைக் காண்கிறோம். இறைவன் கூட்டிவைத்ததைக் கொண்டு திருப்தியடையாமல் இருப்போமானால் மனதிற்கு நிம்மதி ஒருபொழுதும் ஏற்பட முடியாது. வாழ்க்கையில் மன நிம்மதி ஏற்படவும், கணவனுக்கு நல்ல மனைவி அமையவும், மனைவிக்கு நல்ல கணவன் வாய்க்கவும், இருவருக்கும் நல்ல பிள்ளைகள் பிறக்கவும் இருபாலாரும் செய்ய வேண்டியது என்னவென்று ஆய்ந்து அறிந்த ஆன்றோர், நமக்கு வழிகாட்டியிருக்கிறார்கள்.

மாண்புடைய மனைவியும் நன்மக்கட் பேறும் ஒருவன் தன்னுடைய முயற்சியால் பெறக்கூடியவையல்ல. தெரிந்து எடுத்துக் கொள்ளக் கூடியவையுமல்ல. அவையிரண்டும் கிடைத்தற்கரிய செல்

வங்கள் இதர பொருட்செல்வங்களே வெறும் முயற்சியால் பெறமுடியாதென் றும் ஆண்டவன் கூட்டும்படியின்றிக் கூடாவாம் என்றும் இருக்குமேயானல் நல்ல கணவன், நல்ல மனைவி, நன்மக்கட் பேறு முதலிய அரிய வாய்ப்புக்கள் ஆண் டவன் கொடுக்க நாம் பெறவேண்டுமே தவிர வேறு எந்த விதத்தாலும் பெற முடியாதனவாகும்.

இதற்கு நாம் என்ன செய்யவேண்டும். ஆண்டவனிடம் பக்தி செலுத்திப் பிரார்த் திக்க வேண்டும். அதுவே தவமாகும். அதனுல்தான் ''மேலைத் தவத்தளவே யாகுமாம் தான்பெற்ற செல்வம்'' என் றனர். கவலையை மாற்றி மனம் சாந்தி யடைய, அல்லலாகிய வாழ்க்கைக் கடலை நீந்திக் கரை சேரத் தனக்கு ஒரு ஒப்பும் உவமையும், இல்லாத ஆண்டவனது தாளைச் சேர வேண்டும் - இறைவனடி சேரவேண்டும் என்றே நமது வள்ளுவப் பெருந்தகை ''தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கல்லால் மனக்கவலை மாற்றலரிது'' என்று வற்புறுத்தினர், தாள் சேர்தல், இறைவனடி சேர்தல் என்பதெல்லாம் ஆண்டவனை வீடுகளிலும் கோயில்களிலும் வழிபடுவதும், பிரார்த் திப்பதும், அவனுடைய திருநாமத்தைச் சொல்லிக்கொண்டிருப்பதுமேயாகும். அந்த விதம் யாவரும் ஆண்டவனின் திரு நாமத்தை இயன்ற அளவு சொல்லி அவனை வழிபட்டு இல்லறத்தை நல்லறமாக நடத்தி எல்லாப் பேறுகளும் பெற்றுத் திகழத் திருவருள் பாலிக்குமாறு எல்லாம் வல்ல எம்பெருமானைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றேம்.

*



ஸ்ரீ தேவி கருமாரியம்மன், திருவேற்காடு

# தமிழர் கண்ட அறுமுகன்

டாக்டர் திரு. பா. நடராஜன் அவர்கள், எம்.ஏ., டி.லிட்.

"மனிதர்கள் கடவுளர்களைத் தங்கள் கருத்து வடிவாகப் படைக்கின்றனர்" என்றார் ஒரு மேலை நாட்டு அறிஞர். தமிழர் கண்ட பெரு இலட்சியம் இரண்டு. இதைத் திருவள்ளுவர் தெளிவாக்கிச் சென்றார். ஒன்று, வையத்துள் வாழ்வாங்கு வாழ்வது; மற்றொன்று வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட வேண்டுவது. முன்னையதற்கு அன்பு அடிப்படை; பின்னையதற்கு அருள் அடிப்படை. அன்பின் வழியது உயிர்நிலை அமைந்துள்ளது, அருளின் வழியது உறுநிலை அமைந்துள்ளது.

அடிப்படை இலட்சியங்களான அன்பும் அருளும் மலரவும், நிலை பெறவும் வேறு சில துணைக் குண நலங்களும் இன்றியமையாதன வாகின்றன.

அவற்றுள் வீரம் சிறந்தது. அன்பின் அடிப்படையில் பிறப்பதே வீரம், இதனை

"அறத்திற்கே அன்பு சார்பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை"

என்று விளக்கினார் வள்ளுவர், மறம் என்றது இங்கு வீரத்தை. ஆனால் பின்னே "பாவம்" என்று மயங்கிப் பொருள் கொண்டனர் உரையாசிரியர். தான் வாழ்ந்த பொன்னாட்டை, தான் தோன்றிய குடியைத் தற்காத்துக் கொள்வதற்கு வேண்டும் வீரம் அன்பின் அடிப்படையில் பிறப்பது, அதுபோலவே அருளுடையார்க்கே மெய்யான வீரம் பிறக்கிறது.

"மன்னுயி ரோம்பி அருள் ஆள்வாற்கு இல்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை"

என்றார் தெய்வப் புலவர்.

அடுத்து, கொடை, "இரப்பார்க் கொன்றீயாமை அச்சம்" என்றார் நாலடியாரில், ஈகையே பொருள் பெற்றான் அருள் பெறும் வழி என்னும் தமிழ் மறை, அதுவே வாழ்வில் வருகின்ற இணையற்ற இன்பம். மெய்ப்பயன், கொடுக்க முடியாத நிலையைவிடச் சாதல் நன்று என்பார் வள்ளுவர்.

ஈதலை அடுத்து அருளுக்கு வழித்துணையாகப் புகழை ஆன்றோர் கருதினர். இசையோடு வாழ்வாரே வாழ்குநராவர். ஈதல், இசைபட வாழ்தல் ஆகிய இரண்டு மல்லாது வாழ்வில் காணும் பயன் யாதுமில்லை என்று கொண்டனர். நில்லாவுலகில் நிலைபேறு தருவது பொன்றாப் புகழே என்று தமிழர் கருதினர். புகழெனின் உயிரையும் கொடுத்தனர்.

இனி கல்வி. தாம் கண்ட இன்பம் வையகம் காண வேண்டும் என்ற பெரு நோக்கை வளர்க்க வல்லது கல்வியே. அதுவே கேடில் விழுச்செல்வம் ஒருவர்க்கு; அன்புக்கும் அருளுக்கும் பொன்றாத் துணையாக நிற்பது. மனிதன் இழிதகைமையைப் போக்க வல்லது; பொருளுணரக் கட்டறுத்து வீடு பேறளிக்க வல்லது.

அன்பும் அருளும் தழைக்கத் துணைச் சாதனங்களாகிய இந்நான்கையும் தொல்காப்பியர் பெருமிதங்கள் என்றார்.

"கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே"

என்பது மெய்ப்பாட்டியல் சூத்திரம். ஆகவே அன்பு, அருள், கல்வி, வீரம், புகழ், ஈகை என்னும் இந்த ஆறும் சங்ககாலத் தமிழர்களது இகபர வாழ்வின் குறிக்கோள்களாய் விளங்கின. இந்தக்

குறிக்கோள்கள் அவர்கள் உயிரினும் சிறந்ததெனப் போற்றிய அளவிலே, நாளடைவில் அவை தெய்வ வடிவம் பெற்றன, ஆறு இலட்சியங்களும் தங்கள் அநாதிக் கடவுளாம் முருகனின் திருமுகங்கள் ஓராருக அமைந்துவிட்டன.

இது திருமுருகாற்றுப் படையைப் படிப்போர்க்குப் புலனுகும், சங்க இலக்கியத் தொகுப்புகளுள் ஒன்றெனப் படும் பத்துப் பாட்டுள் முதல் வரிசையில் இடம் பெற்று நிற்பது நக்கீரர் பாடிய திரு முருகாற்றுப் படை, ஆனல் திருமுருகாற்றுப்படை சங்க கால இலக்கிய மன்று என்றும், நெடுநல்வாடை பாடிய சங்க காலத்து நக்கீரர் வேறு, திருமுருகாற்றுப் படை பாடிய நக்கீரர் வேறு என்றும், ஆயினும் திருமுருகாற்றுப் படை பாடியவர் சங்க காலத்தை அடுத்து வந்த ஒரு புலவரேயாவார் என்றும், திருவையாபுரிப் பிள்ளையைப் போன்ற ஆராய்ச்சிப் பேராசிரியர்கள் சிற்சில அகச் சான்றுகள் கொண்டு நிறுவ முயன்றுள்ளனர்.

அது எங்ஙனமாயினும், திருமுருகாற்றுப் படையில் சங்கத் தமிழ் மணம் வீசுவதோடு, சங்க காலத்துத் தமிழரின் இலட்சியங்களும் பொன்னேபோல் போற்றப் படுவது காணப்படலாம். திருச்சீரலைவாய் என்னும் சீர்கெழு செந்தூரில் முருகன் தோன்றுவதைக் குறிப்பிடும் இடத்தில்தான் நக்கீரர் அறுமுகங்களின் உட்பொருள் விளக்கம் கொடுக்கின்ருர். அதில் சங்க காலத் தமிழரின் கண்போன்ற ஆறு இலட்சியங்களையும் ஆறுமுகங்களின் மேல் அவர் ஏற்றிச் சொல்லும் நயம் வியத்தற்குரியதாகப் பொலிகின்றது.

" தாவில் கொள்கைத் தந்தொழில் முடிமார் மனனேர்பு எழு தரு வாணிற" ஒரு முகமானது, ஆறுமுகங்களாக விரிகின்றது

முதலில்

" மாயிருண் ஞாலம்மறு வின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒரு முகம் "

இது அருள் முகம். அறிவற்ற மூலமாயைப் பொருளிலிருந்து இந்த உலகத்தை இறைவன் விளங்கச் செய்கின்றுன். தனுகரண புவன போகங்களைத் தோற்றுவிக்கிருன்; உயிர்கள் தங்கள் மலங்களில் நின்று விடுதலை பெற்று உய்ந்து இறையொளி பெறுவதற்கு, உயிர்கள்பால் கொண்ட பெருங்கருணையால்

' இருள் சூழ் அறையில் இருந்தது நாடிப்
பொருள்சூழ் விளக்கது புக்கெரிந்
தாற்போல்"

அவன் தனது ஐந்தொழிலைச் செய்கின்ருன்.

"இருள்நீக்கி எண்ணில் பிறவி கடத்தி
அருள்நீங்கா வண்ணமே ஆதி அருளும்"

என்ருர், மேலும் திருமூலர். சிவஞான சித்தியாருள்ளும் இது தெளிவிக்கப்படுகின்றது.

"சொன்ன இத்தொழில்கள் என்ன
காரணம் தோற்ற என்னின்

முன்னவன் விளையாட் டென்று
மொழிதலும் ஆம் உயிர்க்கு

மன்னிய புத்தி முத்தி
வழங்கலும், அருளால் முன்னே

துன்னிய மலங்கள் எல்லாம்
துடைப்பதும் சொல்லலாமே"

நக்கீரர் கருத்தை நன்குணர்ந்த அருணகிரியார் சுருக்கமாக " ஏறுமயிலேறி விளையாடு முகமொன்றே" என்று ஒரு அடியில் கூறிவிட்டார். நக்கீரர் குறித்த " மாயிருண் ஞாலத்துக்கு " மயிலையும், இறைவன் ஐந்தொழிலாற்றப் "பல்கதிர் விரித்த" லுக்கு விளையாடுதலையும், அருணகிரியார் முறையே சுட்டிப் போனுர். இவர்களுக்குப் பின்னே வந்த குமரகுருபரர்,

" எவ்வுயிர்க்கும்
ஊழ்வினையை மாற்றி உலவாத பேரின்ப
வாழ்வு தரும் செய்ய மலர் முகமும் "

என்று பாடிய விடத்தும் அருள் முகத்

தைக் குறித்ததாகவே கொள்ளல் வேண்டும்.

அடுத்து, கொடை முகத்தைத் திருமுருகாற்றுப்படை குறிப்பிடுகின்றது.

"ஒருமுகம்
"ஆர்வலர் ஏத்த அமர்ந்து இனிதொழுகிக்
காதலின் உவந்து வரங்கொடுத் தன்றே"

இதனைத் திருப்புகழ் ஆசிரியர்,

"கூறு மடியார்கள் வினை தீர்த்த முகமொன்றே" என்றும், கந்தர் கலிவெண்பா ஆசிரியர்

"வந்தடியிற் சேர்ந்தோர் மகிழ வரம்பலவும்
தந்தருளும் தெய்வமுகத் தாமரையும்"

என்றனர்,

மூன்றாவதாக ஞான முகத்தைக் குறிப்பிடுகின்றார். கல்வி என்னும் தொல் காப்பியரின் பெருமிதத்துக்குத் தெய்வ விளக்கமாய்ப் பொலிந்தது.

"ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வி யோர்க்கும்மே"

அருணகிரியார் இதனை,

"ஈசரொடு ஞானமொழி பேசுமுகமொன்றே" என்றும், குமரகுருபரர்

"சூழ்வோர்
வடிக்கும் பழமறைகள் ஆகமங்கள் யாவும்
முடிக்கும் கமல முகமும்"

என்றும் உரைத்தனர்.

நான்காவதாக நக்கீரர் கூறும் புகழ் முகம்

"ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்
திங்கள் போலத் திசை விளக்கும்மே"

கலை நிறைதலில் திங்கள் உவமை ஆயிற்று என்பார் உரையாசிரியர், நச்சினார்க்கினியர். வசையிலா வண்புகழைத் திங்களுக்கு உவமை கூறுதலும் தமிழ் இலக்கிய மரபாகும். புறப்பாட்டில், "உவவுமதி கண்டு விறலியும் யானும் வலவன் வெண்குடையை யொக்குமெனத் தொழுதனம்" என வருவது இங்கு ஒப்பு நோக்கற்குரியது. முருகன் பெரும்புகழ் அவன் வென்றி கொண்டு வேலொடு நிற்கும் காட்சியில் விளங்குவதைக் கண்ட அருணகிரியார்:

"குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகத்தையே" புகழ் முகமாகக் கொண்டார் என்று கருதலாகும். அங்ஙனமே

"விடுத்தகலாப்
பாச இருள்துரந்து பல்கதிர்ச் சோதிவிடும்
வாச மலர் வதன மண்டலமும்"

என்னும் குமரகுருபரர் திருவாக்கும் இருளை வென்ற ஒளி முகத்தைக் குறிப்பதாகவே கொள்ளக் கிடக்கிறது.

இனி வீரமுகம்

"ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சம முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களன்வேட்
டன்றே"

என்றார். இங்குப் புறநானூறு வகுத்த

"ஒளிறு வாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக்
கடனே"

என்னும் தமிழர் வீர இலக்கியத்தின் திருவுருவம் பொலியக் காட்டுகின்றார் நக்கீரர். தமிழன்னை ஒருத்தி கூறுவாள்;

"செம்மால் வனப்பெல்லாம் நுந்தையை
யொப்பினும், நுந்தை
நிலைப்பாலுள் ஒத்த குறியென் வாய்க்
கேட்டொத்தி
கன்றிய தெவ்வர்க் கடந்து,
களங்கொள்ளும்
வென்றி மாட்டொத்தி பெரும"

திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளின் பின் தோன்ற லன்றோ வெஞ்சூரனைத் தடிந்த வேலவன்!, இதனையே

"மாறுபடு சூரரை வதைத்த முகமொன்றே" என்று திருப்புகழிலும்,

" வின்மலிதோள்
" வெவ்வசுரர் போற்றிசைக்கும் வெஞ் சூரனைத் தடிந்து
தெவ்வர் உயிர் சிந்தும் திருமுகமும் "

என்று கந்தர் கலி வெண்பாவிலும் விளக்கினர்.

இறுதியாக அன்பு முகம், காதல் முகம்.

" ஒருமுகம்
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந்தன்றே "

என்றார் நக்கீரர், அருணகிரியார் ''வள்ளியை மணம் புரிய வந்த முகமொன்றே'' என்று இரத்தினச் சுருக்கமாக அருளினர், ஆனால் குமரகுருபரரோ,

"போகமுறும் வள்ளிக்கும் புத்தேளிர் பூங்கொடிக்கும்
மோகம் அளிக்கும் முகமதியும் "

என்று வள்ளியொடு தெய்வயானையையும் இணைத்துக் கூறினர். நக்கீரரும், அவர் அடிச் சுவடு பற்றிய அருணகிரியாரும் வள்ளியை மட்டுமே, குமரன் தெய்வக் காதலுக்குரியவராகக் கொண்டார்கள், வள்ளித் திருமணமே தமிழ் அகத்துறையில், களவு கற்பு என்னும் இரு நெறிகளையும் தழுவிய திருமணமாகும். தலைவன்பால் தலைவி கொள்ளும் காதல் ஏக போக உரிமை கொள்கின்றது. பகிர்ந்தளிக்க மறுக்கின்றது என்ற நுட்பம் அறிந்தவர்கள் சங்க காலத் தமிழர். ஆகவேதான், இளங்கோவடிகளும் குன்றக் குரவையில் வள்ளியொருத்தியையே குறிஞ்சி மங்கையர் குறிப்பிடச் செய்கின்றார் :

" வேலனார் வந்து வெறியாடும் வெங்களத்து
நீலப் பறவைமேல் நேரிழை தன்னோடும்
ஆலமர் செல்வன் புதல்வன் வரும் "

என்றும்,

" குறமகள் அவளெம் குலமகள் அவளொடும்
அறுமுக வொருவ நின்அடியிணை தொழுதேம் "

என்னும் வந்துள்ள சிலப்பதிகார அடிகள் சான்று தரும்.

இங்ஙனமாக அறுமுகத்தினையும் தங்கள் வாழ்வின் ஆறு இலட்சியங்களின் தெய்வ வடிவாகத் தமிழர் கண்டனர். அந்த ஆறு இலட்சியங்களும் ஒன்றையொன்று பிரியாதன; ஒன்றிலாது மற்றொன்றிலாதன. இம்மைக்கும் மறுமைக்கும் உறுதி பயப்பன, இதுவே,

" ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும் "

என்னும் அருணகிரியார் வேண்டுதலுக்கு முத்தமிழ் முதலாசிரியரின் முருகவேள் தரும் விடையாயிருக்கலாம். *



ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள்
(மூலவர்)
திருவல்லிக்கேணி, சென்னை.

# 'இருள் நீங்கி நின்றேன்'......

"பாலகவி" வயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார்
(தத்புருஷ தேசிகர்) தேவகோட்டை.

திருமந்திர மாலையின் கடவுள் வாழ்த்தின் நான்காவது திருப்பாசுரத்தில், ஆசிரியர் திருமூலதேவ நாயனர், மக்கள் கட்டாயமாகக் கைக் கொள்ள வேண்டிய சாதனத்தையும், அதனுல் பெறத் தக்கதாயிருக்கின்ற பயனையும் எடுத்துக் கூறியருளுகின்ருர். அச் செய்யுள்,

> " அகலிடத் தார்மெய்யை அண்டத்து வித்தைப்
> புகலிடத் தென்றனைப் போதவிட் டானைப்
> பகலிடத் தும்இர வும்பணிந் தேத்தி
> இகலிடத் தேயிருள் நீங்கிநின் றேனே "

என்பதாகும்.

இந்த உலகம் மிக மிக அகன்ற விரிவையுடையது. எத்தனையோ வகையான காட்சிப் பொருள்களைத் தன்னகத்தே கொண்டதாயிருக்கின்றது. நேற்றுக் காணுத ஒன்று இன்று வெளிப் பட்டுத் தோன்றுதலும், இன்று காணுகிற ஒன்று நாளை மறைந்து விடுதலும் இவ்வுலகத்தில் எப்போதும் நிகழ்ந்து கொண்டிருப்பவை. அளவு காண முடியாதபடி அகன்று விரிந்து காட்சி தருகின்ற இவ்வுலகத்தை உள்பொருள் என்றும், இல்பொருள் என்றும், உள்ளதும் இல்லதுமான பொருளென்றும் சமய வாதிகள் கூறித் தம்முள் இடர்ப்படுகிருர்கள்.

தருக்க நூல்கள்-நியாய நூல்களை நன்கு கற்றுத் தெளிந்த அறிவும், வழி வழியாக மெய்யுணர்வு பெற்று வரும் உண்மை ஞானியரின் உபதேசப் பேற்ருல் உண்டாகும் அனுபவமும் கை வரப் பெருமையினுலேயே, உலகத்தின் சொரூப தடத்த நிலைகளை அறிய மாட்டாதவர்களாய் மனம் போன போக்கில் எதையெதை யெல்லாமோ பேசிச் சமய வாதங்களையும் பேதங்களையும் உண்டாக்கிவிடுகின்றனர் ஒரு சிலர்.

உலகத்தின் தோற்ற நிலை ஒடுக்க நிலைகளைப் பற்றிச் சித்தாந்த சைவ நூல்கள், அறிவுக்குப் பொருந்து மாற்ருல் விளக்கித் தெளிவு செய்துள்ளன. தோற்றம் என்பதே எப்பொழுதும் இல்லாதனவும், அது போல அழிவு என்பதே என்றும் அமையாதனவுமான அநாதி நித்தியப் பொருள்கள் மூன்று உள்ளன அவை பதி, பசு, பாசமென்பன. இம் மூன்று பொருள்களும் தத்தம் உண்மை நிலைகளில் ஒன்று மற்ருென்ருேடு தொடர்பு படாமலும், தொழிற்படாமலும் இருக்கும் வேளையில், **சிவம், ஆன்மா. மலம்** என்னும் பெயர்களைப்பெற்று நிற்கும். அப்போதைய அவற்றின் நிலையைச் **"சொரூப நிலை"** என்று சொல்லுவார்கள். ஒரு பொருள் மற்ற இரண்டோடும் தொடர்புபட்டுத் தொழிற்படுகின்ற வேளையில் அவற்றின் நிலை **'தடத்த நிலை'** என்று சொல்லப்பெறும்.

இவற்றில் பதி ஒன்று, பசுக்கள் பல பாசம் மூன்று. ஆணவம், கன்மம், மாயையாகிய மூவகைப் பாசங்களில் மாயாபாசத்தின் விரிவே இவ்வுலகம் என்று சைவ சித்தாந்த நூல்கள் கூறுகின்றன. மாயை அறிவில்லாததும், இயக்க ஆற்றலில்லாததுமான ஜடமாதலின், அது தானே உலகமாக விரியுமாறில்லை. மாயையிலிருந்து உலகத்தை இறைவன் உண்டாக்கி ஒரு கால எல்லை வரை நிலை நிறுத்தி, உயிர்களை அதில் வாழச்செய்து பின்னர் அவ்வுலகம் தோன்றிய மாயையிலேயே அதனை ஒடுக்கி விடுகிருன். அதனுல் படைப்பாகிய தொழில்களுக்கு இறைவன் நிமித்த காரணமாயிருக்கின்ருனென்பது விளங்கும். இவ்வுண்மை சித்தாந்த நூல்களின்றி வேறெதிலும் பேசப் பெறவில்லை. வினை முதலை விட்டு நீங்கி ஒரு போதும் வினை நிகழாதாதலின், தோற்ற நிலையொடுக்கமாகிய மூவினைகளுக்கும்

உட்படுகின்ற உலகம் அவ்வினைகளை நிகழ்த்துகின்ற இறைவனைவிட்டுப் பிரிந்திருத்தலென்பது எந்நாளுமில்லாததேயாகும். உலகம் தோன்றிக் காட்சிக்குட்படுகிற பொழுது, உண்மை போலவும், மறைந்து காட்சிக்கு அப்பாற்படுகிற பொழுது இன்மை போலவும் இருப்பினும், அவ்வுண்மை இன்மைக் காட்சிகள் அவ்வுலகத்தின் நிலை வேறுபாடுகளேயன்றிப் புதிதாகத் தோன்றுவதும், அறவே கெட்டு அழிந்துபோவதுமான உண்மை இன்மைக் காட்சிகளாகா.

உலகத் **தோற்றம்** என்பது, மாயையில் நுட்பமாய் ஒடுங்கிக் கிடந்த பகுதி பருமையுடன் வெளிப்பட்டு வருதலென்பதும், **நிலை** என்பது அங்ஙனம் வெளிவந்த அது வளர்ச்சி பெறுவதென்பதும். **ஒடுக்கம்** என்பது அவ்வாறு வளர்ந்து கொண்டே வருகின்ற அது மீண்டும் மாயையில் நுட்பமாக ஒடுங்கி விடுவதென்பதுமாகும். மாயையில் ஒடுங்கிய உலகம் ஒடுங்கியவாறே நின்று விடாது மீளவும் தோன்றும். எனவே நுண்மையும் பருமையுமாகிய இருவகை நிலைகளுக்கும் மாறிமாறிப் போக்கு வரவு புரிகின்ற இவ்வுலகத்தை, அங்ஙனம் தொழிற்படுமாறு செய்கின்ற இறைவன் எந்நாளிலும் விட்டுப்பிரியாதவனாக இருக்க வேண்டியவனாகின்றான்.

உலகம், காட்சி அளவின் உண்மையும் இன்மையும் போல இருக்கும் சொரூப தடத்த நிலைகளிரண்டிலும், இறைவன் அதனோடு தொடர்பு கொண்ட உண்மைப் பொருளாயிருக்கின்றானென்பதை "**அகலிடத்தார் மெய்யை**" என்று ஆசிரியர் திருமூல தேவர் அருளிச் செய்தார். "**ஆர்தல்**" என்பது நிறைதல் என்னும் பொருளை உடையது. ஆதலின், உலகுயிர்களில் இறைவனது நிறைவாகிய சர்வவியாபகமும் இதனால் குறிக்கப் பெற்றது. ஒரு காலத்தில் வெளிப்பட்டு மெய் போலவும், மற்றொரு காலத்தில் ஒடுங்கிப் பொய் போலவும் இருக்கும் உலகத்தில், எப்பொழுதும் மெய்ப் பொருளாக நிறைந்திருப்பவன் இறைவன் என்பது, இங்கே உணரத் தக்கதாகும்.

அண்டபிண்ட சராசரங்கள் அனைத்தும் மாயையிலிருந்து எவ்வாறு தோன்றினவோ அவ்வாறே அதில் ஒடுங்கி விடும் இயல்புடையன.

" ஒருவனோ டொருத்தி யொன்றென்
றுரைத்திடு முலக மெல்லாம்
வருமுறை வந்து நின்று போவதும்"

என்பது சிவஞான சித்தியார். "எது எங்கே எவ்வாறு தோன்றிற்று அது அங்கே அவ்வாறு ஒடுங்கும்" என்பது தருக்க நூல் முடிவு. இதனைத் "தோன்றுதற்குரிய **சற்காரியமுறை**" என்று சிவஞான சுவாமிகள் அருளுவார்கள். பேரூழிக் காலத்தில் எல்லா உலகங்களும் மாயையில் ஒடுங்க, அம்மாயை சிவசத்தியில் ஒடுங்கச் சிவசத்தியும் சிவத்தில் ஒடுங்கி விடும். மீண்டும் படைப்பு நிகழும் பொழுது அம் முறையே சிவத்திலிருந்து சத்தியும் சத்தியிலிருந்து மாயையும், மாயையிலிருந்து உலகமும் உண்டாவனவாம். இங்ஙனம் தன்னில் ஒடுங்கிய சத்தியையும், சத்தியில் ஒடுங்கிய மாயையையும், மாயையில் ஒடுங்கிய உலகத்தையும் நிமித்த காரணனாயிருந்து சிவபெருமான் தோற்றுவிப்பான். அண்டங்கள் அனைத்தும் மாயையிலிருந்து நேரே தோன்றுவன வாயினும். அம் மாயைக்கு ஆதாரமாகிய சிவபெருமானிடத்திலிருந்து அவை தோன்றின என்று சித்தாந்த நூல்கள் கூறும். இது, கிழங்கிலிருந்து தோன்றிய தாமரையை அக்கிழங்கிற்கு ஆதாரமாயிருந்த சேற்றிலிருந்து தோன்றிய தென்னும் பொருள் படப் '**பங்கசம்**' என்றுரைப்பது போன்றதாகும்.

இக்கருத்துப் பற்றியே சிவபெருமானை வேதம் "**விசுவகாரணன்**" என்று கூறுகின்றது. "உலகவன் உருவில் தோன்றி ஒடுங்கிடும்" என்பார் அருணந்தி சிவம். அண்ட பேரண்டங்கள் அனைத்தையும் நிமித்த காரணனாயிருந்து தோற்றுவித்தொடுக்குவதேயல்லாமல் அவை தோன்றி ஒடுங்குகிற மாயையைத் தன்னிடம் ஒடுக்கி வெளிப்படுத்துகிறவனாகவும் சிவபெருமானிருத்தலால், அவனை

"**அண்டத்து வித்து**" என்றார் ஆசிரியர் திருமூலதேவ நாயனார்.

பிறவி ஒரு பெரிய கடல். "**பிறவிப் பெருங்கடல்**" என்பது தமிழ் மறை. அந்தப் பெருங் கடலிலிருந்து நீந்தி வந்து, பேரின்பக் கரையைச் சேர வேண்டியது, மக்கட் பிறப்பின் பயனாக அமைதல் வேண்டும். அதற்கு ஒரே ஒரு புணை தான் உண்டு. அது "**திருவைந்தெழுத்து**" என்று சொல்லப் பெறுவது.

அப்பரடிகளைச் சமணமன்னன் ஆணைப்படி அவன் ஏவலாளர் கல்லோடு பிணைத்துக் கட்டிக் கடலில் விட்டனர். அவரைத் திருவைந்தெழுத்து, கடலில் அழுந்த விடாது காத்துக் கரையில் சேர்த்தது. இது வியப்புக்குரியதில்லை என்று அருளுகிறார் சேக்கிழார் பெருமான். நல்வினை தீவினைகளாகிய இரண்டு கயிறுகளைக் கொண்டு ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலக் கல்லில் கட்டப் பொற்றுப் பிறப்பாகிய துன்பப் பெருங் கடலில் வீழ்ந்து தத்தளிக்கிற உயிர்களை முத்தியாகிய இன்பக் கரையில் கொண்டு சேர்க்கும் திருவைந்தெழுத்து, ஒரு கயிறு கொண்டு ஒரு கல்லில் கட்டப் பெற்றுச் சிறியதாகிய உவர்க் கடலிற் புகுத்தப் பெற்ற ஆளுடைய அரசரைக் கரையிற் கொண்டு சேர்த்தது ஆச்சரியமாகாது தானே ?

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்"

என்பது திருக்குறள். சித்தாந்த சைவப் பேராசிரியராகிய திருவள்ளுவப் பெருந்தகையாரின் திருவுள்ளக் கருத்துக்கேற்ப இத் திருக்குறளுக்கும் பொருள் கொள்ளுதல் முறையாகும். எனவே "**இறைவனடி**" என்பதை உம்மைத் தொகையாக வைத்து இறைவனையும், அடியையும் எனப் பொருள் கொண்டு திருவைந்தெழுத்தின் தலை மணிகளாகிய சிகர வகரங்களையே இச் சொற்றொடர் குறிக்கின்றதென்று கொள்ளக் கிடக்கின்றது.

"செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்" எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்த நமக்குப் பிறவாநெறியைத் தந்து பேரின்பக் கரையிற் சேர்க்கவல்ல திருவைந்தெழுத்தை "மெய்யுணர்வு" அளிப்பவர்களாகிய ஆசாரியர்களையடைந்து, அவர்களது அருளுபதேச வாயிலாகப் பெற்று ஓதிவருதல் வேண்டும். அஃதொன்றையன்றி நமக்கு வேறு புகலில்லை. அத்தகைய ஒரே புகலை நமது முயற்சி கொண்டு நாமடையுமாறுமில்லை. இது "நானே யோ தவஞ்செய்தேன், சிவாயநம வெனப்பெற்றேன்" என்ற திருவாசகத்தை ஊன்றிச் சிந்திப்பார்க்கு ஒருவாறு விளங்கும்.

"மூர்த்தி தலம் தீர்த்தம்
முறையாய்த் தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும்
வாய்க்கும் பராபரமே."


என்ற தாயுமான சுவாமிகள் திருவாக்கு இங்கே நினைவு கூர்தற் குரியதாகும்.

ஒப்பற்ற புகலிடம் ஒன்றேயென உணர்ந்தார்க்கும் இறைவனருள் கூட்டினலன்றிக் கூடமுடியாமையையும், அப்பெரும் புகலிடம் தனக்கு முன்னைத் தவப் பேற்றினால் வந்து பொருந்தியமையையும், அது பொருந்துமாறு ஆண்டவன் செய்தமையையும் "**புகலிடத் தென்றனைப் போதவிட் டானை**" என்ற வரியில் இவ்வாசிரியர் குறிப்பிடுகின்றார்.

"நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும்நினை
என்றுஞ் சிவன்று ளிணை"

என்பது ஆன்றோர் திருவாக்கு. இரவு பகலென்றில்லாமல் எப்பொழுதும் இறைவனைச் சிந்திக்க வேண்டும். வழிபாட்டுக்குரிய காலத்தை வரம்பு செய்து கொண்டு அதில் ஈடுபடுவது உலகத்தாரியல்பு, சதாகால பூசையாய்த் தொடக்கமும் முடிவுமின்றி எந்த வேளையிலும் வழிபடுவது சத்திநிபாதர்களாகிய ஞானியரதியல்பு. இதனைப் "**பகலிடத்தும் இரவும் பணிந்தேத்தி**" என்று ஆசிரியர் அருளினார்.

CONNEMARA PUBLIC LIBRARY
10 JAN 1966
MADRAS



திருச்செந்தூர் ஆறுமுகப்பெருமான்

தன்னைத் தானென அறியாது தன்னையும் தலைவனையும் இரண்டறக் காணும் தத்துவ ஞானிகள் பால் தான் காணப் பெறுது தலைவனே காணப் பெறுவான். இவர்கள் "**சீவன் முத்தர்கள்**" என்று சொல்லப் பெறுபவர்கள். தம்மையுணர்ந்து தமையுடைய தன்னுணர்வாராகிய இச்சிவஞானிகளது பசுகரணங்களெல்லாம் சிவகரணங்களாக மாறி இருக்கும். சீவபோதங் கழன்று சிவபோத வயப்பட்ட இவர்கள் மனித உடம்புகொண்டு இந்நிலவுலகத்தில் வாழ்வார்களாயினும், அவர்கள் நம் போன்ற மனிதர்களாக மாட்டார்கள்.

உயிர்களின் கருவிகரணங்கள் தொழிற்படுகின்ற வேளையைப் பகலென்றும், அவைகள் அடங்கிக் கிடக்கின்ற வேளையை இரவென்றும் கூறுவர். சீவன் முத்தர்களுக்கு அவ்விரவும் பகலும் ஒரே நேரத்தில் அமைந்திருக்கும். அவர்களுடைய கருவிகரணங்கள் தொழிற்படுகின்ற காரணத்தால் பகலாகவும், அவை அவர்களுடையனவாகத் தொழிற்படாமல், இறைவனுடையனவாகத் தொழிற்படுகின்ற காரணத்தால், இரவாகவும் ஒரே வேளையே அவர்களுக்குத் தோன்றிக் கொண்டிருக்கும். இது "எனைநான் என்பதறியேன் பகலிரவாவதுமறியேன்" என்று திருவாசகத்தில் குறிக்கப் பெற்றிருக்கின்றது.

மலமாயாகன்ம பாசங்களுடன் கூடி வாழும் பெத்த நிலையிலும் அவற்றை நீங்கிச் சிவத்துடன் கூடி வாழும் முத்த நிலையிலும் "உயிர்கள் இறைவனது அடிமைகளே" என்பதை உணர்ந்து இடையருது எப்பொழுதும் சிந்தித்துப் பொய்யாய உலகியற் செல்வத்திற் புக் கழுந்தாது மெய்யாகி நிறைந்திருக்கும் நிமித்த காரணப் பொருள் சிவபெருமான் என அறிந்து பணிந்து ஒழுகுவதற்கு இந்நிலவுலகம் எத்தனையோ வகையான இடையூறுகளைச் செய்து கொண்டிருக்கின்றது.

இங்ஙனம் மாறுபாடுடையதாயிருக்கின்ற இந் நிலவுலகத்தில், அநாதியாகிய நம்மோடு அநாதியாகவே கலந்து நின்று ஒரு நிலையில்லாமல் நாளுளும் வளர்ந் தோங்கிப் பொங்கிவருவது ஆணவ இருள். அதிலிருந்து நீங்கி நிலைபேறுடையதான முத்திப் பேற்றைப் பெற்றேனென்பார் "**இகலிடத்தே இருள் நீங்கி நின்றேன்**" என்று கூறியருளினர், திருமூல தேவ நாயனர் *

நலம் பெருகுக.

---

## வைகுண்ட ஏகாதசி விழா

| | |
|---|---|
| **நாகை :** | ஸ்ரீ சௌந்தரராஜப் பெருமாள் கோயில் |
| **சேலம் :** | செவ்வாய்ப்பேட்டை பிரசன்ன வேங்கடாசலபதிப் பெருமாள் கோயில் |
| **குளித்தலை :** | நீலமேகப் பெருமாள் கோயில் |
| **பள்ளிகொண்டை :** | உத்திர ரங்கநாத சுவாமி கோயில் |
| **நிலக்கோட்டை :** | கோயில் குருவித்துறை சித்ரரத வல்லபப் பெருமாள் கோயில் |
| **திருநீர்மலை :** | அரங்கநாத சுவாமி கோயில் |
| **பவானி :** | ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் |
| **குடியேற்றம் :** | சந்தைப்பேட்டை சீதா ராமாஞ்சநேய சுவாமி கோயில் |
| **ஆழ்வார் திருநகரி :** | ஆதிநாத சுவாமி கோயில் |
| **மன்னூர்குடி :** | வடுவூர்க் கோதண்டராம சுவாமி கோயில் |
| **திண்டி மாநகர் :** | சீனிவாசப் பெருமாள் கோயில் |
| **திருக்கோயிலூர் :** | திரிவிக்கிரம சுவாமி கோயில் |
| **திருக்குடந்தை :** | சாரங்கபாணி சுவாமி கோயில் |

# "பரமாசார்யாளும் பாவைப்பாடல்களும்"

( திரு. என். எஸ். தாத்தாச்சாரியார், தஞ்சை. )

## "ஏட்டில் படித்தது"

வேத காலத்தில் ஜானசுருதி என்பவருடைய கொள்ளுப் பேரன் ஒருவர் பேரரசனாக வாழ்ந்து வந்தார். அவர் மாபெரும் தருமசீலர். ஒருநாள் இரண்டு கந்தருவர்கள் "பல்லன் –பல்லாக்ஷன்" என்ற பெயர் கொண்ட இரு அன்னப்பறவை களாய் அரசன் அரண்மனையின் மேலே பறந்து சென்றார்கள் "பூமியில் சிறந்த தருமசிலரான ஜான சுருதியின் கொள்ளுப் பேரன் இருக்கிறார். அவர் மேல் நிழல் படாமல் நீ பறக்கவேண்டும். இல்லையேல் உன் உடல் கருகிவிடும்" என்று ஒரு பறவை கூறிற்று. அதற்கு மற்றப் பறவை "இவர் ரைக்வரோ?" என்று ஏளனமாகப் பதில் சொல்லிற்று. பறவைகளின் மொழியறிந்த அந்த அரசன் திடுக்கிட்டு எழுந்திருந்தார். ரைக்வரைக் காணத் தேடி அலைந்தார். கடைசியில் ஓர் வண்டியின் அருகில் ப்ரும்ம சமாதியில் ஆழ்ந் திருந்த ஒரு மாபெரும் முனிவரைக் கண்டார் அரசர். அவர் அருளைப் பெற மிகப் பாடுபட் டார். கடைசியில் அவரிடமிருந்து "மெய்ஞ் ஞானிகளின் தன்மையை மக்கள் சாதாரணமாக உள்ளபடி அறியமுடியாதவர்கள். அத் தன்மை மிக ஆழமானது" என்ற உண்மையை அறிந்து மகிழ்ந்தார் அரசர்.

## நாட்டில் காண்பது

இவ்வாறு சாந்தோக்கிய உபநிஷதத்தில் ஓர் கதைத் தொடர்பு உள்ளது. அன்று அவர் இருந்த நிலையையும், பெருமையையும் ஏட்டில் தான் படித்தறிகிறோம். ஆனால் நாம் அந்த வித மான மகானை நம் நாட்டில் நடமாடிவரக் கண்க ளால் காணும் பாக்கியம் பெற்றிருக்கிறோம். சிந்தித்துப் பார்த்தால் இந்தத் தவயோகி ஒரு விதத்தில் அவரைவிடவும் சிறந்துளார் என்ன லாம். அவரோ தன் ஆன்ம நலனையே குறிக்கோ ளாகக்கொண்டு மக்கள் கூட்டத்தைவிட்டு ஒதுங்கி இருந்தார். ஆனால் இன்று நாம் காணும் மாபெரும் முனிவரோ, மக்கள் நடுவே நடமாடி நன்மை புகட்டி, அல்லும் பகலும் மக்கள் நல் வாழ்விலே ஆக்கமும் நோக்கமும் கொண்டுள்ளார். 'நடமாடும் தெய்வம்' என்றே மக்கள் புகழ்ந்து பாட விளங்குகிறார். ஸ்ரீ வைணவ ஆசார்ய ஸார்வ பௌமரான இராமாநுசரின் பெருமையைக் கூறு மிடத்து "இவர் திருமுடி சம்பந்தம் பெற்று முன் னோர்களும், இவர் திருவடி சம்பந்தம் பெற்றுப் பின்னுளோர்களும் பெரியோரானார்கள்" என்று சொல்வதுண்டு. அதுபோல் ஸ்ரீ சங்கரர் குரு பரம்பரையில் இவரும் அந்த இடத்தை அடைந்து ளார் எனலாம். ஞானபீடத்தில் எழுந்தருளி இருந்து ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் 68வது பட்டத்தில் பட்டாபிஷேகம் செய்து கொண்டு வீற்றிருக்கும் ஸ்ரீ ஜகத்குரு - பரம ஹம்ஸ பரிவ் ராஜக ஸ்ரீ சந்திர சேகரேந்திர ஸரஸ்வதி அவர்களே மேற்கூறிய லக்ஷணங்களுக்கு அரும் கலமாக எழுந்தருளி யிருக்கிறார். ஒளிபடரும் திருவுருவத்துடனும், உருக்கம் பெருகும் சூழ் நிலையுடனும், உள்ளமெல்லாம் யோகத்ருஷ்டி யாய், கண்களெல்லாம் அருள்பார்வையாய், முகமெல்லாம் மந்தஹாஸமாய், மொழி எல்லாம் தேன் வெள்ளமாய், செயல் எல்லாம் தெய்வச் செயலாய்க் காட்சி தருவதைக்கண்டு மேனாட்டி னரும் திகைத்திருக்கிறார்கள். "இந்த மகான் எழுந்தருளி இருக்கும் காலத்தில் நாமும் வாழப் பிறந்தோமே" என்று நாம் நெஞ்சம் தடிக்க இடம் பெற்றோம். ஸ்ரீ சரணுளுடன் பரம பக்தி பூண்டவர்களுக்கு ஸ்ரீ ஆதிசங்கரரே மறுமுறை தோன்றினரோ என்றே தோன்றும்.

## துறந்தார் பெருமை

"துறந்தார் பெருமை துணைக் கூறின் வையத்து இறந்தாரை எண்ணிக் கொண்டற்று." (இறந்த ஜீவராசிகளை எண்ணினாலும் யதிவரர் களின் பெருமையை எண்ண முடியாது) என்ற

பொய்யா மொழிக்கு மெய்யாப் பொருளாக இவர் இருக்கிறார். பாரளந்த பரந்தாமனை ஆழ்வார்கள் "அத்தனாகி அன்னையாகி" என்றபடிக்கே முதலில் தகப்பனாக நினைத்துப் பின்புதான் தாயாக நினைத்தார்கள். ஆனால் தஞ்சக் குடிக்குத் தனிப் பெருந்தகையான ஆழ்வாரைப் பின்பற்றிப் பேசும் பொழுது "அன்னையாகி அத்தனாகி" என்றே மதுரகவியாழ்வார் பேசினார். அந்த நிலைக்கு இலக்கணமாம் நம் பரமாசாரியாள் தாய்போன்ற உள்ளத்தைக் காட்டி, தந்தை போன்ற திருவுருவத்தால் மக்கள் மனத்தைக் கவருகிறார். ஆதலால் தான் "மூவுலகிலும் ஆசார்யாருக்கு இணை ஒன்றும் தென்படவில்லை" என்று ஸ்ரீ ஆதிசங்கராச்சாரியார் சதச்லோகியில் திருவாய் மலர்ந்தார்.

## பரம ஹம்ஸர்கள்

நம் பரமாசார்யாள் ஓர் பரம ஹம்ஸாள். சிறந்த அன்னப் பறவைகளின் தன்மை கொண்டவர்களை ஸந்யாஸிகள் என்று கூறுவார்கள். அன்னத்தின் உடல் வெண்மை - இவர்களும் வெள்ளை மனம் படைத்தவர்கள். "யதய: ஸுத்த ஸத்வா: (துறவிகள் தூய வெள்ளை மனத்தினர்) என்று வேதவாக்கியம். அன்னம் இமயத்தின் உச்சியில் மானஸ ஸரஸில் உலாவும். இவர்களும் உயர்ந்தோர் உள்ளத்தில் உலாவுவார்கள். அன்னம் மேகத்தை வெறுக்கும். இவர்களும் சிற்றின்பத்தை வெறுப்பார்கள். அன்னம் இரு சிறகுடன் வானத்திலும் பறக்கும், தரையிலும் நடைபயிலும். அதுபோல் துறவிகளும் ஞானம் கர்மம் என்ற இரண்டு சிறப்பால் இறைவனுடனும், நம்முடனும் உறவு கொண்டிருப்பார்கள். நீர் அன்னத்தின் உடம்பில் ஒட்டாது. உலகமாயப் பாசியும் இவர்களிடம் ஒட்டாது. அன்னம் தாமரை நாலைப்புசிக்கும். இவர்களும் ஸத்துவ உணவையே ஒரு வேளை உண்பார்கள். அன்னம் "க்வ, க்வ" என்று குரலிடும். (க்வ என்றால் எங்கே என்று பொருள்). இவர்களும் நல்ல சிஷ்யர்களை எங்கே எங்கே எனத் தேடுவார்கள். அன்னம் வீட்டில் தங்காது, இவர்களும் குடும்பத்தில் தங்கார்கள். அன்னப்பறவைகளின் அலகும், காலும் சிவந்திருக்கும். உபதேசம் செய்து செய்து இவர்கள் திருவாயும், அடியார்களின் இருப்பிடம் நாடி நாடி இவர்கள் திருவடியும் சிவந்திருக்கும். வெளி உலகில் இவர்களை 'ஹம்ஸம்' என்றழைப்பார்கள். ஆனால் உள்ளத்துக்குள்ளே இவர்கள் "ஸோஹம்" என்றிருப்பார்கள். ஹம்ஸ: என்ற சொல்லைத் திருப்பினால் ஸோஹம் என்றாகும். அன்னம் பாலையும் நீரையும் பிரித்துப் பாலையே பருகும். இவர்களும் சாஸ்திரங்களின் ஸாரமான கருத்துக்களையே உள்ளத்திடுவார்கள்.

## எண்ணம் பலிக்கிறது.

ஆசார்ய லக்ஷணமும், சிஷ்யலக்ஷணமும் ஒருங்கே அமைந்துவிளங்கும் நம் ஸ்ரீ காஞ்சிப் பெரியவாளுக்கு "எப்பொழுதும் மக்கள் மனம் கலந்து பழகி அறநெறியில் வாழவேண்டும்; நம் புராதனக் கலைச் செல்வங்களைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும்" என்பது ஒரே நோக்கம் தான். "அவரவர்கள் தங்கள் தங்கள் ஆசாரியர்கள் உபதேசித்த அனுஷ்டானங்களைப் பின்பற்ற வேண்டும். அவ்வனுஷ்டானங்கள் ஒன்றாய் இருக்கவேண்டும் என்பதில்லை.........எல்லோரும் ஒருங்கே கூடி இறைவனை நினைத்து நம் துக்கத்தையும் கஷ்டத்தையும் சற்று மறந்திருப்போம். தெய்வீக ஒளி வீசவேண்டும்" என்று கூறிவரும் பொன்மொழிகளை நினைக்க வேண்டும். அருளே வடிவான இவர்கள் போட்ட கோட்டில் தட்டாமல் நடப்பதே நமது திட்டமாக இருக்கவேண்டும்.

## பாவைப் பாடலுக்கு வித்திட்டது.

உயிரை மறந்து, உடலுறுப்புக்கள் ஒன்றோடொன்று சண்டை போட்டுக்கொள்வதுபோல், நாம் இறைவனை மறந்து ஒருவருக்கொருவர் மனம் வேறுபட்டிருக்கக் கூடாது. அன்பும், அறிவும், சாந்தியுமே நம் இந்து மதத்தின் அடிப்படைத் தத்துவங்களாகும். வழி இருக்க வேலியில் விழுந்தாற்போல் தெய்வநெறியை மறந்தல் கூடாது. மதங்களுக்குள் ஸமரஸ மனப்பான்மையும், ஜாதிப்பிரிவு, இனப்பிரிவுகளைக் கொண்ட மனவேறுபாடும் ஏற்படக் கூடாது என்ற பரந்த நோக்கத்தின் அடிப்படையில், மீண்டும் நமது பழம்பெரும் இந்து மதம் தழைக்கும்படி, நாம் "திருப்பாவை, திருவெம்பாவை விழா" எங்கும் நடத்தி, இளம் குழந்தைகளை மனப்பாடம்

செய்யச் சொல்லவேண்டும் என்று, வெள்ளை விளி சங்கம் ஊதினர். ஆலமரம் சோலை கொண்டது போல், இன்று அந்தத் தெய்வநெறி நாடெங்கும் ஊரெங்கும் பரவித் தழைத்திருக்கிறது. நமது சென்னை அரசாங்க அறநிலைய ஆட்சித் துறையினரும் இத் தொண்டிற்கு முழு ஆதரவையும் தந்து உறுதுணையாக இருப்பது மறக்கமுடியாத உண்மை.

## திருவெம்பாவை.

திருவாதவூர் அடிகள் என்ற மணிவாசகப்பெருமானர் பாடியருளிய திருவாசகத்தில், திருப்பள்ளிஎழுச்சி, திருவம்மானை திருப்பொன்னூசல், திருப்பூவல்லி, திருக்கோத்தும்பி, முதலிய முத்தமிழ் மணக்கும் பகுதிகளில் திருவெம்பாவையும் ஒன்று. சிவஞானபோதம் என்ற சைவ சித்தாந்த ஆதிநூலுக்கு ஊற்றுக்கண்ணாய் இருப்பது திருவெம்பாவை. "சக்தியை வியந்தது" என்று கூறும்படியாய் 20 பாடல்கள் கொண்டது. இறைவனே தலைவன், மக்களே கன்னிப்பெண்கள். ஆணவமலை யாகிய உறக்கம். மலம் நீங்குவதே விழிப்பு என்பது இந்நூலின் உட்பொருளாகும்! 'மலஇருள் உறங்காமல் மன்னுபரிபாகர் அருள் ஜலம் மூழுக வருக எனச் செப்புதல் திருவெம்பாவை" என்ற சொற்றொடரையும் கவனிக்க வேண்டும். வாதவூரடிகள் திருப்பெருந்துறையில் குருஞான மூர்த்தியின் அருள்பெற்றுத் திருவண்ணாமலை வந்த காலையில் இந்நூல் வெளி வந்தது என்பார்கள். மார்கழித் திருவாதிரைத் திருநாளுக்கு 10 தினங்கள் முன்பு தொடங்கித் திருவாதிரை நாளன்று முடிக்கும் சைவசமய நோன்பில் சிறப்பாகப் பாராயணம் செய்யப்படும் நூல். அள்ளூறித் தித்திக்கப் பேசும்படியான அருமையான பாக்களைக் கொண்டது.

## திருப்பாவை.

கி. பி. ஏழாம் நூற்றாண்டின் கடைசியில் பாண்டி நாட்டின் நன்முத்தாய், வில்லி என்ற வேடனால் திருவப்பட்ட மல்லி நாட்டின் தலைநகரமான ஸ்ரீவில்லிபுத்தூரில் துளசிச் செடியின் அடியில் தோன்றியவளாய், ஸ்ரீவல்லபதேவன் சபையில் விரைந்து கிழி அறுத்துப் பரமனுக்குப் பல்லாண்டு பாடிய பட்டர்பிரான் திருமகளாய், திருப்பாவை ஜீயர் என்ற இராமாநுசருக்கு உடன் பிறந்தவளாய், அழகிய மணவாளனை மணந்தவளாய், ஒருநூற்று நாற்பத்து மூன்று திருப்பாமாலை பாடியவளாய், திருப்பாவை முப்பதும் செப்பியவளாய், அஞ்சுகுடிக்கு ஒரு மகளாய், தமிழ்த்தாயின் வடிவினளாய், கோதை என்றும், சூடிக்கொடுத்தாள் என்றும் திருநாமம் பூண்டவளான ஸ்ரீ ஆண்டாள் பாடியதே திருப்பாவை. திருப்பாவையானது நாலாயிர நான்குவேதத்திற்கு உபநிடதமாய், கண்ணனின் கீதைக்கு ஒப்பாகக் கோதா கீதையாய், உலகமே கண்டிராத ஒப்பற்ற நூலாய்த் திகழ்கிறது. "சதாசார்யன் திருவருளால் மெய்யறிவு பெற்று, கண்ணன் நப்பின்னை திருவடிகளிலே சரண்புகுந்து, புலன்களை அடக்கி, அவன் திருப்பெயர் சீராடி, அவனுக்கு ஏழேழ் பிறவிக்கும் தொண்டு செய்து வாழ்வதே மாந்தர் கடமை" என்பதே இதன் சாரமான பொருள். இது ஒரு முத்தமிழ் நூல். செவிக்கினிய செந்தமிழ் நூல். திருவெம்பாவைக்குப் பாட்டுடைத் தலைவன் அம்பலத்தரசன். இந்நூலின் பாட்டுடைத்தலைவன் ஆயர்குலத்தரசன். அரங்கனே இருசெவிமடுத்து, அல்லிமலர்ப் பாவையுடன் அரங்கத்திருந்து கேட்டுமகிழ்ந்த அருமையான தெய்வநூல். சமணர்களுக்கும் ஓர் பாவை நூல் உண்டு என்று "யாப்பருங்கலவிருத்தி" உரையிலிருந்து அறியலாம்.

திருப்பாவை, திருவெம்பாவை சம்பந்தப்பட்டவரையில் இது ஓர் மழைப்பாட்டாகவும், கன்னிப்பெண்கள் "காத்யாயனி" என்ற அம்பாளை வணங்கித் தங்களுக்கு நல்ல புருஷன் கிடைக்க நோற்கும் நோன்பு என்றும் கூறுவார்கள். "மேலையார் செய்வன வேண்டுவன கேட்டியேல்" என்ற திருப்பாவை வசனப்படி நம் நாட்டில் மிகப் பழங்காலம் தொடங்கிச் சைவ - வைணவ சமயத்தார்கள் இந்த நோன்பை நோற்றூர்கள் எனத் தெரிகிறது. நாமும் பாவைப் பாடல்கள் பாடி நாட்டின் நன்மையையும், நம் வீட்டின் நன்மையும் பெருக்கிக்கொள்வோம்.

# உயிர்ப்பு அடக்கம்

*வித்துவான்* **திரு. மு. அருணாசலம் பிள்ளை** *அவர்கள்,*
*துணைத் தமிழ்ப் பேராசிரியர்,* **அண்ணாமலைப் பல்கலைக் கழகம்**

## முன்னுரை

*நினைப்பும் முயற்சியும் இன்றித் தானாகவே இயங்கா நிற்கும் மூச்சுக் காற்றினை, உள்ளே இழுத்தல் உடம்பினுள் தடுத்து நிறுத்தல் வெளிவிடுதல் என்னும் இவற்றில் சில வரையறைப்படுத்து அதனை யடக்கி யாளுதலே* **உயிர்ப்படக்கம்** *எனப்படும். இவ் வுயிர்ப் படக்கத்தால் விளையும் நலங்களை யுணர்ந்த நம் முன்னையோர், இம் முயற்சியில் தலைப்பட்டு வெற்றிகண்டு இம்மை மறுமை யின்பங்களையும், இவ்விரண்டற்கும் மேற்பட்ட பேரின்பப் பெருவாழ்வினையும், பெற்றனர். இதற்குப் பல சான்றுகள் உள்ளன. எடுக்க இயலாததொரு சுமையினையும், பெயர்க்க முடியாததொரு பெரும் பொருளினையும் சில நொடிப் பொழுது மூச்சடக்கி எடுத்தாலும் பெயர்த்தாலும், அச்செயல்கள் எளிதாக முடிதலைக் காண்கின்றோம். சிறிதளவு மூச்சடக்கமே இத்தகைய உரத்தினை நமக்கு நல்குமாயின், இதனை நாம் நாடோறும் ஒழுங்கான முறையிற் பயிற்சி செய்து வளர்த்து வந்தால் எத்தகைய வன்மையும் நன்மையும் உண்டாகும் என்பதனை எடுத்துரைக்கவும் வேண்டுமோ ?*

*நரைமயிர் கறுக்கும்; தோற்சுருக்கம் உண்டாகாது; முதுமைத் தளர்ச்சியின்றி என்றும் இளமைப் பண்புடன் இருக்கலாம்; உடல் நீண்டநாள் நிலை பெறும்; அதனால் வாழ்நாள் வளரும். மேலும் உள்ளம் ஒரு நெறிப்பட்டு நிற்கும்; பொறி புலன்கள் ஒடுங்கும்; ஒரு நெறிப்பட்ட அவ்வுள்ளக் கோயிலில் தூய ஞானச் சுடர் ஒளி பரவும்; இன்ப வடிவினனாகிய இறைவன் அக்கோயிலில் இடையறவின்றி எழுந்தருளியிருப்பன். பின்னர் இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்ற முடிவான நிலையை எய்தலாம். இத்துணை அரும்பெரும் பேறுகளை நல்கும்* **உயிர்ப்படக்கம்** *பற்றி நாம் ஒரு சிறிதளவாவது தெரிந்து கொள்ளுதல் நலம் பயப்பதாகும்.*

## தொல்காப்பியமும் யோகநெறியும்

*இன்றைக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப் பெற்றதாகிய தொல்காப்பியம் புறத்திணையியலின்கண் உள்ள வாகைத் திணைப் பிரிவில் '' நாலிரு வழக்கில் தாபதப் பாக்கம்'' என ஒரு பகுதி கூறப்பட்டுள்ளது. அதற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர்,*

*'' நாலிரு வழக்கில் தாபதப் பாக்கமாவது, முக்காலமும் உணர்ந்த முனிவரர் அருளிய ஆகமத்தின் வழிநின்று, வீடு பெற முயல்வார்க்கு உரியவாகிய, எண்வகை மார்க்கத்துத் தவம் புரியும் கூறுபாடு, இவ்வெட்டும் தவஞ் செய்வார்க்கு உரியன வென்றும், தவஞ் செய்து யோகம் செய்வார்க்கு உரியனவென்றும் இருவகைப்படும். அவற்றுள் தவஞ் செய்வார்க்கு உரிய எட்டாவன:—ஊண் நசையின்மை, நீர் நசையின்மை, வெப்பம் பொறுத்தல், தட்பம் பொறுத்தல், இடம் வரையறுத்தல், ஆசனம் வரையறுத்தல், இடையிட்டு மொழிதல், வாய்வாளாமை என்பன. இவற்றிற்கு, உணவிலும், நீரிலும் சென்ற மனத்தைத் தடுத்தல், ஐந்தீ நாப்பணும் நீர் நிலையினும் நிற்றல், கடலும் காடும் மலையும் முதலியவற்றில் நிற்றல், தாமரையும் ஆம்பலும் யாமையுமாகிய ஆசனத்திருத்தல், உண்டற்காலை உரையாடாமை, வாய்வாளாமை எனப் பொருள்.*

*இனி யோகஞ் செய்வோர்க்கு உரிய எட்டாவன :— இயமம், நியமம், ஆசனம், வளிநிலை (பிராணயாமம்), தொகை நிலை*

(பிரத்தியாகாரம்), பொறைநிலை (தாரணை), நினைதல் (தியானம்), சமாதி என்பன. இவற்றின் இயல்புகளை,

"பொய்கொலை களவே காமம் பொருள் நசை
இவ்வகை ஐந்தும் அடக்கியது இயமம்" (1)

"பெற்றதற் குவத்தல் பிழம்புநனி
வெறுத்தல்
கற்பன கற்றல் கழிகடுந் தூய்மை
பூசனைப் பெரும் பயன் ஆசாற் களித்தலொடு
நயனுடை மரபின் நியமம் ஐந்தே". (2)

"நிற்றல் இருத்தல் கிடத்தல் நடத்தல் என்று
ஒத்த நான்கின் ஒல்கா நிலைமையொடு
இன்பம் பயக்கும் கமலம் முதலிய
அந்தமில் சிறப்பின் ஆசனம் ஆகும்" (3)

"உந்தியொடு புணர்ந்த இருவகை வளியும்
தந்தம் இயக்கம் தடுப்பது வளிநிலை" (4)

"பொறியுணர் வெல்லாம் புலத்தின் வழாமல்
ஒருவழிப் படுப்பது தொகைநிலை யாகும்" (5)

"மனத்தினை யொருவழி நிறுப்பது பொறை
நிலை" (6)

"நிறுத்தின அம்மனம் நிலைதிரி யாமல்
குறித்த பொருளோடு கொளுத்துதல்
நினைவே" (7)

"ஆங்கனம் குறித்த ஆய்முதற் பொருளொடு
தான்பிற னாகாத் தகையது சமாதி" (8)

என்னும் உரைச் சூத்திரங்களால் உணர்க" என்று விரிவாக விளக்கியுள்ளார்.

இவற்றால், தொல்காப்பியர் காலத்திற்கும் எத்துணையோ நூற்றாண்டுகள்-ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, தவஞ்செய்வாரும், தவஞ்செய்து யோகம் செய்வாரும் தமிழகத்தில் இருந்தனர் என்பது தெரிகின்றது.

## சரியை முதலிய படி முறைகள்

இவ்வாறு மேற்கதி பெற விரும்பும் மெய்யன்பர்கள் கைக்கொண்டு ஒழுகும் நெறிகள் நான்கு. அவை **சரியை, கிரியை, யோகம், ஞானம்** எனப்படும். அந் நான்கனுள் ஒவ்வொன்றிலும் சரியை முதலிய நான்கும் உள. அவை சரியையிற் சரியை, சரியையிற் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம் என்றாற் போல்வன. இதனால் இச் சரியை முதலிய நான்கும் பதினாறு வகைப்படும். இப்பதினாறும் **உண்மை, உபாயம்** என்னும் இருதிறத்தால் முப்பத்திரண்டு பிரிவினவாம்.

அரும்பின்றி மலரும், மலரின்றிக் காயும், காயின்றிக் கனியும் பெற முடியாதவாறு போலச் சரியையின்றிக் கிரியையும், கிரியையின்றி யோகமும், யோகம் இன்றி ஞானமும் அடைய முடியாது. எனவே சரியை முதலிய நான்கு நெறிகளும் ஒன்றன் பின் ஒன்றாய் முறையே கைக்கொண்டொழுகிப் பயன் பெறுதற்குரியனவாம்.

## யோகத்தில் நான்கு நிலைகள்

இவற்றுள் இயமம் நியமம் முதலாக மேற்கூறப்பட்ட எட்டும் யோக நெறிக்கு உறுப்புக்கள் ஆதலால் இவ்வெட்டையும் உடைய யோகம் **அட்டாங்க யோகம்** எனப்படும். இவ்வெட்டு உறுப்புக்களுள் இயமம் நியமம் ஆசனம் வளிநிலை என்னும் நான்கும் யோகத்திற்சரியை. தொகை நிலை பொறைநிலை இரண்டும் யோகத்தில் கிரியை. நினைதல் என்பது யோகத்தில் யோகம். சமாதி என்பது யோகத்தில் ஞானம். ஞானத்தாலன்றி வீடு பெறல் இயலாது.

## திருமூலர் திருமந்திரம்

இங்கு எடுத்துக்கொள்ளப்பெற்ற உயிர்ப்பு அடக்கம் என்பது, வளிநிலை யென்றும், பிராணாயாமம் என்றும் கூறப்படும். இந்நெறியைக் கடைப்பிடித்து ஒழுகிய யோகியருள் திருமூலரும் ஒருவராவர். இவர் மூவாயிரம் ஆண்டுகள் இந்நிலவுலகில் வாழ்ந்தவர். இவர் ஓராண்டுக்கு ஒன்றாக அருளிச் செய்த பாடல்களின் தொகுப்பே மூவாயிரம் பாடல்கள் அடங்கிய திருமந்திரம் என்னும் பத்தாம் திருமுறை. இதன்கண்

சரியை முதலிய நான்கு நெறிகளும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இத்திரு மந்திரத்தின் சிறப்பினை, "ஞானமுதல் நான்கும் மலர் நற்றிருமந்திர மாலை" எனச் சேக்கிழார், பாராட்டியிருத்தலால் அறியலாம்.

### சரியை முதலியவற்றின் பொது இயல்புகள்.

சரியையாவது, புறத்தொழில் ஒன்றுலே உருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு. கிரியையாவது, புறத்தொழில் அகத்தொழில் என்னும் இரண்டாலும் அருவுருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு. ஞானமாவது புறத்தொழில் அகத்தொழில் இரண்டுமின்றி அறிவுத் தொழில் ஒன்றுலே அம்மூன்று திருமேனிக்கும் மேலாய்ச் சச்சிதானந்தப் பிழம்பாய் என்றும் எங்கும் நிறைந்து நிற்கின்ற சிவபிரானிடத்திற் செய்யும் வழிபாடு.

இவற்றுள் யோக உறுப்புக்களில் ஒன்ருகிய **வளிநிலை** என்னும் உயிர்ப்படக்கம் பற்றித் திருமூலரும் ஏனைய பெரியோர்களும் கூறியுள்ள கருத்துக்களையும், அதனை அவர்கள் மேற்கொண்டொழுகிய முறைகளையும், பெற்ற பேறுகளையும் இனிக் காண்போம்.

### வளிநிலை

ஐவர்க்கு நாயகன் அவ்வூர்த் தலைமகன்
உய்யக்கொண் டேறும் குதிரைமற் றொன்றுண்டு
மெய்யர்க்குப் பற்றுக் கொடுக்கும் கொடாது போய்ப்
பொய்யர்க்குத் துள்ளி விழுத்திடும் தானே
(திருமந்திரம்-564)

ஐம்பொறிகளுக்கு நாயகனுகிய உயிர் உய்தற்பொருட்டு, அவ் ஐவர் வாழும் ஊராகிய உடம்பிற்குத் தலைவனுகிய மனம் ஏறி நடாத்தும் உயிர்ப்பாகிய குதிரை ஒன்றுண்டு. அக் குதிரை, உண்மைத் தவமாகிய சரியை கிரியைகளை முறையாகச் செய்த பயிற்சி மிக்குடையார்க்கு அடங்கிப் பிடிகொடுத்து நடக்கும். அப் பயிற்சியில்லாத பொய்யர்க்குப் பிடிகொடாமல் துள்ளிக் குதித்து அவரைக் கீழே வீழ்த்தி விட்டுத் தான் விரும்பியவாறு செல்லும் என்பது இப்பாடலின் பொருள்.

இதனுல் மூச்சுக் காற்றினை அடக்கியாளுதல் எளிதான செயலன்று என்பதும், சரியை கிரியைகளைப் பயின்றவரே இவ் யோக நெறி நிற்றற்கு உரியர் என்பதும் கூறப்பட்டன.

ஆரியன் நல்லன் குதிரை யிரண்டுள
வாரிப் பிடிக்கும் வகையறி வாரில்லை
கூரிய நாதன் குருவின் அருள்பெற்ருல்
வாரிப் பிடிக்க வசப்படும் தானே.
(திருமந்-565)

(இ - ள்) ஆரியனுகிய மனம் என்பவன் நல்லவன். அவனுற் செலுத்தப்படும் குதிரைகள் இரண்டு உள்ளன. அவை இடகலை பிங்கலை எனப்படும். (இடகலை என்பது இடப்பால் மூக்குத் துளைவழியியங்கும் மூச்சினையும், பிங்கலை என்பது வலப்பால் மூக்குத் துளைவழியியங்கும் மூச்சினையும் குறிக்கும்.) இவ்விரண்டு குதிரைகளையும் வெளியே விடுத்தலும் உள்ளே இழுத்தலும் ஆகிய செயல்களில் ஒரு சேரத் தம்வயப்படுத்தி நடத்தும் உபாயத்தை அறிபவர் அருமையாகவே யுள்ளனர். உண்மைத் தவமுடையார்க்கு இறைவன் ஆசான் வடிவில் வந்து அருள் செய்வன். அவ்வருளைப் பெற்ருல் அவ்விரண்டு குதிரைகளும் வசப்பட்டு அடங்கி நடக்கும் என்பது.

ஆசான் வாயிலாக அறிந்து இப் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும் என்பது இதனுற் கூறப்பட்டது.

### பயிலும் முறை

பதினறு மாத்திரையளவு இடது நாசியால் மூச்சுக்காற்றினை உள்ளே இழுத்து, பின்னர் அக்காற்றினை அறுபத்து நான்கு மாத்திரையளவு தடுத்து நிறுத்தி, அப்பால் அதில் முப்பத்திரண்டு மாத்தி

ரையளவு வெளியே விடுதல் வேண்டும். இவ்வாறு இடகலை பிங்கலைகளில் மாறி மாறிச் செய்தல் வேண்டும். ஒன்றில் மட்டும் செய்தல் வஞ்சிப்பதாகும் எனப் பிறிதொரு பாடல் (திருமந்-568) கூறுகின்றது.

தலை, கண், காது முதலிய மேலிடத்து உறுப்புகளும், நெஞ்சு கொப்பூழ் முதலிய நடுவிடத்து உறுப்புக்களும் நிறையும்படி உயிர்ப்பினை உள்ளே இழுத்து, அவ்வாறு இழுத்துக்கொண்டு உயிர்ப்பு முழுதையும் வெளியே விட்டுவிடாமல், அவற்றுள் ஒரு பகுதியை உள்ளே பதியச் செய்து, அதனை அடிவயிற்றின் கண் தடுத்து நிறுத்தி வந்தால் சிவபிரான் அருளைப் பெறலாம் என்கின்றது மற்றொரு பாடல் (திருமந்-572)

இவ்வாறு முறையான பயிற்சியுடையார்க்கு, மணிகடல் யானை முதலியவற்றின் ஒலி போன்ற பத்து வகையான ஒலி அகத்தே கேட்கும். இதுவே திருச்சிலம்பொலி எனப்படுவது. இவ்வொலி கேட்கப் பெற்றவர் யோகியருள் தலைவராவர்.

**உயிர்ப்பு அடக்கத்தால் உண்டாகும் பயன்கள்.**

பறவையினும் விரைந்து செல்லும் மூச்சுக்காற்றாகிய குதிரையை ஆசான் அறிவுறுத்திய வண்ணம் அறிந்து அடக்கிச் செலுத்தினால் அதுவே உள்ளத்தில் இன்ப ஊற்றெடுக்கச் செய்யும். களிப்புறுதற்காகப் பிறிதொரு கள்ளை யுண்ண வேண்டா. தன்னை அடக்கியாள்வோரைப் பெருமிதநடை நடக்கச் செய்யும்.

சோம்பலைத் தவிர்க்கும். இவற்றை,

"புள்ளினும் மிக்க புரவியை மேற்கொண்டால்
கள்ளுண்ண வேண்டா தானே களிதரும்
துள்ளி நடப்பிக்கும் சோம்பு தவிர்க்கும்"

(திருமந் 566)

என்பதனால் அறியலாம்.

உள்ளிருந்து புறப்பட்டு வெளியே சென்று மீண்டும் உள்ளே புகுந்து, பின்பும் இவ்வாறே உலாவுகின்ற மூச்சுக் காற்றினை முறைப்படி தடுத்து நிறுத்தித் தூய தன்மையுடையதாகச் செய்ய வல்லார்க்கு, உடலுறுப்புக்கள் பொன்போலச் சிவக்கும். நரை மயிர் கறுக்கும். சிவபிரான் அவரைவிட்டு நீங்கான் எனத் தாம் பெற்ற உண்மை நிகழ்ச்சியைத் திருமூலர்,

'உறுப்புச் சிவக்கும் உரோமம் கறுக்கும்
புறப்பட்டுச் செல்லான் புரிசடை யோனே'

(திருமந்-575)

என்பதனால் தெரிவித்துள்ளார்.

உயிர்க்குயிராகிய சிவபிரான் விட்டு நீங்கான் என்றதனால் அவனுக்கு உடலாகிய உயிரும், அவ்வுயிர்க்கு உறையுளாகிய இவ்வுடலும் நீடு நிலைபெறும் என்பதும் பெறப்படும்.

கால நீட்டிப்பினால் உடம்பின் புறத்தோற்றத்தில் முதுமைக்குறிகள் காணப்படா. இம் முறையால் தெளிவெய்திய பின் இறைவன் அருள் கிடைக்கப் பெற்றால் காற்றினும் விரைவாய் விண்ணிற் பறக்கும் மென்மைத் தன்மை யுண்டாகும். இக் கருத்து,

"பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்
தெளியக் குருவின் திருவருள் பெற்றால்
வளியினும் வேட்டு வளியனும் ஆமே"

(திருமந்-569)

என்னும் பாடற்பகுதியால் அறியப்படுகின்றது. இதனால், மேலே கூறப்பெற்ற முறைப்படி உயிர்ப்படக்கி வருவார்க்கு எண்வகைச் சித்திகளும் கைகூடும் என்பது தெரிகின்றது. எண்வகைச் சித்திகளில் விண்வழி யியங்கும் மென்மைதர வல்லது **இலகிமா** எனப்படும். யோகி ஒருவர் **மூலன்** என்னும் ஆயன் உடலிற் புகுந்து வீற்றிருந்தமையால் **திருமூலர்** எனப் பெயர் பெற்றார் என்பதும், தம் உடலை விட்டுப் பிறிதோர் உடலிற் புகும் நிலையும் இச்சித்திகளில் ஒன்று என்பதும் இங்கு நினைக்கத்தகும்.

### ஆளுடைய பிள்ளையார் அறிவுறுக்கும் யோகம்

ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண் சுடர்
ஞான விளக்கினை யேற்றி நன்புலத்து
ஏனை வழி திறந்து ஏத்துவார்க்கிடர்
ஆன கெடுப்பன அஞ்செழுத்துமே
(3-22 . 3)

இத்திருப்பாட்டில், மூச்சுக் காற்றினை உடம்பினுள் முறையே ஒடுக்கி அதனால் ஞானவிளக்கம் பெற்று, புருவ நடுவி லுள்ள மதி மண்டலத்தினின்று ஒழுகும் அமுதினையுண்டு தேக்கியிருந்து வழிபாடு செய்வர் மெய்யன்பர்கள். அவர்களுக்குப் பண்டைய மலவாதனை ஒரோ வழி வந்து தாக்கு மாயின் அதனால் உண்டாகும் இடர்ப்பாடுகளை விதியறிந்து ஓதப் பெறும் திருவைந்தெழுத்து நீக்கும் என்று உயிர்ப்படக்கத்தால் விளையும் பயனும் திரு வைந்தெழுத்தின் சிறப்பும் ஒருங்கே தோன்றுமாறு ஆளுடைய பிள்ளையார் அருளிச்செய்திருப்பது அறிந்து இன் புறத்தக்கது.

### திருவுந்தியார் தெரிவிப்பன

" நாலாய பூதமும் நாதமும் ஒன்றிடின்
நாலாம் நிலையாமென் றுந்திபற
நாதற்கு இடம் அதென்று உந்திபற"
(திருவுந்தி 36)

" காயத்துள் மெய்ஞ்ஞானக் கள்உண்ண மாட்டாதே
மாயக்கள் உண்டாரென்று உந்திபற
வறட்டுப் பசுக்களென்று உந்திபற,
(திருவுந்தி 43)

என்னும் திருவுந்தியார்ப் பாடல்கள் வளி நிலையின் பின்னர் நிகழ்த்தும் தியான சமாதிகளில் விளையும் இன்பப் பேறுகளை விளக்கிக் கூறியுள்ளன.

### தாயுமானவரும் ஔவையாரும்

" கால்பிடித்து மூலக் கனலைமதி மண்டலத்தின்
மேலெழுப்பில் தேகம் விழுமோ பராபரமே"

என்ற தாயுமானவர் கருத்தும்,

" ஆவி பாழ் போகாது அடக்கி யிருந்தபின்
ஓவிய மாகும் உடம்பு"

என்ற ஔவை குறட்கருத்தும் இங்கு நினைத்தற்குரியன.

### சிவப்பிரகாசர் காட்டும் யோகம்

வாயு நிற்ப மனநின்று
மனந்தா னிற்பப் பொறிநின்று
பாய பொறிகள் நிற்ப இடர்
படுபுன் புலன்கள் நின்றனவால்
ஆய புலன்கள் நின்றமையால்
அகிலந் தோன்று துள்ளத்தே
தூய பரமா னந்தபரஞ்
சோதி தோன்றக் கண்டிருந்தார்.
—பிரபுலிங்க லீலை, விமலை 26

மூச்சுக் காற்றினை முறையாக அடக்கி யாண்டமையால் மனம் அடங்கிற்று. மனம் அடங்கியமையால் ஐம்பொறி களும் அடங்கின. பொறிகளின் அடக் கத்தால் புலனுகர்ச்சிகள் இல்லையாயின. புலனுகர்ச்சிகள் இல்லையாகவே மாயா காரியமாகிய இவ்வுலகந் தோன்றாமல் உள்ளத்திலே தூய பேரின்பவடிவாகிய சுடரொளிப் பிழம்பே தோன்றிற்று. அதனையே அகக்கண்ணாற் கண்டு ஆரா இன்பந் துய்த்துக்கொண்டு அமைதியா யிருந்தனர் என்பது இப்பாடற் கருத்து.

உயிர்ப்பு அடக்கத்தின் பின் நிகழும் ஒவ்வோர் இயல்பையும் ஒருவர் வரலாற் றில் இயைத்துச் **சிவப்பிரகாசர்** சொல் லோவியமாக வரைந்து காட்டியிருக்கும் திறம் பாராட்டற்குரியது.

### கலித்தொகையில் யோகக் கருத்து

சமயத் துறையில் நிற்பவரேயன்றி இலக்கியப்புலவர்களும் இவ்வுயிர்ப் படக் கத்தின் பயனை யுணர்ந்திருந்தனர்.

" வீழ்பெயற் கங்குல் நின்
விளியோர்த்த ஒடுக்கத்தால்
வாழுநாட் சிறந்தவள்"

என்ற குறிஞ்சிக்கலி (செய், 12-வரி)ப் பகுதியும், இதற்கு நச்சினார்க்கினியர் எழுதியுள்ள, ''இடைவிடாது வீழ்கின்ற

மழையுடைய இராக்காலத்து, நின்னுடைய குறியால் (குறிப்பால், ஒலியெழுப்பலால்) அழைக்கின்ற அழைப்பினைச் செவி கருவியாக ஓர்த்ததனால் உண்டான மனவொடுக்கத்தாலே உயிர் வாழ்கின்ற நாள் மிக்கவள்'' என்ற உரையும் அறியற்பாலன.

உயிர்ப்பை அடக்கினால்மனம் ஒடுங்குமென்பதும், மனவொடுக்கத்தால் வாழ்நாள் மிகும் என்பதும், இவர்கள் கண்ட உண்மையாகும்.

### சித்தர் ஒருவர் செம்மாப்பு

**வளிநிலை** என்னும் யோக நெறியில் நின்ற சித்தர் ஒருவர் ''கடினமென்று பாராதே வாசி யோகம்'' என்று தொடங்கும் பாடலில்'' ''... கோடான கோடியுகம் வாழலாச்சு, நொடியிமைக்கும் பொழுதல்லோ பிரமன் வாழ்க்கை'' என்று கூறியுள்ளார்.

இதனால் அவர் தாம் பெற்றுள்ள வாழ்நாட்பெருக்கத்தையும், அதனை நோக்கும் போது படைத்தற்கடவுளாகிய நான்முகன் வாழ்க்கை ஒரு கைந்நொடிப் பொழுதும் கண்ணிமைப் பொழுதும் போல் மிகச் சிறிய கால அளவாகும் என்பதையும் இறுமாப்புடன் கூறி நம்மையும், அந்நெறியில் நிற்கப் பணிக்கின்றார் என்னலாம்

நம் தமிழகத்தில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தொட்டே யோக நெறியின் வகைகளுள் ஒன்றாகிய உயிர்ப்படக்கம் பயிற்சியில் இருந்ததென்பதும், அதனைப் பயின்ற முறைகளும் அதனாற் பெற்ற பேறுகளும் இதன்கண் ஒரு சிறிதே எடுத்துக் காட்டப்பெற்றன. *

---

## திருவாதிரைத் திருவிழா

| | |
|---|---|
| **திருக்குற்றாலம் :** | குற்றாலநாத சுவாமி கோயில் |
| **பூவாணூர் :** | திருமூலநாத சுவாமி ,, |
| **மேலக்கரிவலங்குளம் :** | சௌந்தர பாண்டியேசுவரர் கோயில் |
| **வீரவநல்லூர் :** | பூமிநாதர் கோயில் |
| **ஆத்தூர் :** | கோட்டை காயநிர்மலேசுவரர் கோயில் |
| **அரிகேசவ நல்லூர் :** | அரியநாத சுவாமி கோயில் |
| **வழுவூர் :** | வீரட்டேசுவரர் ,, |
| **திருநறையூர் :** | சித்தநாதர் ,, |
| **அய்யம்பாளையம் :** | வாழைத் தோட்டத்து அய்யன் கோயில் |
| **லால்குடி :** | சப்தரிஷி சுவாமி கோயில் |
| **திருவுத்தரகோசமங்கை :** | மங்களநாத சுவாமி கோயில் |
| **கோயம்புத்தூர் :** | பேரூர்ப் பட்டீசுவர சுவாமி கோயில் |
| **திருமயிலை :** | கபாலீச்சரம் |
| **சுசீந்திரம் :** | தாணுமாலயமூர்த்தி கோயில் |

---

## நடைபெற்ற நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| **புதுக்கோட்டை :** | ஸ்ரீ ஆத்தூர் சுவாமிகள் குரு பூசை (20-12-64) |
| **மதுரை :** | திருவாலவாய்ச் சைவசித்தாந்த சபை, நாவலர் குரு பூசை (29-12-64) |
| **சேலம் :** | ஆத்தூர்க் காயநிர்மலேசுவரர் கோயில், சங்காபிஷேகம். |
| **பந்தணைநல்லூர் :** | பசுபதீசுவரர் கோயில் தொகுதி, திருப்பணித் துவக்க விழா. (3-12-64).. |
| **கடம்பர் கோயில் :** | தைப்புஷ்யம் விழாக் கூட்டம் (5-12-64) |

# மூன்று சிவத்தளிகள்

(அரசிலி - இரும்பை - வக்கரை)

டாக்டர் திரு. மா. இராசமாணிக்கனுர், M A., L.T., M.O.L., Ph. D.

விழுப்புரம் மாவட்டத்தில் வானூர் ஊராட்சி மன்ற ஒன்றிப்பின் எல்லையுள் மூன்று சிவத்தளிகள் உள்ளன. அவை **அரசிலி, இரும்பை, வக்கரை** என்பன. அவை 'திரு' என்னும் அடைமொழி சேர்க்கப்பட்டுத் திரு அரசிலி, திரு இரும்பை, திருவக்கரை என்று பெயர் பெற்றன. அவை மூன்றும் கி. பி 7-ஆம் நூற்ருண்டில் (600–650) வாழ்ந்த திரு நாவுக்கரசரால் பாடப்பட்டவை; எனவே இற்றைக்கு 1300 ஆண்டுகள் பழைமை உடையவை. அதனுல் அக்கோயில்களில் இந்நிலப் பகுதியை ஆண்ட அரச மரபினர் பலருடைய காலத்துக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

**அரசிலி** என்னும் ஊர்க்கோவிலில் 5 கல்வெட்டுக்களும், **இரும்பையி**லுள்ள மாகாளம் என்னும் கோவலில் 7 கல்வெட்டுக்களும், **வக்கரை** என்னும் ஊரிலுள்ள கோவிலில் 43 கல்வெட்டுக்களும் கல்வெட்டுத் துறையினரால் படியெடுக்கப்பட்டன. முதல் இரண்டு இடங்களிலுள்ள கல்வெட்டுக்கள் 1902–ஆம் ஆண்டில் படியெடுக்கப் பட்டன. மூன்ரும் இடத்துக் கல்வெட்டுக்கள் 1904-ஆம் ஆண்டு படியெடுக்கப் பட்டன. இரும்பையில் மூன்று கல்வெட்டுக்கள் 1937-இல் படி எடுக்கப் பட்டன. 1904, 1937 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் படி எடுக்கப்பட்ட கல்வெட்டுக்களின் சுருக்கம் மட்டுமே அச்சிடப்பட்டுள்ளன; கல்வெட்டுக்கள் முழுமையும் அப்படியே அச்சிடப்படவில்லை.* ஆயினும் இம் மூன்று கோவில் கல்வெட்டுக்களிலிருந்தும் நாம் அறியத்தகும் செய்திகளைக் கீழே காண்போம்:

இக் கோவில்கள் உள்ள தொண்டை நாட்டுப்பகுதி ஏறத்தாழக் கி. பி. 300 முதல் 900 வரையில் பல்லவர் ஆட்சியில் இருந்தது; பின்பு கி. பி. 1250 வரையிலும் சோழராட்சியில் இருந்தது; பின்பு சிறிது காலம் பாண்டியராட்சியில் இருந்தது; பின்னர், விசய நகர வேந்தர் காலத்துக் கல்வெட்டுக்கள் இக்கோயில்களில் இடம் பெற்றுள்ளன என்பதை அறிவது நல்லது.

திருவக்கரைக் கோவில், முதல் இராசராசன் காலம் முதல் கிருஷ்ணதேவராயர் காலம்வரை-ஏறத்தாழ 500 ஆண்டுகள் சிறப்புற்றிருந்தது. அரசிலியில் உள்ள கோவில் கி. பி 11, 12 ஆகிய இரண்டு நூற்ருண்டுகளிலும் சிறப்புற்றிருந்தது. இரும்பை மாகாளம் 12, 13, 14 ஆகிய மூன்று நூற்ருண்டுகளிலும் நல்ல நிலையில் இருந்தது. இது அவ்வக் கோவில் கல்வெட்டுக்களால் அறியப்படும் செய்தியாகும்.

## (1) திருவக்கரை

**அரசர்கள்**

| | |
|---|---|
| இராசராசன் I | கி. பி. 985-1014 |
| இராசேந்திரன் I | கி. பி. 1012-1044 |
| குலோத்துங்கன் I | கி. பி. 1070-1120 |
| விக்கிரம சோழன் | கி. பி. 1118-1135 |
| இரண்டாம் இராசாதிராசன் II | கி. பி. 1163-1179 |
| குலோத்துங்கன் III | கி. பி. 1178-1218 |
| கோப்பெருஞ்சிங்கன் | கி. பி. 1216-1250 |
| விக்கிரமபாண்டியன் | கி. பி. 1283- |
| நரசிங்க தேவர் | கி. பி. 1485-1493 |
| கிருஷ்ணதேவராயர் | கி. பி. 1509-1530 |

**கோவில் செய்திகள்**

முதல் இராசராசன் காலத்தில் அவன் பாட்டியாரான செம்பியன் மாதேவியார் வக்கரைக் கோவிலுக்குப் பொன் வெள்ளிப் பாத்திரங்கள் முதலியவற்றை

---

* அரசிலி -- Annual Report on Epigraphy, 194 to 198 of 1902; S. I. I. VII. 821-825.

இரும்பை - A. R. E. 190 to 193 of 1902 and 176 to 178 of 1937.

திருவக்கரை – A. R. E. 166 to 208 of 1904.

வழங்கினார். **விழுப் பேரரையர்**[2] ஐயக் குட்டி அடிகள் என்பவர் தாயார் புகழ்த் துணை அடிகள் என்ற அம்மையார் கோவிலுக்கு நெல்லை வழங்கினார். அதிராசேந்திரன் காலத்தில் (கி.பி. 1069) முன்பு கோச் சோழனால் கட்டப்பட்ட செங்கல் விமானம் கருங்கல் கொண்டு புதுப்பிக்கப் பட்டது. முதற் குலோத்துங்கன் தன் நாட்டு யாத்திரையின்போது காஞ்சியில் ஒரு சோலையில் வந்து தங்கினான் என்பதை ஒரு கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. இரண்டாம் இராசாதிராசன் காலத்தில் கோவில் கோபுரம் கட்டப்பட்டது. மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் அவனது படைத் தலைவனான பாண்டிய நாடு வென்ற அம்மையப்பன் கண்டர் சூரியன் சம்பூவராயன் என்பவன் ஆயிரக்கால் மண்டபம் கட்டினான். விக்கிரம பாண்டியன் மனைவி கோவிலில் ஒரு மண்டபத்தைக் கட்டினாள். இரண்டாம் தேவராயர் காலத்தில் கி.பி. (1430)-ல் காங்கேயன் என்பவன் ஒரு மண்டபத்தைக் கட்டினான். நரசிங்கராயர் படைத்தலைவரான நரசா நாய்க்கர் (கி.பி. 1493—1506) என்பவர் சில வரிகளைக் கோவிலுக்குக் கட்டினார்.

கோவிலில் விளக்கெரிக்கவும் விழாக்கள் நிகழ்த்தவும் பசுக்கள், ஆடுகள், பொன், நிலம், நெல் முதலியவை தானமாக விடப் பட்டன. நாடாண்ட அரசனது நன்மைக் காக அவன் பெயரால் 'சந்தி' என்ற பெயரையும் சேர்த்து ஒரு விழா நடத்துதல், வழக்கம். அது விக்கிரம பாண்டியன் சந்தி, சுந்தர பாண்டியன் சந்தி எனப் பெயர் பெற்றது. அதன் செலவுக்கு நிலம் அல்லது பொன் ஒதுக்கப்பட்டது.

மாம்பாக்கத்தில் நடைபெற்ற போரில் இறந்த வீரனுக்காகக் கோவிலில் ஒரு நந்தா விளக்கு எரிக்க 32 பசுக்கள் விடப் பட்டன.

## (2) இரும்பை

### அரசர்கள்

இங்குள்ள கல்வெட்டுக்களில் கீழ்வரும் அரசர் பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

(1) குலோத்துங்கன் III– கி.பி. 1178 – 1218

(2) சடையவர்மன் சுந்தர பாண்டியன் II— கி.பி. 1276—1293

(3) மாறவர்மன் விக்கிரமபாண்டியன் (இவன் மேலே கூறப்பெற்றவனுடைய சார்பாளன்)

(4) இராச நாராயண சம்பூவராயர்—கி.பி. 14-ஆம் நூற்றாண்டு.

### கோவில் செய்திகள்

**இரும்பை** என்பது ஊரின் பெயர். **மாகாளம்**[3] என்பது கோவிலின் பெயர். மாகாளம் என்பது 'மகாகாளம்' என்பதன் மரூஉ. அங்குள்ள சிவபிரானின் பெயர் திருமாகாளமுடையார், திரு இரும்பை உடையார் என்பன. இரும்பை என்பது, 'ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து மாத்தூர் நாட்டுத் திரு இரும்பை' எனவும், 'ஒழுகரை என்ற குலோத்துங்கச் சோழ நல்லூர்ப் **பிடாகை**[4] யான திரு இரும்பை' என்றும் அக்காலத்தில் பெயர் பெற்றது. மாகாளம் கோவிலில் கோவில் ஆட்சியாளர், கோவில் கணக்கன், குருக்கள் ஆகியோர் இருந்தனர். கோவில் **பண்டாரம்** (பொக்கிஷ சாலை) இருந்தது. சூளும் பேட்டினை அடுத்த வில்லிப் பாக்கத்தில் **உப்பளங்கள்** இருந்தன. அவற்றுள் சில அளங்கள் இரும்பை

---

(1) தமிழகம் பாண்டியர் ஆட்சிக்குட்பட்ட போதுதான் பாண்டிய மன்னரின் சார்பாளராக (பிரதி நிதிகளாக) வீர பாண்டியன், விக்கிரம பாண்டியன் என்பவர் தென் ஆர்க்காடு முதலிய சில மாவட்டங்களை ஆண்டு வந்தனர். அங்ஙனம் ஆண்ட விக்கிரம பாண்டியன் பெயரால் உண்டானதே விக்கிரம பாண்டியபுரம் என்ற ஊர். அப்பெயர் இன்று சிதைந்து விக்கிரவாண்டி என வழங்கப்படுகின்றது. இவ்வாறே வீர பாண்டியபுரம் என்பது வீரபாண்டி என மருவி வழங்கப் படுகிறது. இப் பெயர்கள் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் பாண்டியர் ஆட்சி இருந்ததை வெளிப்படுத்துவனவாகும்.

[2] சோழ பாண்டியர் ஆட்சியில் அரசாங்க உயர் அலுவலர் அரையன், பேரரையன், விழுப்பரையன், விழுப்பேரரையன் முதலிய பட்டங்களைப் பெற்றனர். விழுப்பரையன் என்ற அரசாங்க அதிகாரியின் பெயரால் அமைந்த புரமே விழுப் பரையன் புரம் என்பது. அது காலப் போக்கில் விழுப்புரம் என மருவி வழங்கி வருகிறது என்பது இங்கு அறியத்தகும்.

கோவிலுக்கு விடப்பட்டன, வேறு சில திருக்கழுக் குன்றம் கோவிலுக்கு விடப்பட்டன. இக் கோவில் கல்வெட்டுக்களில் அக்கால வரிகளின் பெயர்கள் பல குறிக்கப்பட்டுள்ளன. பலவற்றுக்கு நெல்லாகவே வரி வசூலிக்கப் பட்டது. அவை 'நெல் ஆயங்கள்' எனப் பெயர் பெற்றன. **கடமை, இறை, வரி, தேவை, ஆயம்** என்பன வரிக்கு வழங்கிய பெயர்களாகும். பொன்வரி, நல்லெருது, நற்கிடா, கார்த்திகைப் பச்சை, நாட்டு வரி, மகண்மை, வாசல், முகம் பார்வை, ஊசி வாசி, வழி நடைக்கு இடும் பணம், பொது மக்கள் பொற்கடமை, விட்டாள் வட்டம், செக்குக் கடமை, குசவர் தேவை, பொன் வரி கார்த்திகைக்கு இடும்பணம் என்பன பலவகை வரிகளின் பெயர்களாகக் காணப்படுகின்றன.

## (3) அரசிலி

**கோவிற் செய்திகள் :**

முதற் குலோத்துங்க சோழன், அவன் மகனான உத்தம சோழன், அவன் மகனான இரண்டாம் குலோத்துங்கன் ஆகிய மூவர் காலத்துக் கல்வெட்டுக்களே இக்கோவிலிலிருந்து வெளியாகியுள்ளன. இக் கோவில் கடவுளின் பெயர் திரு அரசிலி ஆளுடையார் ஆலால சுந்தரர் என்பது. அரசிலி, '**ஐயங்கொண்ட சோழ மண்டலத்து**[5] ஒய்மாநாட்டுப் பெருவெம்பூர் நாட்டுத் தேவதானமான திரு அரசிலி' எனப் பெயர் பெற்றது. தேவதானம் என்பது கோவிலுக்கு விடப்பட்ட சிற்றூராகும். அரசிலி என்னும் சிற்றூர் அவ்வூர்க் கோவிலுக்குத் தானமாக விடப்பட்டது என்பது இதன் பொருள்.

அக்கோவில் கல்வெட்டு ஒன்றில், **இரட்டகுல காலபுரம்** என்பது ஓர் ஊரின் பெயராகிறது. இரட்டர்—பம்பாய் மாகாணத்தை ஆண்டுவந்த இராஷ்டிர கூடர். அவர்கள் குலத்திற்கு எமன் என்று ஒரு சோழன் தன்னைக் கூறிக் கொண்டான் போலும்! அதனால் அவன் பெயரால் இவ்வூர் அமைந்தது போலும்! இப்பெயரே இப்பொது இரட்டணை என்று வழங்குகிறது என்பது இங்கு அறியத் தகும்

**ஒய்மாநாடு** என்பது திண்டிவனத்தைத் தலைநகராகக் கொண்ட ஒரு சிறு நிலப் பகுதியாகும். அது கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் சிறப்புற்றிருந்தது என்பது சிறுபாணாற்றுப்படையாலும், புறநானூற்றுப் பாடல்களாலும் நன்கு அறியலாம். அந் நாடு மதுராந்தகம் வட்டத்தின் தென் கோடிப் பகுதியையும் இன்றுள்ள விழுப்புரம் வட்டத்தின் வடகிழக்குப் பகுதியையும் இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட திண்டிவனப் பகுதியையும் தன்னகத்தே கொண்டதாகும். அந்த நாடு (1) திருநல்லூர் நாடு, (2) பட்டின நாடு, (3) மணி நாடு, (4) பேராவூர் நாடு, (5) சேவூர் நாடு, (6) சிட்கை நாடு, (7) பெருவெம்பூர் நாடு, என ஏழு உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவற்றுள் அரசிலி என்பது பெருவெம்பூர் நாட்டைச் சேர்ந்தது.

கோவிலில் காலை, மாலை நேரங்களில் எரிக்கப்பட்ட விளக்கு **சந்தி விளக்கு** எனப்பட்டது. கருவறையில் கடவுளுக்கு முன்பு எப்பொழுதும் எரிந்து கொண்டிருந்த விளக்கு **நந்தா விளக்கு** எனப் பெயர் பெற்றது. ஒரு சந்தி விளக்கு எரிப்பதற்கு 12 ஆடுகள் அல்லது 4 பசுக்கள் கோவிலுக்கு வழங்கப்பட்டன. ஒரு நந்தா விளக்கு எரிக்க 90 அல்லது 96 ஆடுகள் அல்லது 30 அல்லது 32 பசுக்கள்

---

[3] மா—பெரிய, காளம்—விஷம்; மாகாளம்—பெரிய விஷம். அதனைத் தொண்டையில் அடக்கியவர் சிவபிரான் அதனால் காளகண்டர் எனவும் நீலகண்டர் எனவும் பெயர் பெற்றார். 'மகாகாளம்' என்பது 'மாகாளம்' என மருவி வழங்குகிறது.

[4] பிடாகை—கிராமத்தை அடுத்த குக்கிராமம் (hamlet).

[5] ஏறத்தாழச் செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென்னாற்காடு மாவட்டங்கள் சேர்ந்த நிலப்பகுதி தொண்டை நாடு எனப்பட்டது. தொண்டை நாட்டை வென்ற சோழன் முதலாம் இராசராசன் தன்னை 'ஜெயங்கொண்டான்' என்று அழைத்துக்கொண்டான்; அதனால் தொண்டை நாட்டுக்கு 'ஜெயங்கொண்ட சோழமண்டலம்' எனப் பெயரிட்டான்.

கோவிலுக்கு விடப்பட்டன. இதனால் 3 ஆடுகள் ஒரு பசுவுக்குச் சமம் என அக் காலத்தார் கருதினர் என்பது தெரிகிறது. இங்ஙனம் கோவிலுக்கு விடப்பட்ட ஆடுகளும் பசுக்களும் "சாவா மூவா" ஆடுகள் என்றும், பசுக்கள் என்றும் அழைக்கப்பட்டன. இதன் பொருள் யாது? அக்காலத்தில் பசுக்களை வழங்கினவர் அவற்றின் வளர்ச்சி கருதி ஓர் எருதையும் வழங்கினர். எனவே, பசுக்களின் மரபு அழியாமலும் முதுமை அடையாமலும் வளர்ந்து கொண்டே வந்தது, அவ்வாறே ஆடுகளின் மரபும் வளர்ந்தது. அதனாற்றான் ஆடுகளும் பசுக்களும் "சாவா - மூவா" எனப்பட்டன.

## மக்கட் பெயர்கள்

இம் மூன்று கோவில் கல்வெட்டுக்களிலும் காணப்படும் அக்கால மக்களின் பெயர்களைக் கீழே காண்க. நல்லூழான் பச்சை செல்வன், சேமலன் செங்காட்டு மோடக்கன் ஆன புறையூர் நாட்டுப் பெரியரையன், சாத்தன் சேயானான சோழப் பெரியரையன், சயங்கொண்டான்[6] குன்றனான திருவெண்காட்டுப் பெரியரையன், செங்கேணி அம்மையப்பன் சேந்தன் சேதிராயன், மன்றுடி செட்டன் திருவையாறுடையானான சித்திரமேழிக்[7] கோன், (இரட்டகுலகால புரத்து வியாபாரி) புளியங்குடையான், பள்ளிகொண்டான் அழகிய மணவாளப் பெருமாள், ஐயக்குட்டி அடிகள், புகழ்த்துணை அடிகள்.

---

[6] முதற் குலோத்துங்கன் செய்த கலிங்கப் போரைப் பாராட்டிப் பாடியவர் சயங்கொண்டார் என்ற புலவராவர். அப்புலவர் பெயர், இரண்டாம் குலோத்துங்கன் காலத்தில் அரசியல் அதிகாரி ஒருவருக்கு இயற்பெயராய் அமைந்திருந்தது என்பது இங்கு அறியத்தகும்.

[7] மேழி-கலப்பை ; சித்திரம்-ஓவியம் ; சித்திர மேழி-கலப்பை ஓவியமாக வரையப்பட்ட கொடி அல்லது கலப்பைக் குறி. பூமிபுத்திரர் என்ற நத்தமக்கள் கூட்டத்தினர் "சித்திர மேழிப் பெரிய நாட்டார்" எனப்பட்டனர். கலப்பைக் கொடியுடைய உழவர் சங்கத்தார் சித்திரமேழிப் பெரிய நாட்டார் எனப்பட்டனர் என்பது இங்கு அறியத்தகும். சித்திரமேழி என்பது, காலப்போக்கில் மக்கள் பெயராகவும் வழங்கப்பட்டது போலும்!

—Annual Report on Epigraphy, 1936-37, p-77 *

---

## ஆணையர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| 6-12-64 | தாம்பரம் : | ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் திருப்பணித் தொடக்க விழா. |
| 9-12-64 | திருவண்ணாமலை : | ஸ்ரீ அருணாசலலேசுவரர் கோயில் கடைகள் திறப்பு விழா. |
| 11-12-64 | திருமயிலை : | கபாலீசுவரர் கோயில், வாயிலார் நாயனார் நகர் அடிக்கல் நாட்டுவிழா |
| 15-12-64 | திருவாரூர் : | தியாகராஜ சுவாமி கோயில், தொல் பொருள் துறைச் சொற்பொழிவில் தலைமை. |
| 17-12-64 | திருநாங்கூர் : | ஸ்ரீ புருஷோத்தமப் பெருமாள், நரநாராயணப் பெருமாள் கோயில்கள், திருப்பணிக் குழு அமைப்பு. |
| ,, | திருவெண்காடு : | திருப்பாவை திருவெம்பாவை |
| 18-12-64 | காஞ்சிபுரம் : | திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்களுக்குப் பாராட்டு விழா. |
| 21-12-64 | சமயபுரம் : | ஸ்ரீ மாரியம்மன் கோயில் யாத்ரிகர்கள் விடுதிக் கால்கோள் விழா. |
| ,, | திருவானைக்கா : | ஸ்ரீ ஜம்புலிங்கேசுவரர் கோயில் திருப்பணிக்குத் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் அவர்களின் தொடர் சொற்பொழிவுத் துவக்க விழா நிகழ்ச்சி. |
| 22-12-64 | சென்னை : | பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மன்றத்தில், "சேக்கிழார் பிள்ளைத் தமிழ்" விரிவுரை நூல் வெளியீட்டு விழா. |

---

## பாவை மாநாடுகள்

| | |
|---|---|
| ஸ்ரீ வில்லிபுத்தூர் : | ஸ்ரீ நாச்சியார் தேவஸ்தானம் |
| சென்னை : | அருணாசலேசுவரர் கோயில், கன்னிகா பரமேசுவரி கோயில்கள் |
| கோடம்பாக்கம் : | வடபழனி யாண்டவர் கோயில் |

# தஞ்சாக்கூர்

**தஞ்சாக்கூர்** என்பது பாண்டிய நாட்டில் உள்ள ஒரு சிறந்த சிவத்தலம். இது மரூஉவாகத் **தஞ்சை** என்றும் வழங்கும். சோழ நாட்டில் உள்ளதும், முதலாம் இராசராச சோழனுல் (கி. பி.985-1014) இராச ராசேச்சுரம் என்னும் பெருங் கோயில் எடுக்கப் பெற்றதுமான **தஞ்சாவூர்** (தஞ்சை) என்பது, இதனின் வேருனது.

தஞ்சாக்கூர் என்னும் பாண்டிய நாட்டுச் சிவத்தலம், மதுரையில் இருந்து இராமேச்சுரம் போகும் வழியில், **திருப் பூவணம்** என்னும் சிறந்த புகழ்பெற்ற சிவத்தலத்திற்கு அடுத்துள்ள **திருப்பாசேத்தி** இருப்புப்பாதை நிலையத்திற்குத் தெற்கே மூன்று கல் தொலேவில் இருக்கின்றது. திருநெல்வேலி மாவட்டம், தென்காசிக் கோட்டத்தினைச் சேர்ந்த தாக, இத்தலம் இப்போது விளங்கி வருகின்றது.

தமிழ்ப் புலமைத் துறையிற் சிறந்து விளங்கவிரும்பி முறையாகத் தமிழ் பயிலுவோர் அனேவரும், கற்கும் நூல்களுள் **நம்பியகப்பொருள்** என்னும் இலக்கணமும் ஒன்ருகும். அதனை இயற்றியவர் **நாற்கவிராச நம்பி** என்பவர். அந்நூலினை முற்றும் தழுவி, அந்நூலின் துறைகளுக்கு உரிய எடுத்துக் காட்டாக விளங்கும் முறையிற் சிறப்புற அமைந்து, அந்நூலின் உரையின்கண் முதலில் இருந்து முடிவுகாறும் மேற்கோளாகப் பயின்று வருவது **தஞ்சைவாணன் கோவை** என்னும் தலேசிறந்த நூல் ஆகும். மாணிக்க வாசகர் இயற்றிய **திருச்சிற்றம்பலக் கோவையார்க்கு** அடுத்தபடி, பெரிதும் சிறப்புடையன வாகத் தமிழறிஞர்களால் மதிக்கப் பெறும் நூல்களுள் **தஞ்சைவாணன் கோவையும்** ஒன்று எனலாம். இக் கோவை நூலானது, தஞ்சாக்கூர் என்னும் இத்தலத்தில் வாழ்ந்து விளங்கிய **சந்திரவாணன்** (கி. பி. 1268-1311) என்னும் தலேவன் ஒருவனேப் பற்றியதே யாகும்.

சந்திரவாணன் என்பவன், தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் ஆங்காங்கே சிறந்து விளங்கிய பற்பல சிற்றரசர் மரபினருள் ஒருவராகிய **மாவலி வாணதிராயர்**களின் மரபைச் சேர்ந்தவன். இவர்கள் கி. பி. 8-ஆம் நூற்ருண்டு முதலே வடநாட்டிலும், தொண்டை நாட்டிலும் சிறந்து விளங்கிய அரச பரம்பரையினர் ஆவர். இவர்கள் மிகச் சிறந்த வீரர்களாகத் திகழ்ந்திருந்தனர். சந்திரவாணன், 'கோமாறவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி' என்னும் பட்டப் பெயர் கொண்ட **குலசேகரபாண்டியன்** காலத்தில், அவனுக்கு அமைச்சனுகவும் படைத்தலேவனுகவும் விளங்கியவன். தமிழ்மொழியில் மிகவும் அன்பும் ஆர்வமும் உடையவனுக, இவன் தமிழ்ப் புலவர்களேப் பெரிதும் ஆதரித்து வந்தான். 'தஞ்சைவாணன் கோவை' இயற்றிய **பொய்யாமொழிப் புலவர்,** இவனே "வழுதியர் நாமம் வளர்க்கின்ற வாணன்", வழுதி கண் போல்பவன்" "வேளாண் மரபு விளக்கிய வாணன்", "வெங்கோல் மழைபொழி வானவர் போர் வென்று மீனவர்தம் செங்கோல் முறைமை செலுத்திய வாணன்" என்றெல்லாம் பலவாறு புகழ்ந்து பாடியிருத்தல் காணலாம்.

பாண்டியன் ஆகிய மாறனின் மதுரையைப் போலவே, அவனுடைய அமைச்சனும் படைத்தலேவனுமாகிய மாவலி வாணதிராயன் வதிந்துவந்த தலேநகரும், எல்லாச் சிறப்புக்களும் பெற்றுத் திகழ்ந்தமையினுல், அவனுடைய தலேநகரை மக்கள் **"வாணன் மதுரை"** என்று குறிப்பிட்டுப் போற்றுவாராயினர். அதுவே இந்நாளிற் சிதைந்து திரிந்து மருவி, **மாணுமதுரை**

என வழங்கி வருகின்றது. எனவே, தமிழுணர்வும் அன்பும் மிக்க தக்கோர் அனைவருக்கும் **தஞ்சாக்கூர்** என்பது, தலை சிறந்ததும் இலக்கியப் புகழ் சான்றதும் ஆகிய ஒரு பழம்பெரும் பதியாகும் என்பதில் ஐயமில்லை.

உஞ்சேனை மாகாளம் ஊறல் ஒத்தூர்
உருத்திர கோடி மறைக்காட் டுள்ளும்
மஞ்சார் பொதியின்மலை தஞ்சை வழுவூர்
வீரட்டம் மாதானம் கேதாரத்தும் ....

எனவரும் **திருப்பதிக்கோவைப்** பாடலில், **திருநாவுக்கரசர்** "தஞ்சை" எனக் குறிப்பிட்டிருப்பது. இத் தஞ்சாக்கூர்த் தலமேயாகும் எனவும் சிலர் கருதுவர். அஃதுண்மையாயின், இதனை ஒரு தேவார **வைப்புத்தலம்** எனவும் நாம் ஏற்றுக் கொள்ளுதல் கூடும்.

இத்தலம் முற்காலத்தில் தில்லைவனம், முல்லைவனம், கடம்பவனம், சுவேதவனம், வேதவனம் முதலியன போல, ஒருபெரும் **வில்வவனம்** எனத் திகழ்ந்தது. அதனால் இதனை 'ஆதிவில்வவன க்ஷேத்திரம்' எனவும் வழங்குவர்.

தேவர்கள் முன்னொரு காலத்தில் இங்கு வந்து வில்வவனத்திற் சோதி வடிவமாக விளங்கும் சிவபிரானைக் கண்டு வழிபட்டு மகிழ்ந்தனர். அதற்குரிய அடையாளமாகத் தேவர்களால் இங்குப் **பரஞ்சோதி லிங்கம்** பிரதிட்டிக்கப் பெற்றது. இத்தலத்தில் **பராசத்தி இலட்சுமி சரசுவதி இந்திராணி இராமலட்சுமணர் கௌதமர் அகத்தியர்** முதலியவர்கள் பலரும் வந்து, சிவபெருமானை முறையே வழிபட்டுப் பேறுகள் பலவும் பெற்றனர் எனத் தலபுராணம் சாற்றுகின்றது.

சோழ அரசகுமாரன் ஆகிய **தஞ்சன்** என்பவன், பாண்டிய அரசகுமாரன் ஆகிய **மாறன்** என்பவனுடன் நட்புரிமை பூண்டு பழகி, இங்குள்ள கோயிலைக் கட்டி, ஊரையும் உண்டாக்கியதனால், அவனுடைய பெயரால் **தஞ்சன்+ஆக்கு+ஊர்** என்னும் பொருளில் "தஞ்சாக்கூர்" என்னும் பெயர் அமைந்தது. **மாறன்** என்பவன் அமைத்த **மாறையன் பதி** இப்போது ஒரு சிறு கிராமமாக உள்ளது என்பர். 'மாறைநாடு' எனவும் நூல்களுள் வழங்கப் பெறுவதனால், இது ஒரு சில காலம் மிகவும் புகழ்பெற்றுப் பல ஊர்களைத் தன்னகத்தே கொண்ட ஒரு நாட்டின் பிரிவுக்குத் தலைநகரமாக விளங்கிய செய்தி புலனாகும்.

இங்குள்ள விநாயகர் **வினைதீர்த்த விநாயகர்**; இறைவன் **பரஞ்சோதி ஈசுவரர்**; அம்பிகை **ஞானம்பிகை.** இத்தலத்தின் மேற்புறத்தில் காவேரி ஐயனாரும், கிழ்ப்புறத்தில் வீரமாகாளியும், தென்புறத்தில் மகாகாளியும், வடபுறத்தில் அழகிய நாயகி என்னும் காளியும், காவல் தெய்வங்களாக எழுந்தருளியுள்ளனர்.

இத்தலம் சென்ற சில நூற்றாண்டுகளில் பொலிவிழந்து குன்றிக் கிடக்க நேர்ந்தது. பாண்டிய நாட்டில் நேர்ந்த பல உட்பூசல்களும் குழப்பங்களும் போர்களும் இதற்குக் காரணமாதல் வேண்டும். எனினும் இத்தலமானது அண்மைக் காலத்தில் விளங்கியிருந்த சூட்டுக்கோல் இராமலிங்கசுவாமிகள், செல்லப்பசுவாமிகள், கட்டிக்குளம் மாயாண்டிச் சுவாமிகள், பட்டி சமயமுத்துத்தேவர், அவர்தம் தமையனார் குமரத்தேவர் முதலிய பெருமக்களின் அரும்பெரும் முயற்சிகளாலும் தொண்டுகளாலும், இந்தத் தலத்துத் திருக்கோயில், திருப்பணிகள் பலசெய்யப்பெற்றுச் சிறந்து விளங்கத் தொடங்கியது.

சென்னை, சூளை-வேப்பேரி **ஸ்ரீலஸ்ரீ சிவகுமார மௌனகுரு சுவாமிகள்** அவர்கள், அன்பர்கள் பலரின் நன்கொடை யுதவியினாலும், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி **ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள்** அவர்களின் அருளாசியினாலும், சென்னை அரசாங்க அறநிலைய ஆட்சித்துறையின் நிதியுதவிகளாலும், 1955-ஆம் ஆண்டு (மன்மத, வைகாசி) இந்தத் தலத்தின் திருப்பணியைத் தொடங்கி, 1961-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30-ஆம் தேதி யன்று கும்பாபிஷேகமும் சிறப்புற நடைபெறச் செய்தார்கள்.

இச் சிறந்த சிவத்தலத்தினை அன்பர்கள் யாவரும் சென்று கண்டு, இறைவனை முறையே வழிபட்டு மகிழ்ந்து நலம் பெற்று உய்வார்களாக!

—ஆசிரியர்.




திருச்செந்தூர்ச் சுப்பிரமணிய சுவாமி கோயிலைச் சேர்ந்த சிவக்கொழுந்தீசுவரர் கோயில் திருப்பணி, 26-11-'64 அன்று, நமது அறநிலைய ஆணையர் அவர்களால் தொடங்கி வைக்கப் பெற்றது.



திருச்செந்தூர்ச் சுப்பிரமணிய சுவாமி கோயிலைச் சேர்ந்த ஊழியர்களின் இல்லங்கள் முதற் பகுதியினை, அறநிலைய ஆணையர் அவர்கள் திறந்து வைத்தார்கள் (26-11-'64).

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept, Madras 34 Printed at Manorama Press, 39, M. J. B. St, Madras-5.



திருச்செந்தூர்க் கோயிலின் சிறப்பொளிர் தோற்றம்